Registered as a News Paper in Sri Lanka
PICTURE PALACE
359, MAIN STREET,
RASSARA

பக்கம் 20
பெப். 20-26,1994
ரூபா 8/50

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 39



ஜனாதிபதியின் உரைகளும்
உள்ளூராட்சிசபை தேர்தல்களும்
எக்ஸ்ரே ரிப்போர்ட்

மகாபாரதம்
கதை-வசனம்

இரட்டையரை
மணந்த
இரட்டையர்

கொலை
விழும்
ரசிகனின்
நேரம்

தங்க நகைப் பரிசுத் திட்டம்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பிரச்சனைகளா? சோர்வு வேண்டாம்

பிரச்சனைகள் இல்லாத மனிதர்கள் இல்லை என்றே கூறவேண்டும். குடும்பத்தில் பிரச்சனைகள், வேலை ஸ்தலங்களில் பிரச்சனைகள். எதை? எங்கு? எப்படி செய்தாலும் பிரச்சனைகள் எம்மை தொடர்ந்து பீடித்துக்கொண்டே இருக்கின்றன. வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள் சோர்வினை தோற்றுவிக்கின்றன.

பிரச்சனைகளைத் தோற்றுவிப்பது யார்? எம்மை சுற்றியுள்ள மனிதர்கள்தான். மற்றவனைவிட தான் உயர்வடைய வேண்டும், மற்றவனைவிட தனக்கு புகழ் வேண்டும். ஒருவனது பெயரும் புகழும் பெருக இன்னொருவன் வேதனை, துக்கம் இவ்வாறானவற்றினால் அல்லலுறும் நிலை ஏற்படுகிறது.

இத்தகைய பிரச்சனைகள் தோன்றும் போது என்ன செய்ய வேண்டும்? பிரச்சனைகள், துன்பங்கள், தோல்விகள் ஏற்படும் போது அதையே நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்தால், தன் வாலைப் பிடிக்க முயலும் பூனையைப் போல் ஒரே இடத்தில் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்க வேண்டும்.

பிலிப்பியர் 4:6ல் கூறப்பட்டுள்ளது போல் "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல் உங்கள் விண்ணப்பங்கள் எல்லாவற்றையும் ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்." எமது துன்பங்கள், பிரச்சனைகள், தேவைகளை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினால் தேவனிடம் கூறினால் தேவன் தீர்த்து வைப்பார். மகிழ்வைத் தருவார். பூனை முன்னே சென்றால் வால் பின்னே செல்வது போல் தேவனை நோக்கிச் சென்றால் நல்வாழ்வு பின்னால் வந்து கொண்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே அனைத்தையும் தேவனிடம் கூறி அவர் வழி சென்று வேதனைகள், துன்பங்கள், மனச்சோர்வு நீங்கி நல் வாழ்வை அடைவோமாக.

ஜே.புளோரன்ஸ், கெங்கல்ல.

# ஆன்மீகம்



## நபிகளார் நவின்றுள்ள பொன்மொழிகள்

- எவரிடமும் உங்கள் தேவைகளை மறைமுகமாகவே கூறுங்கள். ஏனெனில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பொறாமையாளன் இருந்துகொண்டேயிருக்கிறான்.
- வமிசப் பெருமையால் நீங்கள் ஒருக்காலும் உயரவே முடியாது. சீரிய செயலாலும், நற்குணத்தாலும் நீங்கள் உயர்வை நோக்கிச் செல்ல முடியும்.
- மனிதனது மனோ இச்சையையும், பேராசையையும் மண்ணறையின் மண்ணைத்தவிர எந்த வஸ்துக்களாலும் நிரப்ப முடியவே முடியாது.
- அறிவு,ஞானம், உண்மை விசுவாசியின் விழுப்பொருளாகும். அவன் அப்பொருளை எங்கு காண்பினும் மிக அன்புடன் எடுத்துக்கொள்வான்.
- வாழ்க்கையில் வருவாய்க்கேற்ற செலவையும், நடுத்தரத்தையும் கையாள்பவன் என்றும் ஏழ்மையில் சிக்கித் தவிக்கமாட்டான்.
- எவரையும் ஏளனம் செய்து எள்ளி நகையாடாதே! அல்லாஹ் நாடினால் நீயும் இவ்வித ஏளனநிலைக்கு ஆளாகநேரிடும் என்பதை உணர்ந்துகொள்.
- மக்களோடு மாண்புடன் கலந்துறவாடுவது ஒருவகை தர்மமாகும்.
- ஐக்கியப்பட்ட குழுவின்மீதே அல்லாஹ்வின் உதவியிருக்கிறது. எனவே நீங்கள் ஒற்றுமையுடன் வாழ்க்கை நடத்துங்கள்.

செல்வி.ஸாஹிரா ரஸீக்-களுத்துறை(தெற்கு)

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
கிழக்கிலும்-வவுனியாவிலும்
குட்டித் தேர்தல் திருவிழா
சாதி-மத-பிரதேச பேதங்களோடு
வெகு விமரிசையாக
நடந்துகொண்டிருப்பதாக
செய்திகள் வந்து வருத்தம் தெரிவிக்கின்றன.

அரசியல் அரங்கிலே
வெறுமை வெளிப்படையாகத் தெரிகிறது.

மாலுமி இல்லாத கப்பல் போல
தமிழ்பேசும் மக்களது
தலைவிதி தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

தகுந்த தளபதி இல்லாத படை
தன் இலக்கை அடைய முடியாது.
தக்க தலைமைத்துவம் இல்லாத மக்கள்
தங்கள் பலத்தை ஒன்றுதிரட்ட முடியாது.
உரத்த நியாயங்களை நிலைப்படுத்த இயலாது.

பல கட்சிகள்-பல பெயர்கள்
ஒற்றுமையின்மைகள்.
உள் இயக்க மோதல்கள்
ஒருவரை ஒருவர் வெட்டி ஓடும்
உடன்பாடற்ற போக்குகள்.
வரட்டுத்தனமான பிடிவாதங்கள்
வறுமையாகிப்போன அரசியல் பண்புகள்
அனைத்தும் ஒட்டு மொத்தமாய் நின்று
எதிர்காலம் பற்றிய வினாக்குறிகளை
வியாபிக்கச் செய்கின்றன.

கிழக்கிலும்-வவுனியாவிலும்
தேர்தலில் குதித்துள்ள பலரது
சாதகங்களை புரட்டிப்பார்த்தால்
அவர்கள்
தங்களுக்கும் உண்மையாக
இருக்கமாட்டார்கள்.
தமிழர்களுக்கும் உண்மையாக
இருக்கமாட்டார்கள்.
தாம் சார்ந்த அணிகளுக்கும்
உண்மையாக உழைக்கமாட்டார்கள்
என்பது-
உள்ளங்கை நெல்லிக்கனியாய் தெரியும்.

இத்தனைகால இரத்தம் சிந்தல்கள்,
இணையில்லாத மனித உயிர் இழப்புக்கள்
இத்தனைக்கும் அர்த்தமில்லாமல்
தவறுகளே தலை உயர்த்துகின்றன.

மக்கள் நலன் குறித்த பொறுப்புணர்வுகள்
மங்கி மறைந்துவிட
நானும் தலைவன்-நாங்களும் இயக்கம்
என்பதை மட்டுமே
நிலை நிறுத்தினால் போதும் என்ற
எண்ணத்தின் அடிப்படையில்தான்
சகல பிரச்சனைகளும்
அணுகப்படுகின்றனவோ என்ற
சந்தேகம் வருகிறது.

அந்தச் சந்தேகம் வருமளவுக்கு
பெயர் இருந்தால் போதும்
'பட்டியலில் சேர்க்கலாம் வா'
என்று-ஆள் பிடித்து நிறுத்துவதே
ஜனநாயக அரசியல் என்னும்
தவறான எண்ணம் தலைதூக்கியிருக்கிறது.

அரசியல் ஞானம் உள்ள தலைவர்களை
வேகம் போதாது-
மக்களுக்கான விசுவாசம் போதாது
என்று தூக்கி எறிந்துவிட்டு
இன்று எங்கே வந்து நிற்கிறோம்?

அனைத்தையும் அழிக்கத் தெரிந்தளவுக்கு
ஆரோக்கியமானவற்றை
ஆக்கியமைக்க தெரியாமல் போனதுதான்
அனைத்து அவலங்களுக்குமே காரணம்.

இன்னொன்றை சிறப்பாக
உருவாக்கத் தெரியாதவர்கள்-ஏற்கனவே
உள்ளவற்றை உடைக்கக்கூடாது.
என்று சொல்வதுண்டு.
தமிழர்களது அரசியலைப் பொறுத்தவரை
அது அப்பட்டமான உண்மையாகிவிட்டது.
கிழக்கிலும்-வவுனியாவிலும்
நடைபெறும் உள்ளூராட்சி தேர்தல்
வேட்பாளர் பட்டியலும்
அதை வெளிச்சப்படுத்திக் கொண்டிருக்கிறது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை,

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# தினமுரசு போன்: 820265

## கவிதைப்போட்டி இல-36

வந்து குவிந்த கவிதைகளில் வெற்றி பெற்றதுவும்-வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

உவகை எமக்களிக்கும்
பாலகன்கை ஆயுதமோ?
கதிரை அறுத்தெடுத்து
உவகை எமக்களிக்கும்
பாவிகள்கை ஆயுதமோ
உறவைப்பறித் தெமக்கு
உபத்திரவம் சேர்த்து வைக்கும்!

தர்ஷிக்கா கனகசிங்கம்
கல்லடி, மட்டக்களப்பு.

### வியக்கப்பட்ட கவிதைகள்

**நவீன உணவு**

"நீ அறுத்துப்போடுவதை
உண்டுவிட்டுத்தான்-
இவர்கள்
மனிதாபிமானத்தை
அறுத்துப்போடுகிறார்கள்.....!"

செல்வி.பாத்திமா அஸனார்
காத்தான்குடி-03.

**புதிய செய்தி**

புத்தாண்டில்
புதுச் செய்தி!
பிரபா...,
பேச்சுவார்த்தைக்கு,
வந்துவிட்டார்.

சிப்பியூர் சலீம்
மதவாச்சி.

**மனிதனாய் வளர் நீ!**

முகவயலெங்கும்
மகிழ்ச்சிக் கதிர்களால்
நிறைந்துள்ள சின்னத்தம்பி!
இனவாத வெள்ளத்தில்
என்றுமே
இரையாகிப் போகாதே.

செ.வாமதேவன்
பெரியகல்லாறு.

**பூரிப்பு**

பெய்துவிட்ட
பெருவெள்ளத்தில்
தப்பிவிட்ட
தெந்தன்
பெரும் போகம்.

க.அழகையா
திருகோணமலை.

**களிப்பு**

அவர்கள்
கூட்டுக் குவித்து
இன்னும் சோரவில்லை
நீ மட்டும்
வெட்டிக் குவித்திடக்
களிப்புடன் வந்தாயா?

பூபா.புவன்
திருகோணமலை.



**எப்போது?**

மதப்போர்,
நிறப்போர்,
எல்லைப்போர்,
எல்லாம் முடிந்து...
உலகம் உருப்பட்டது
எப்போது?

என்.கே.சலீம்
வகமல்கொல்லாவ.

**கவனி**

கையில் உள்ள
கத்தி-ஆயுதமாகாமல்
கவனித்துக்கொள்.

எஸ்.மதி
கல்குடா.

**விடியல்**

"தூங்கிய விடியல் எழ
துப்பாக்கிகள் கீழேவிழ
ஓங்கிய கரங்களிலே
ஒரே ஆயுதம் அரிவாளே!

கனகரெத்தினம் பாமா
தம்பலகமம்.

**விடு.....**

எந்தையின் உயிர்ப்பூ
சந்தியில் பறித்தீர்!
சோகத்துள் சோம்பின்
சோறு வருமா.....?
விடு..நான் பிழைப்பேன்!

விஜித்தா.செல்வநாயகம்
மண்டூர்.

**களிப்பு**

போர் தொடுத்துப் பெற்றதெல்லாம்
போதுமென்று,
ஏர் தொடுத்து விதைத்ததனால்
ஏற்றனையோ இக்களிப்பு?

ச. மகாலிங்கம்
வெளிமடை.

**சிந்தனைக்கு**

கத்தியைத் தீட்டிவிட்டால்
கவலைகள் சூழ்ந்துகொள்ளும்
புத்தியைத் தீட்டிவிட்டால்
புவனமும் சுவர்க்கமாகும்.

ஐ.என்.எம். நிஹ்ரீர்,புத்தளம்.

**வழி பிறந்தது**

தை பிறந்தால் வழி பிறக்கும்
-தங்கம்மா.
தரணி எங்கும் முகம் சிரிக்கும்
-முத்தம்மா.

திருமதி.காளிதர்சினி இராஜேந்திரன்
ஏறாவூர்-04.

**நிலைத்திடுமா?**

ஏர்முனை தந்த களிப்பை
ஆயுதமுனை நிலைத்திடச் செய்யுமோ?

ந.ரதீஸ்வரன்-தம்புலுவில்-2.

**பஞ்சமதை நீக்கிவிடும்**

வஞ்சகர் கை ஆயுதத்தால்
வெஞ்சம் மிக மலிந்து-நெஞ்சே
வெடித்துவிடும்.
பிஞ்சுமகன் என் கை ஆயுதமோ
நஞ்சைப் பயிர் அறுத்து
பஞ்சமதை நீக்கிவிடும்.

க.சுசீலா
கல்லடி,மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-39



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 26.2.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 39
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ், கொழும்பு-5

# வாசகசாலை

## ரசிகனுக்கு வாசகர்களிடமிருந்து கைகுலுக்கல்களும்-கண்டனங்களும்

அன்பின் முரசே,

முத்தான அம்சங்களை சுமந்துவரும் உன்னை பாராட்டாமல் இருக்க முடியவில்லை. நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் படுஜோர். கண்ணே மதுமிதாவில் ரம்யாவின் இறப்பை தாங்கமுடியவில்லை. என்ன இருந்தாலும் ரசிகன் குலாம்ஷாவை இப்படி தவிக்க விட்டிருக்கக்கூடாது. எனினும் ரசிகனுக்கு எனது பாராட்டுக்கள். இன்னும் எம்மை தவிக்க விடாமல் ரசிகனை அறிமுகப்படுத்திவிடு.

பைறோஜா மர்ஸூக்-பேருவளை.

•

தென்றலிலே மிதந்துவரும் தெய்வ மங்கை போல் வாராவாரம் எம் கரங்களில் தவழும் தினமுரசு வாரமலரே! ரசிகனின் "கண்ணே மதுமிதா" முடிவில் ரம்யாவின் மரணம் சோகத்தில் ஆழ்த்திவிட்டது. புதிய தொடர் கொலைவிழும் நேரத்தை எதிர்பார்த்து விடைபெறுகிறோம்.

பஸ்மியா அனஸ், பாஹிரா-மக்கொனை.

•

அட்டகாசமான ஆரம்பம் அற்புதமான இறுதி அம்சம். கதை முழுதும் கவிதைபாடிய இனிய நடை. வாசகர் நம்மை வாரந்தோறும் வசீகரித்த எளிமையான சின்னச்சின்ன வசந்தவரிகள். உண்மையிலேயே ஒவ்வொரு வாரமும் தூள் கிளப்பியிருந்தன. எழிலாய் ரசிகன் வரைந்திருந்த கண்ணே மதுமிதா தொடர் சித்திரம் குலாம்ஷா, மதுமிதா, ரம்யா மூவரும் மனது மறக்க முடியாத கதாபாத்திரம்! ரம்யாவின் பிரிவை நம்மாலும் தாளமுடிய வில்லை. அடுத்த வாரங்களை...ஆவலோடும், ஆசையோடும் எதிர்பார்க்கவைத்து எடுத்த எடுப்பிலேயே தொடரினைப் படிக்க வைத்த கதாசிரியருக்கும் பிரியத்தோடு பிரசுரித்த முரசுக்கும் வாச வாழ்த்துக்கள்.

வாஹிட் ஏ.குத்தூஸ்-கோட்டை முனை.
மட்டக்களப்பு.

**அடுத்த தொடருக்காக....**

ரம்யாவை சாகடித்த ரசிகனை மன்னிக்க முடியாது. குலாம்ஷாவைப் போலவே நாமும் துயரத்தின் எல்லையில் நிற்கிறோம். என்றாலும் "கண்ணே மதுமிதாவை" விறுவிறுப்பாக நகர்த்திச் சென்றமைக்கு ரசிகனை பாராட்டி, அடுத்த தொடருக்காக காத்து நிற்கிறோம்.

-ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.

அன்புடன் முரசிற்கு!

கண்ணே மதுமிதாவை கரைசேர்க்கப் போகிறார் ரசிகன். முடிவை அறிய ஆவல்தான். ஆனாலும்..இதுபோன்ற அவரது தனிப்பட்ட எழுத்துப்பாணியை (இலக்கிய நயத்தைத் தவிர) இனித்தரிசிக்கப் போவது எப்போது?

ஓ.... ஐ ஆம் சொாி! இன்னொரு கதை தரப்போகிறார் அல்லவா? இதோ வாழ்த்துக்கள். ரசிகன் சார் ஜமாயுங்கள்!

வேலுபத்மப்பிரியன்-
போமன்ட் புப்புரஸ்ஸ.




•

**மகத்தான் அன்பு!**

ரசிகன் இரசமான "கண்ணே மதுமிதா" கடைசி அங்கம் கண்டோம். ரம்யா என்ற ரம்மியமான பெண்ணின் சோக முடிவு கண்ணீரை வரவழைத்தது. குலாம்ஷாவின் பணி மகத்தானது. என்றாலும் ரம்யா அவர்மீது கொண்ட அன்பு அதைவிட மகத்தானது. என்றாவது ஒரு நாள் எதிரிகளும், துரோகிகளும் தண்டிக்கப்பட்டே தீருவார்களென்ற கருத்தினை வலியுறுத்தி நின்றது கதை. மொத்தத்தில் கதை தந்த ரசிகனும் அதைத் தந்த தினமுரசும் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்களே.

ராகில் ஏ.காசிம்-மன்னார்.

•

தினமுரசே,

தெவிட்டாத உன் தேன்மதுர அம்சங்களுக்கு ஒரு அன்பான சபாஷ். "கண்ணே மதுமிதா" தந்த முடிவு கண்களை ஈரமாக்கியது. பெண் என்பவள் ஆசைக்கு தீனி போடும் பதுமையல்ல; வீரமும், அன்பும் அற்புதமாய் ஊற்றெடுக்கும் வர்ணிக்க முடியாத வைரமழை என்பதை ரம்யா நிரூபித்தாள். ரம்யாவின் இழப்பை ஜீரணிக்க முடியவில்லை சார். அவளை சாகவைத்த ரசிகன் மீது பொல்லாத அன்புக் கோபம்தான் வருகிறது. வாழட்டும் தினமுரசின் தேன் சொட்டும் பணி.

எம்.எஸ்.எம்.ராசிக்-வரக்காமுறை.

•

என் இதய தோழிக்கு,

நீ சுமந்துவரும் அம்சங்கள் யாவும் இனிமையானவை. இலக்கிய நயம் தரும் ரசிகனின் ரசிகை நான். இப்போது நீயின்றி நானில்லை. என்ற நிலைக்கே வந்துவிட்டேன். வாராவாரம் நீ சுமந்துவரும் புதுமைகளை ரசித்து மகிழ்வதற்காக காத்திருப்பேன். வாழ்க தினமுரசே நீ.

செல்வி ஜெயலக்சுமி வடிவழகு
மாணிக்கவத்த-அவிசாவளை.

•

திக்கெட்டும் முரசொலிக்க தேன் சுவை தரும் தினமுரசே, கடந்த 32 வாரங்களாக எம்மை சிந்திக்க வைத்து மகிழ்ச்சிப்படுத்திய ரசிகன் இறுதி அங்கத்தில் அழ வைத்துவிட்டார். இருந்தாலும் பரவாயில்லை சுவையான கதைக்கு சுகமான முடிவுதான். இதை எமக்கு ரசிக்க தந்த முரசிற்கும், ஆசிரியருக்கும் ரசிகனுக்கும் பாராட்டுக்கள். வாழ்த்துக்கள். இனியாவது ரசிகன் யார் என்று கூறிவிடுங்களேன்.

சேகர்,பவானி, அமுதா,தங்கா-கோட்லோஜ் எஸ்டேட்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# “நல்லெண்ணத் தூதுக்குழுக்களிடம் உருப்படியான திட்டம் இல்லை”

## “ஆரம்பப் பேச்சுக்கள் யாழில் நடக்க வேண்டும்; அரசும் புலிகளும் மட்டுமே பேச வேண்டும்.”

## தூதுக்குழுக்களோடு பேசியது பற்றி புலிகள் விளக்கம்

★ யாழ்ப்பாணத்தில்தான் ஆரம்பப் பேச்சு நடக்கவேண்டும்.

★ இராணுவ–பொருளாதார அழுத்தங்கள் மத்தியில் பேச்சுவார்த்தை பற்றி சிந்திக்க முடியாது.

★ தூதுக்குழுக்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள முடியாது.

★ ஜனாதிபதியின் காரசாரமான அறிக்கைகள் சமாதானத் தீர்வை உருவாக்காது.

சமீபத்தில் யாழ் சென்ற நல்லெண்ண தூதுக்குழுக்கள் எதுவும் உருப்படியான திட்டம் எதனையும் கொண்டுவரவில்லை என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் அறிவித்துள்ளனர்.

சமீபகாலமாக பல தூதுக்குழுக்கள் யாழ் சென்று புலிகள் அமைப்பினரைச் சந்தித்துப் பேச்சு நடத்தின.

யாழ் சென்று திரும்பிய தூதுக்குழுக்கள் கொழும்பில் கருத்துத்தெரிவிக்கும்போது, புலிகள் பேச்சுக்குத் தயாராக இருப்பதாகவே தெரிவித்து வருகின்றன.

தூதுக்குழுக்கள் பல யாழ் செல்வதால் சமாதானக் கதவுகள் திறக்கப்படப் போகின்றனவே என்ற எதிர்பார்ப்பு வடபகுதி மக்களிடம் மட்டுமல்லாமல் நாடெங்கும் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தூதுக்குழு விஜயங்கள் பற்றிய விளக்கமொன்றை புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் வெளியிட்டுள்ளார்.

நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை மட்டுமே உருவாக்க முடியும். பேச்சுவார்த்தைகளில் அவை கலந்துகொள்ள முடியாது. புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் மட்டுமே இனப் பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற வேண்டும், என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைக்கு சமாதான சூழ்நிலை அவசியம். இதற்கு போர் நிறுத்தமும், பொருளாதாரத் தடைநீக்கமும் முக்கியம்.

இதனை உணர்ந்து இலங்கை அரசு ஒரு சுமுக நிலையை தோற்றுவித்தால் மட்டுமே விடுதலைப்புலிகள் அரசுடன் பேச்சு வார்த்தைக்கு இணங்குவர்.


புலிகள் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் எத்னையும் விதிக்கவில்லை. போர் நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் என்பவற்றை அரசாங்கம் பேச்சுவார்த்தை களுக்கான முன் நிபந்தனைகளாகக் கருதக்கூடாது. இவை சமாதானப் பேச்சுக்களுக்கு அவசியமாகும்.

யுத்தம் தொடர்ந்து நடைபெறும்போது, மக்கள் அழிவை சந்தித்துக்கொண்டிருக்கும் போது பேச்சுக்கள் நடத்துவது நடைமுறைச் சாத்தியமல்ல.

இதனால் அரசு முதலில் செய்ய வேண்டிய நடவடிக்கை போர் நிறுத்தமாகும். இதற்கு புலிகள் தயாராக உள்ளனர்.

அடுத்தகட்டமாக் மக்கள் மீது திணிக்கப் பட்ட பொருளாதாரத் தடையை நீக்கி சுமூக நிலையைத் தோற்றுவிக்கவேண்டும்.

ஏனெனில் இராணுவ, பொருளாதார அழுத்தங்களுக்கு மத்தியில் பேச்சுவார்த்தை



அன்ரன் பாலசிங்கம்

நடத்துவது தமிழ் மக்களுக்கு சாதகமாக இருக்காது.

ஆகவே தமிழ் மக்களுக்கு அரசு நல்லெண்ண சமிக்ஞை ஒளியைக் காட்ட வேண்டும். நம்பிக்கை ஊட்டவேண்டும். இது நிறைவேறுமாயின் புலிகள் பேச்சுக்குத் தயார்.

ஆரம்பப் பேச்சுக்கள் யாழ்ப்பாணத்தி லேயே நடக்கவேண்டும். யாழ்ப்பாணம் வந்து சென்ற மூன்று கிறிஸ்தவ தூதுக் குழுக்களிடம் நாம் இதனைத் தெளிவு படுத்தியுள்ளோம்.

யாழ் வந்த நல்லெண்ணத் தூதுக்குழு எதுவும் உருப்படியான தீர்வொன்றையும் கொண்டுவரவில்லை.

இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுக்கள் புலிகளுக்கும், அரசுக்குமிடையே மட்டுமே நடைபெறுதல் வேண்டும். நல்லெண்ணத் தூதுக்குழுக்களுக்கு அதற்கான சூழ்நிலையை உருவாக்குவது மட்டுமே வேலையாகும்.

இனப்பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி காரசாரமான அறிக்கைகள் விடுத்தால் சமாதானத்தீர்வு உருவாகாது என்பதை அவரிடம் வலியுறுத்துமாறு மதகுருமாரிடம் தெரிவித்துள்ளோம்.

இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அன்ரன் பாலசிங்கத்தோடு இளங்குமரன் (பேபி சுப்பிரமணியம்) கரிகாலன், பாலகுமார் (ஈரோஸ் முன்னாள் தலைவர்) ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வேட்பாளர்களுக்கு புலிகள் மிரட்டல்! “விலகாவிட்டால் தேசத்துரோகம்”

கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் சிலருக்கு புலிகள் அமைப்பினரால் மிரட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழன்பன் என்பவரது பெயரில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் தேர்தலை புறக்கணிக்குமாறும், தேர்தலில் பங்கேற்பது தேசத்துரோகம் என்றும் கூறப்பட்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் தம்மை வந்து உடன் சந்திக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

## இலங்கை அரசுக்கும் உளவு சொன்னாராம் மாத்தையா மீது புலிகள் குற்றச்சாட்டு!

மாத்தையாவை கருவியாகப் பாவித்து இந்திய உளவுத்துறை மேற்கொண்ட சதி நடவடிக்கையில் இலங்கை அரசும் உடந்தையாக இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பாரிசில் இருந்து புலிகள் அமைப்பினர் வெளியிட்டள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய உளவுத்துறையான ‘றோ’ திட்டமிட்ட சதி முயற்சியில் மாத்தையா உட்பட மூவர் சம்பந்தப்பட்டுள்ளனர். இந்த சதி நடவடிக்கையில் இலங்கை அரசும் உடந்தையாக இருந்துள்ளமை எமது புலனாய்வுப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தக்க சமயத்தில் சதி முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை மாத்தையா விவகாரத்தில் தலையிட்டு அவரது விடுதலைக்கு உதவுமாறு இலண்டனில் உள்ள மாத்தையா ஆதரவாளர்களும் இலங்கைத் தமிழர்களைக்கொண்ட மனித உரிமை அமைப்புக்கள் சிலவும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றன. மாத்தையா குற்றமற்றவர் என்றும், திட்டமிட்டு பொய்யான குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்படுவதாகவும் அவை கூறியுள்ளன.

## உடனடிப் பிரச்சனைகளையும் உதறித்தள்ள முடியாது உள்ளூராட்சி மன்றத்தேர்தல் பற்றி ஈ.பி.டி.பி.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) வெளியிட்டுள்ள பிரசுரம் ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:

தமிழ்பேசும் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை நிறைவேற்று வதற்கான போராட்டம் இன்னும் பூரணமாக வெற்றியடையவில்லை என்றாலும் கூட, அது வெற்றியடையும்வரை ஜனநாயக நிர்வாக அமைப்புக்களை ஒதுக்கித்தள்ளிவிட முடியாது.

தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றிற்கான முனைப்பான செயற்பாடுகளில் ஈடுபடும் அதே வேளையில் எம் மக்களது நாளாந்தப் பிரச்சினைகளையும் நாம் புறக்கணித்துவிட முடியாது!

விளக்கின்றி கிடக்கும் வீதிகள், பள்ளமும், குழியும், சேறும் சகதியுமான பாதைகள் சுகாதாரச்சீர்கேடுகளால் பரவிவரும் வியாதிகள், வீடின்றி வீதிகளில் அகதி முகாம்களில் தவிக்கும் வறியமக்கள், போதிய கல்வி வசதியின்றி, போசாக்கின்றித்தவிக்கும் சிறுவர்கள், குழந்தைகள்...இவ்வாறு தொடரும் பல நாளாந்த அவலங்களை கவனிக்காமல் இருக்க முடியுமா? நலிந்தவர்கள் மேலும் நலிந்துகெடுவதை தடுக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டாமா?

அதனால்தான் உள்ளூராட்சி சபைகள், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் கொண்டு நடத்தப்பட வேண்டும் என்கிறோம். அன்றாடப் பிரச்சினைகளுக்கு அதிகாரிகளின் முன்நிலையில் அவதிப்படும் நிலையில்லாமல்; தங்களால் தெரிவு செய்யப்பட்ட தங்கள் பிரதிநிதிமூலம்; தம் தேவைகளை நிறைவு செய்ய பிரதேச சபைகள் உபயோகமான நிர்வாக அமைப்பாக இயங்கவேண்டும்.

அவ்வாறான உபயோகமான நிர்வாக அமைப்புகளாக இயங்க வேண்டுமானால்; அந்த சபைகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் சிறந்த சேவையாளர்களாக இருக்கவேண்டும். மிக முக்கியமாக ஊர்ப்பணத்தைச் சுருட்டி உலையில் போடாதவர்களாக இருக்க வேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான வடக்குகிழக்கை இரண்டாகப் பிரித்துவிட முயற்சிகள் நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் அம்முயற்சிகளுக்கு துணைபோகக்கூடியவர்களை நாம் தூக்கி நிறுத்திவிடக்கூடாது. அவ்வாறானவர்களை தூரவிலகுங்கள் என்று நம் வாக்குப்பலத்தால் புறம்தள்ளிவிட்டு தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக்காக உழைக்கக்கூடியவர்களை முன்நின்று உழைப்போரோடு இணைந்து செயற்படக்கூடியோரை: பிரதேச சபைகளின் உறுப்பினர்களாக தெரிவு செய்திட வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது. திருகோணமலை நகரசபைத் தேர்தலிலும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பிரதேச சபைகள் நான்கிலும் ஈ.பி.டி.பி தனது ஆதரவாளர்களை சுயேச்சைக் குழுக்களாக நிறுத்தியிருப்பதாக கூறியுள்ளது.

## “ஒற்றுமையுடன் எதிர்ப்பைக் காட்டுங்கள்” தமிழர் விடுதலைக்கூட்டணி சொல்கிறது

கிழக்கிலும்,வவுனியாவிலும் நடைபெறும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை முன்னிட்டு தமிழர் விடுதலைக்கூட்டணி பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அப்பிரசுரத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

வடக்கில் வாழும் மக்களிடமிருந்து, கிழக்கு மக்கள், வேறுபட்ட அரசியல் அபிப்பிராயம் கொண்டவர்களென நாட்டையும் உலகையும் நம்பவைத்து தமிழ் மக்கள் மீது யுத்தம் தொடர்வதுதான் அரசின் திட்டமாகும்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் போரினாலும் இனக்கலவரங் களினாலும் ஐம்பதினாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், பல ஆயிரம்கோடி சொத்துடமைகள் அழிக்கப்பட்டும், ஆயிரக் கணக்கில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டும், பல இலட்சம் தமிழ் மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக்கப்பட்டும் அதனால் அவர் களுக்கெல்லாம் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டும் அவல நிலைக்குள் அழுந்திக் கிடக்கும் தமிழ் மக்கள் அரசியல் தீர்வு ஏற்பட்டு அமைதி வராதா என ஏங்கிக்கிடந்த நேரத்தில், இத்தேர்தல் இப்போது வேண்டாமென அனைத்துக் கட்சிகளும் விடுத்த வேண்டுகோளைச் சர்வாதிகாரத்தனமாக நிராகரித்துவிட்ட அரசு மக்களிடம் இத் தேர்தலைத் திணித்துள்ளது.

இராணுவம் குவிக்கப்பட்டுள்ள நகர்ப்புறங்களில்தானும் பாதுகாப்பு யாருக்கு மில்லை. நகரங்களுக்கு அப்பால் இராணுவமே செல்ல முடியாத நிலை. அரசுப் படைகளுக்கும் ஆயுத இயக்கங்களுக்கும் அஞ்சி வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் அதிகாரங்களற்ற, சுயமாகச் செயல்பட முடியாத மேலும் தற்போதுள்ள சூழ்நிலையில் அரசு-இராணுவம், ஆயுதக்குழுக்களின் உத்தரவு களை மீறமுடியாத பிரதேசசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்ளில் தமிழ் மக்கள் ஏன் வீணில் பலிக்கடாக்கள் ஆக்கப்படவேண்டும்?

பல இலட்சம் தமிழ் அகதிகளும், சிறைகளில் அடைக்கப்பட்ட அப்பாவித் தமிழர்களும் வாக்குரிமையைப் பயன்படுத்த மறுக்கப்பட்ட நிலையில்,

1983க்குப் பின் தமிழ்-முஸ்லிம் வாக்காளர்கள் தேர்தல் இடாப்பில் பதியப்படாத நிலையில்,

அரசாங்கத்தினாலும் இராணுவத்தினாலும் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட பல இலட்சம் சிங்கள மக்கள் இத்தேர்தலிலும் கிழக்கு மாகாணத்தைப் பிரித்திட அடுத்து நடத்தப் படவுள்ள கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பிலும் வாக்களிக்கும் உரிமை கொண்டுள்ளதன்மூலம் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

இவற்றையெல்லாம் உருவாக்கி, அங்கீகரித்து நிற்கும் எந்த ஒரு பேரினவாதக் கட்சிக்கும் மற்றும் கட்சிகள், சுயேச்சைகளுக்கும் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் தங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும்.

தமிழர் விடுதலைக்கூட்டணி இவ்வுள்ளூ ராட்சித் தேர்தலை என்ன காரணங்களினால் எதிர்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளதோ அதே காரணங்களின் அடிப்படையில் இத்தேர்தலில் பங்குபற்றாதது மட்டுமன்றி பங்குகொள்ளும் எந்த ஒரு கட்சியையோ, சுயேச்சைக் குழுவையோ ஆதரிக்கவுமில்லை. அவைகளுக்கு மக்களை வாக்களிக்கும்படி கேட்கவுமில்லை.

இத்தகையதொரு சூழ்நிலையில், ஒருபுறம் இராணுவம் மற்றும் ஆயுதபாணிகளால் சூழப்பட்டுள்ள தமிழ் மக்கள் தேர்தலில் பங்குகொள்ள நிர்ப்பந்திக்கப்படலாம். மறுபுறத்தில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கள்ளத்தனமாக வாக்குப்பெட்டிகளில் நிரப்பிவிடவும் திட்டமிருக்கும்.

எனவே பேரினவாத சக்திகளினதும் அவர்களுக்குத் துணைபோய் தேர்தலில் பங்குபற்றுவோரினதும் வஞ்சகத்திட்டங் களுக்குத் தமிழ் மக்கள் பலியாகாமலும், தேர்தல் மோசடிகளுக்குத் துணை போகாமலும் விவேகமுடன் நடந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் காலையில் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்குச் சீட்டைப் பெற்று, செல்லுபடியற்றதாக்கி தங்கள் எதிர்ப்பைக்காட்ட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம்.

## திருவாளர் பொதுஜனம்; சிந்திக்கலாம்-சிரிக்கலாம்



உங்கள் ஆவல் எனக்குப் புரிகிறது.. கொஞ்சம் பொறுமையாக இருங்கள்... நம்முடைய கட்சியின் வேட்பாளர்கள் யார் யார் என்பதை கூட்ட முடிவில் அறிவிப்பதாக இருக்கிறோம்.....! (நன்றி-மதன் ஜோக்ஸ்)

## வடக்கில் இருந்து தெற்கே வரும் தூதுக்குழு

தெற்கில் இருந்து மட்டுமே மதகுருமார் தூதுக்குழுக்கள் இதுவரை வடக்கே சென்றன.

இப்போது வடக்கே இருந்து மதகுருமார் அடங்கிய தூதுக்குழு ஒன்று தெற்கே வரும் ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இந்து குருமார் ஒன்றியம் என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தாம் தெற்கே வந்து அனைத்து மதகுருமாரையும் சந்தித்து தமிழ் மக்களின் நிலைகுறித்து விளக்கப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்து மதகுருமார் ஒன்றிய பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினரை சந்தித்து தமது விஜயம் குறித்து எடுத்துக்கூறியுள்ளனர்.

## சுவிஸில் எதிர்ப்பு!

சுவிஸில் தஞ்சம் கோரியுள்ள தமிழ் அகதிகளை இலங்கையில் வைத்து பராமரிக்கும் சுவிஸ் அரசின் திட்டத்தை சுவிஸ் மக்கள் பலர் கண்டித்துள்ளனர். சுவிஸில் இலங்கைத் தமிழர்களுக்காக பல்வேறு உதவிகள் புரிந்துவரும் பிறைப்பிளாட்ஸ் அக்சியோன் என்ற அமைப்பு சுவிஸ் அரசின் நடவடிக்கையை குறைகூறியுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


விளம்பரப் பகுதி

## முகவர்கள் தேவை

நாரம்மலை, குளியாப்பிட்டிய, அம்பாந்தோட்டை, மாத்தறை, பலப்பிட்டிய, உடப்பு, மாஹோ, புல்மோட்டை.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு விற்பனை செய்வதற்கு முகவர்கள் கோரப்படுகின்றார்கள். முற்பணம் செலுத்தக்கூடிய முகவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

Advertising Manager
THINAMURASU
88/14, Somadevi Place,
Kirilapone, Colombo-6.
Phone- 820265

## சிங்களம்

ஒரு மாதத்தில் எழுத வாசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

K. RAVI M.Sc.,
E P I
642/2- HINNIAPPUHAMY MAWATHE,
KOTAHENA, COLOMBO-13

## எட்டு மணிநேரத்தில்

உங்கள்
விருப்பத்திற்கேற்ப
விரும்பிய வடிவில்
சிறியோர் முதல்
பெரியோர்வரை
அனைவருக்கும்
தைத்துக்
கொடுக்கப்படும்.

சாறி பிளவுஸ்
சல்வார் கமீஸ்

உடன் வருகை தாருங்கள்.
எமது தரம் கண்டு மகிழ்வீர்கள்.

ERIN DRESS DEN
NO.9, LAURIES ROAD,
COLOMBO-4.

*Manufacturers of Ladies & children Garments*

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)




இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*


# இந்திய மாநிலத்தில் புலிப் பவனி!



இந்தியாவில் புலிகள் அமைப்புக்கு சட்டபூர்வமான தடை இருக்கிறது. புலிகளுக்கு ஆதரவாளர்களும் பலர் சிறையின் உள்ளே இருக்கிறார்கள். ஆனால் சமீபத்தில் இந்தியாவில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டிகளில் ராஜு என்ற புலிக்கு பலத்த மரியாதை. மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள புனேயில் நடந்த தேசிய விளையாட்டுப் போட்டியின் சின்னம் புலி. அதன் பெயர் ராஜு. மைதானத்தில் பலவித தோற்றங்களில் புலி பவனி வருவதையே படத்தில் காண்கிறோம்.


## மலையாள மாந்திரீகம்



கொழும்புவாழ் நகரவாசிகளின் நலனைக் கருதி ஒவ்வொரு மாதமும் (எம்மாதமும்)
வினோத் இன்
இல.33, மூன்றாவது மாடி
சிறீ குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.

"VINNODH INN"
No.33, 3rd Floor
Sri Gunanantha Mawatha
Kotahena

ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வழியாகவும், ஸ்ரீ குணானந்த மாவத்தை உபதபால் கந்தோர் முன்பாகவும் வீற்றிருக்கும் எமது துர்க்கையம்மனை நாட நினைத்ததை நினைத்தவாறு நினைத்தபோதே எமது மலையாள உச்சாடன பீடத்திற்கு வந்து உங்களுக்கு பில்லியா, சூனியமா, கணவன் மனைவி பிணக்கா, கல்யாணத் தடையா, காதலில் படுதோல்வியா, தீரா நோயா, ஆஸ்துமாவா? வியாபார விருத்தி இல்லையா, பொருளாதாரத் தங்கு தடையா? அச்சொட்டான விதியின் சுவடி ஜாதகங்கள் எதுவானாலும்- நிர்வாக அமைப்போ ஆலோசனையோ– 072–27024

மாந்திரீகக் குரு: 072–26088

வெளிநாட்டுத் தொடர்பு: 078–61933, 052– 2508, 052– 3093

நிர்வாகக் குழு: 072– 27098

கடிதத் தொடர்பு: ஜோதிட மாந்திரீக தத்துவஞானி P.K.சாமி,
தபால் பெட்டி 33, ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயம்,
நுவரெலியா, சிறீலங்கா.

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex,**
**NUWARA ELIYA.**

**Dial: 052-2508 & 3093**
**AND**
**072-26088, 078-61933**

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

*Phone: 052-2508, 052-3093, 072-26088,*
*078-61933, 078-71243.*

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

## திருவோணம் திருமண சேவை

கடந்த 10 ஆண்டுகளில் 172 திருமணங்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள தமிழ் மக்களிடையே வெற்றிகரமாக நடத்தி வைத்துள்ள ஒரே சேவையாளர். வயது வந்த பிள்ளைகளை வைத்துக் கொண்டு வரன் தேடியலையும் பெற்றோரே, இனியும் கவலை வேண்டாம்!

அடுத்த வாய்ப்பு உங்களுடையதாக இருக்கலாம். நம்பகமான சேவைக்கு சோதிடர் திருவோணத்தை நாடுங்கள்.

**விபரங்களுக்கு:** S. JOHNRAJAN
ASTROLOGER - ' THIRUVONAM ',
MARRIAGE CONSULTANT,
B/01/06, WIDANAGE MAWATHA,
COLOMBO-02

(முதலில் கடிதத் தொடர்புகள் மாத்திரம். சந்திப்புக்கு பின்னர் ஏற்பாடு செய்யப்படும்)


# ஆலய நிகழ்ச்சிக்கு அரசியல் புகைச்சல் தடை

## திருப்பணிக்கு உழைத்தவர் தேர்தலில் குதிக்க வந்தது வினை!

(திருகோணமலை நிருபர்)

வாக்குச் சேகரிப்பில் ஏற்பட்ட போட்டி காரணமாக தைப்பூச நாளன்று அடிக்கல் நாட்டப்படவிருந்த ஆலய நிகழ்ச்சியொன்று கைவிடப்பட்டது.

இந்தக் கதி மங்காபுரி பத்தினியம்மன் ஆலயத்துக்கு நேர்ந்துள்ளது. கடந்த வன்செயலின் போது உடைத்து தரைமட்டமாக்கப்பட்ட இந்த ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்கள் ஒன்றுபட்டு உழைத்து அடிக்கல் நாட்ட ஆரம்பித்த வேளையில் பொலிசாரால் விதிக்கப்பட்ட தடை காரணமாக 'மட்கோ' என்றழைக்கப்படும் மங்களபுரி மக்கள் சோர்ந்து போயிருக்கிறார்கள்.

இந்த ஆலயம் கட்டிமுடிக்கப்பட வேண்டும் என்று நீண்டகாலமாக உழைத்துவரும் சிங்கள அன்பர் ஒருவர் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சுயேச்சையாக இறங்கியுள்ளதால் அப்பகுதி மக்களின் வாக்குகளை அவர் தட்டிக்கொண்டு போய்விடுவார் என்ற எண்ணத்தால் ஆளும்கட்சி, பிரமுகர்களால் செய்யப்பட்ட வேலையே இது என பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

# கிராம அதிகாரிகளின் பதவி உயர்வு பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்

*(மன்னார் நிருபர்)*

கிராம அதிகாரிகளின் தரம்-01 பதவி உயர்வு பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகளை நடாத்துவதற்கு, மன்னார் மாவட்ட ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம அலுவலர் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புகள் இம்மாதம் இறுதியில் மேற்படி சங்க அலுவலகக் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்படும். ஆரம்ப பயிற்சி நெறியாளராக சிரேஷ்ட கிராம அலுவலர் திரு.ல.சிவகுமாரவேலு அவர்கள் கடமையாற்றுவார். இதற்காக ஏற்பாடுகளை சங்கச் செயலாளர். திரு.இ.ஜே.ஜே. மிராண்டா அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்.

# புகார் பெட்டி

## நீண்ட நாள் தேவை ஒன்று நிறைவேறும் நாள் என்று?

கல்முனைக்குடி கடற்கரைப்பள்ளி உபதபால் நிலையம் இப்பகுதி வாழ்மக்களின் அஞ்சல் சம்பந்தமான பல சிரமங்களைக் குறைக்கும் ஒரு தபால் நிலையமாக இருந்த போதிலும் நீண்டகாலமாக ஒரு குறைபாடும் இருந்தபடியாகவேயுள்ளது.

அதுதான் இங்கு தொலைபேசி வசதி இல்லாமையாகும். இப்பகுதி வாழ்மக்கள் தமது அவசரத் தேவைகளுக்கு தொலைபேசியை நாடுவதாயின் தனியார் வீடுகளையே நாட வேண்டியுள்ளது. இதற்காக அதிக பணம் கொடுக்க வேண்டிய கட்டாய நிலை ஏற்படுகின்றது.

எனவேதான் இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு இது விடயம் பற்றி அறிவித்தார்கள். அவர்களும் இத் தபால் நிலையத்துக்கான தொலைபேசியின் தேவையை அறிந்து உடன் நடவடிக்கை எடுத்ததன் விளைவாக இப்பகுதியில் இடம்பெற்ற ஒரு பொதுக் கூட்டத்தின் போது இப்பகுதி உதவி அரசாங்க அதிபர் கடற்கரைப் பள்ளி உபதபால் நிலையத்துக்கு தொலைபேசி வசதி செய்து கொடுப்பதற்காக 32 ஆயிரம் ருபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

தொலைபேசியின் அவசியம் உணரப்பட்டு இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு அங்கு தொலைபேசி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை இப்பகுதி வாழ் மக்கள் 'தினமுரசு' வாயிலாக சுட்டிக்காட்ட விரும்புகின்றார்கள்.

எஸ்.ரி.எம்.பஸ்வாக்
கல்முனை–05.

# நித்திய சோதனையில் நிந்தவூர் ஆஸ்பத்திரி! தரமுயர முடியாமல் தாமதமாவது ஏன்?

*(நிந்தவூர் நிருபர்)*

நிந்தவூர் அரசினர் ஆஸ்பத்திரியைத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்டகாலமாக விடுக்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் முக்கிய கிராமமாகத் திகழும் நிந்தவூரில் இயங்கிவரும் இந்த ஆஸ்பத்திரி அதன் சிறந்த சேவைகாரணமாக நிந்தவூர் மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய அயல் கிராம மக்களுக்கும் முக்கியத்துவம் மிக்கதாகத் திகழ்கின்றது.

தற்பொழுது சுற்றயற்கூறு தரத்தில் இயங்கும் இந்த ஆஸ்பத்திரியை மாவட்ட ஆஸ்பத்திரியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளபோதிலும் தர முயர்த்தல் விடயம் பாராமுகமாகவே விடப்பட்டள்ளது.

இந்த ஆஸ்பத்திரி மாவட்ட ஆஸ்பத்திரியாகத் தரமுயர்த்தப்படுவதற்கான சகல வளங்களையும் கொண்டிருப்பது மட்டுமன்றி மேலதிக வளங்களையும் கொண்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் இந்த மாவட்டத்திலேற்பட்ட பயங்கரவாத நிலமைகள், இன மோதல்களின் போதெல்லாம் பல ஆஸ்பத்திரிகள் இழுத்து மூடப்பட்டிருந்தும், நிந்தவூர் ஆஸ்பத்திரி ஒருநாள் கூட மூடப்படாது அம்பாறை மாவட்டத்தின் பல கிராமத்து மக்களுக்கும் இரவு பகலாக சேவையாற்றிய உண்மையையும் எவரும் மறுக்க முடியாது.

இன்றும் கூட பிரதம வைத்திய அதிகாரியும், உதவி வைத்திய அதிகாரி ஒருவரும் விடுதியில் தங்கியிருந்து 24 மணிநேரமும் மக்களுக்கு சேவைகள் நடைபெற்று வருகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சின் செயலாளர் உட்பட, பல உயர் அதிகாரிகள் இந்த ஆஸ்பத்திரிக்கு வருகை தந்தபோதெல்லாம், தரமுயர்த்தப்பட வேண்டியதன் உடனடி அவசியத்தை நேரில் உணர்ந்தார்கள், வாக்குறுதிகளும் அளித்துச் சென்றார்கள்.

நெசவுக் கைத்தொழில் அமைச்சர் ஜனாப்.எம்.ஏ. அப்துல் மஜீத், திகாமடுள்ள மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.சந்திர தாஸகலப்பதி ஆகியோர் இந்த ஆஸ்பத்திரிக்கு வருகை தந்த போதுகூட தரமுயர்த்தல் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

ஏன் இதற்கு மேலாக கடந்த அக்டோபர்மாதம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், திகாமடுள்ள மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான அல்-ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களுடன், பிரதம வைத்திய அதிகாரி தலைமையிலான தூதுக்குழு ஒன்று பாராளுமன்றக் கட்டிடத்தில் கௌரவ சுகாதார அமைச்சரைச் சந்தித்து நிலமையை எடுத்து விளக்கி இந்த ஆஸ்பத்திரியைத் தரமுயர்த்துமாறு கோரியது.

அமைச்சரும் பத்து தினங்களுக்குள் இந்த ஆஸ்பத்திரியை மாவட்ட ஆஸ்பத்திரியாகத் தரமுயர்த்தத் தாம் ஆவன செய்வதாக உறுதி அளித்தார். இருந்தும் இந்த விடயத்தில் இலவுகாத்த கிளியின் நிலையே நீடித்து வருகின்றது.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் நிந்தவூர் ஆஸ்பத்திரி தரமுயர்த்தப்பட வேண்டுமென்ற சிபார்சு அமைச்சுக்கு அனுப்பப்பட்டும் பலமாதங்கள் கடந்து விட்டன.

நிந்தவூர் ஆஸ்பத்திரியின் தரமுயர்த்தல் விடயத்தில் நடந்த மாயம் என்ன? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். அரசியல் "ஸ்ரண்ட்" இந்த விடயத்திலும் புகுந்து விட்டதா? என்றும் சந்தேகம் கிளப்பப்படுகின்றது.

சுகாதார சேவை மக்களுக்கு அத்தியாவசியமானது! அரசியலுக்கு அப்பால் நின்று இதனை நோக்க வேண்டும். எமது அரசியல் வாதிகள் இதனை உணர்வார்களா? அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் முதன்மை பெற்ற நிந்தவூர் ஆஸ்பத்திரியைத் தரமுயர்த்த உடனடி நடவடிக்கையை இவர்கள் எடுக்க முன் வருவார்களா? தேர்தல் காலத்தை முன்வைத்தும் மக்கள் இதனைக் கேட்கிறார்கள்! காரியம் நடக்க கருணை பிறக்குமா?

# இருபெரும் குறைகள்

வாழைச்சேனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம்தான் பிறைன்துரைச்சேனை. இக்கிராம மக்கள் மின்சாரம் இன்றிப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். குறிப்பாக முஹம்மதியா வீதியிலிருந்து அல்-அஸ்ஹர் பாடசாலை வீதி, அதனைச் சூழவுள்ள சகல பகுதிகளும் இருளினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளுக்கு மின்சார இணைப்புக்களை வழங்கப்பல தடவைகள் நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டும்கூட அம் முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்துள்ளது. இது முதலாவது குறையாகும்.

இரண்டாவது பிரச்சனை இக்கிராமத்தின் சகல வீதிகளும் பழமை வாய்ந்தவை. முன்னொரு காலத்தில் எப்படி இருந்ததோ- அவ்வாறேதான் இன்றும் உள்ளது. இவ்வீதிகளினால் பைசிக்களில் செல்வோர் கூடத் தள்ளிக்கொண்டு செல்வதைத்தான் பெரும்பாலும் காண முடிகின்றது. மழைவந்தால் நடந்தும் செல்ல முடியாத நிலை. முழங்காலளவிற்கு வெள்ளம் பரவிநிற்கும். இக்கிராம மக்களும், பாடசாலை செல்லும் மாணவர்களும் இவ்விரு பெரும் குறைகளினால் தொடர்ந்து பல வருடங்களாகப் பல இன்னல்களை அநுபவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ அல்லது ஊர் பெரியார்களோ இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டுத் தீர்வுகளைக் காணுமாறு இவ்வூர் மக்களின் சார்பாகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிறைன்துரைச்சேனை–எம்.எம்.தௌபீக்.

# இரு கிராம சேவகர்கள்

குச்சவெளி பிரதேச செயலகத்தின் எல்லைக்குட்பட்ட புல்மோட்டைக் கிராமத்தில் சுமார் 2200 குடும்பங்கள் உண்டு. அதிகார பலவலாக்கத் திட்டத்தின் கீழ், 250 குடும்பங்களுக்கு ஒரு கிராம சேவகர் எனும் அடிப்படையில் 9 பிரிவுகள் அமைதல் வேண்டும். எனினும் தற்போது இரு கிராம சேவகர்கள் மாத்திரமே கடமைபுரிகின்றனர். இதனால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே பொறுப்பான நிர்வாகம் இக்குறைபாட்டை நீக்க நடவடிக்கை எடுக்குமா? என இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எம்.எஸ்.ஏ.காதர்–புல்மோட்டை.

# நோயாளிகளின் நிலை என்ன?

பட்டிருப்புத் தொகுதியில் அமைந்திருக்கும் ஒரே ஒரு பொது வைத்தியசாலையாக களுவாஞ்சிக்குடி அரச வைத்தியசாலை விளங்கியபோதும், அங்கு அடிக்கடி மருந்து, மாத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதனால் அங்கு செல்லும் ஏழை நோயாளிகள் பெரும் ஏமாற்றம் அடைகிறார்கள். இவர்கள் தனியார் மருத்துவமனையைக்கூட நாட பண வசதியில்லாமல் அல்லல் படுகிறார்கள். எனவே இங்குவரும், மருந்து, மாத்திரைகளுக்கு என்ன நடக்கிறது என்று அறிந்து அதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் மேற்கொண்டு, ஏழை நோயாளிகளின் துயர் துடைக்க வேண்டும் என்று மிக தயவாக வேண்டப்படுகிறார்கள்.

கே.தனபால்
குறுமண்வெளி.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# ஜனாதிபதியின் உரைகளும் உள்ளூராட்சிசபைத் தேர்தல்களும்

ஆளும் கட்சிக்குள் இருந்து முரண்பட்ட குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

இனப்பிரச்சனை என்று பயங்கரவாதிகள் மட்டும்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள் என்று அர்த்தப்படுகின்ற வகையிலே ஜனாதிபதி அவர்கள் பேசியிருந்தார்கள்.

ஆளும் கட்சிக்குள் ஜனாதிபதியால் விரும்பி அழைக்கப்பட்டவர் காமினி திசாநாயக்கா.

இலண்டன் பி.பி.சிக்கு காமினி அளித்துள்ள பேட்டியில் "இலங்கையில் இனப்பிரச்சனை இருக்கிறது" என்று உரத்துச் சொல்லியிருக்கிறார்.

அநுராவும் "இனப்பிரச்சனை இருக்கிறது. அதற்கு தீர்வு தேடவேண்டியும் இருக்கிறது" என்று பேசியிருக்கிறார்.

அதற்காக அவர்கள் இருவரும் பயங்கரவாதிகள் என்றோ, அல்லது பயங்கரவாதிகளுக்கு ஆதரவாளர்கள் என்றோ ஜனாதிபதி நினைக்கமாட்டார் என்பது நிச்சயம்.

திரு.அநுரா பண்டாரநாயக்கா, தனது தாயாரின் சார்பாக, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் புலிகளைச் சந்தித்தார்.

திரு. குமார் பொன்னம்பலமும் அநுராவோடு வன்னிக்காட்டிற்குச் சென்றிருந்தார்.

யோகி போன்ற தோற்றமுடைய ஒருவரைக் காட்டி அவர்தான் யோகி என்று புலிகள் சொல்ல, அதை நம்பி அநுராவும் அவரோடு சீரியசான விவாதம் நடத்திவிட்டு வந்ததாக ஒரு செய்தி உண்டு.

பின்னர் அந்தச் செய்தி அறிந்து அநுரா புலிகள் மீது கோபப்பட்டிருக்கக் கூடும்.

எனவே, அநுரா பண்டாரநாயக்கா புலிகளுக்கு சார்பாக பேசிவிடமாட்டார்.

முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முடியாது என்ற எண்ணத்திலே, இனப்பிரச்சனை இருக்கிறது என்று தன் உள்ளத்திலே கிடந்த உண்மையைக் கூறிவிட்டார்.

ஆளும் கட்சிக்குள் இருக்கின்ற பல முக்கியஸ்தர்கள் இனப்பிரச்சனையே இல்லை என்று மறுப்பதை மனதார விரும்பவில்லை. என்றாலும் மௌனமாக இருக்கிறார்கள்.

நெருப்பு என்று சொன்னால் வாய்சுடும் என்று ஜனாதிபதிக்கு பயந்து தீ என்று சொல்லுவது போல் வடக்கு-கிழக்குப் பிரச்சனை என்ற பதத்தைப் பாவித்து வருகின்றார்கள்.

அரசியலில் இதுதான் பிரச்சனை.

மிகப் பாரிய பொறுப்பிலே இருக்கும் ஒருவர் சரியோ தவறோ ஒரு கருத்தை பகிரங்கமாக கூறிவிட்டால் பின்னர் தவறு என்று தெரிந்தாலும் இரகசியமாக நாக்கைக் கடித்துக்கொள்ள வேண்டியதுதான்.

'நான் சொன்னது பிழையான கருத்துத்தான்' என்று பகிரங்கமாய் மறுப்பது கௌரவப் பிரச்சனையாகி விடும்.

தீர்க்கமான - மிக முக்கியமான பிரச்சனையில், அந்தப் பிரச்சனைக்கு தீர்வுகாண வேண்டிய பொறுப்பில் இருப்பவர்கள் கூறும் கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகி விடுகின்றன.

இனப்பிரச்சனை இங்கே கிடையாது என்று ஜனாதிபதி சொல்ல, உடனே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அக்கருத்து பிரபலமாகி பெரும் விமர்சனங்களை உருவாக்கியது.

புலிகள் தாக்குதல்கள் மூலமாக எடுத்துக்கொண்ட ஆயுதங்களைவிட, ஜனாதிபதி இனப்பிரச்சனை இல்லை என்று சொல்லி வழங்கிய பிரச்சார ஆயுதம் புலிகளுக்கு அரசியல் பலம் கொடுத்திருக்கிறது.

மிக வசதியாக எதிர்த்தரப்பிடம் பொல்லைக் கொடுத்து அடிவாங்கிய கதை.

பரவலாக விமர்சனங்கள் எழ ஜனாதிபதிக்கு அது ஒரு கௌரவப் பிரச்சனை. விளைவு- தனது கருத்தை நியாயப்படுத்த மேலும் கொஞ்சம் கருத்துக்கள் தேவைப்பட்டன.

தன்னை தற்காத்துக்கொள்ள ஏதாவது ஒரு அரண் தேவைப்பட்டது.

ஆகவே, ஒரு கோப்பைச் சோறு, முள்ளுக் கரண்டி, சீஸ் கட்டி உதாரணங்கள் அடிக்கடி பேசப்பட்டன.

மரம், கொடி, செடி என்றெல்லாம் உதாரணம் தேட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்காப்பு அரணாக 'சிங்கள மக்களது ஒற்றுமை' என்ற விடயத்தை உரத்துச் சொல்லும் அவசியம் நேர்ந்தது.

"இனப்பிரச்சனை இல்லை என்று நான் மட்டுமே சொல்லியிருக்கிறேன்" என்று பெரும்பான்மை இன மக்கள் மத்தியில் கூறி தனக்கு ஏதாவது ஒரு பக்கத்தில் வரவேற்புப் பெறும் தேவை ஏற்பட்டது.

ஆனால் துரதிஷ்டவசமாக அவ்வாறான பேச்சுக்கள் சிக்கல்களை தோற்றுவித்துள்ளன.

ஆளும் கட்சி மீது தமிழ் மக்கள் உறுதியான அவநம்பிக்கை கொள்ளும் வகையில் நிலமை மாறிவிட்டது.

புலிகளை பேச்சுக்கு அழைத்த பிரதமர் ரணிலின் அரசியல் விவேகம்கூட ஜனாதிபதியின் பேச்சுக்கள் குறித்து எழுந்துள்ள அதிருப்தி அலையில் அடிபட்டுப் போய்விட்டது.

மறுபுறம் சிங்கள மக்கள் மத்தியிலும் இனப்பிரச்சனை இல்லை என்ற கருத்துக்கு பெரியளவில் வரவேற்பைக் காணவில்லை.

ஒரு முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்னால் அவ்வாறான ஒரு கருத்துக்கு அமோக வரவேற்பு இருந்திருக்கக் கூடும்.

"தனிச்சிங்களச் சட்டத்தை 24 மணி நேரத்தில் கொண்டுவருவேன்" என்ற பேச்சு அந்தக்காலகட்டத்தில் வாக்குகளை அள்ளியெடுக்க வசதியான கோசமாக, வசப்படுத்தும் கோசமாக இருந்தது.

ஆனால் இப்போது சிங்கள மக்கள் மத்தியிலும் இனப்பிரச்சனையின் தாக்கங்கள் உணர்ந்துகொள்ளப்படுகின்றன.

இனப்பிரச்சனைக்கு எவ்வாறான தீர்வு காண்பது என்கின்ற விடயத்திலே மாறுபட்ட கருத்துக்கள் சிங்கள மக்கள் மத்தியில் இருக்கின்றன.

சமஷ்டி தீர்வு என்றால் நாடு பிரியும். வடக்கு-கிழக்கு ஒன்றாக இருந்தால் நாடு பிளவுபடும் நிலை வரும் என்று சொல்லப்படும் கருத்துக்களை சிங்கள மக்களில் ஒருசாரார் ஏற்றுக்கொள்ளக்கூடும்.

"தமிழர்களுக்கு அவர்கள் கேட்பதையெல்லாம் கொடுக்கமுடியாது. கொடுத்தால் நாங்கள் இங்கே குடியிருக்கமுடியாது" என்று கூறப்படும் இனவாத கருத்துக்குக்கூட ஒரு சிறு பகுதியின் ஆதரவு நிலவக்கூடும்.

ஆனால், இனப்பிரச்சனையே இல்லை என்ற கருத்தைப் பொறுத்தவரை சிங்கள மக்கள் மத்தியில் கூட அது சரிதான் என்ற எண்ணம் ஏற்படாது.

அதனைப் புரிந்துகொண்டுதான் ஆளும் கட்சியில் உள்ள முக்கியஸ்தர்கள் சிலர்கூட மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அவதிப்படுகிறார்கள்.

ஒரு கட்சிக்குள் இருந்தே முரண்பட்ட கருத்துக்கள், மாறுபட்ட குரல்கள் வெளியே வருகின்றன.

ஒருவர் தலையிலே ஓங்கி அடிக்க, மற்றவர்கள் முதுகைத் தடவிக்கொடுக்கிறார்கள்.

ஆனால் தலையிலே அடி பலமாக விழும்போது முதுகைத் தடவுபவர்களின் முயற்சியால் பயன் இல்லை. தலையில் விழும் அடியும் அதன் வலியுமே பெரிதாகத் தெரியும்.

அவ்வாறுதான் தமிழ் மக்களின் நிலையும். பிரதமர் ரணில் மற்றும் காமினி, அநுரா போன்றவர்கள் என்னதான் பேசினாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் பேச்சினால் ஏற்படும் அதிருப்திகளே பெரிதாகியுள்ளன.

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள இந்த நேரத்தில் ஜனாதிபதியின் உரைகள் அங்கு தேர்தலில் குதித்துள்ள ஆளும்கட்சி வேட்பாளர்களுக்கு சாதகமாக அமையப் போவதில்லை.

இன்னும் சொல்லப்போனால் ஜனாதிபதியின் உரைகள் சுயேச்சைக் குழுக்களுக்கு உற்சாகம் கொடுத்திருக்கின்றன.


தேர்தல் பிரச்சாரத்திற்காக ஜனாதிபதி அங்கெல்லாம் செல்கிறாரோ இல்லையோ, தெற்கில் அவரது பேச்சுக்களுக்கு கிழக்கிலும், வவுனியாவிலும் பதில் சொல்லப்படுகிறது.

தவறான நபர்களை பட்டியலில் வைத்துக் கொண்டிருந்து, வாக்காளர்கள் என்ன தீர்ப்பு தரப்போகிறார்களோ என்று யோசித்துக் கொண்டிருந்த தமிழ் கட்சிகள் சிலவும் ஜனாதிபதிக்கு மறைமுகமாகவேனும் நன்றி சொல்லியாகவேண்டும்.

ஜனாதிபதியின் பேச்சுக்கு மறுப்புத் தெரிவித்து பேசுவதே நல்லதொரு பிரச்சாரத் தந்திரமாக பயன்படுகிறது.

சொல்லிக்கொள்ள கொள்கை இல்லை.

## எக்ஸ்ரே ரிப்போர்ட்




## எங்கே ஈரோஸ்? இதிலே யார் ஈரோஸ்?

## மக்களைக் குழப்பும் பிரசுரங்கள்

**நாரதர்**

தமிழ் பேசும் மக்களுக்காக இதுவரை செய்த பணிகள் என்னவென்று கேட்டால், விரல்விட்டு எண்ணிக்கூட பதில் சொல்ல முடியாதவர்கள் எல்லாம் வேட்பாளர்கள். ஆயினும் என்ன? ஜனாதிபதியின் உரைக்கு பதில்சொல்லி தமிழர்கள் மீதான தமது அபிமானத்தை பறைசாற்ற ஜனாதிபதியே வாய்ப்புத்தேடிக் கொடுத்துவிட்டார்.

கிழக்கிலும், வவுனியாவிலும் சுயேச்சைக் குழுக்கள் வெற்றிபெறும் பட்சத்தில் அவை முதல் காரியமாக செய்யவேண்டிய பணி ஒன்றுண்டு. ஜனாதிபதியை சந்தித்து தங்கள் வெற்றிக்கு வழி செய்தமைக்கு நன்றி சொல்லவேண்டும்.

■

பொதுவாக கிழக்கிலும், வவுனியாவிலும் குட்டித் தேர்தலில் மக்கள் ஒரு விசயத்தை மட்டும் ஓரளவு வெளிப்படையாகப் பேசுகிறார்கள்.

தாம் யாருக்கு வாக்களிக்கப் போவதில்லை என்பதை சொல்லுகிறார்கள்.

ஆனால் யாருக்கு வாக்களிக்கப் போகிறோம் என்பதை மட்டும் தமக்குள் இரகசியமாக வைத்திருக்கிறார்கள்.

இரகசியத்திற்குக் காரணம் பயம். சுயேச்சைக்குழுக்கள் என்று சொல்லப்பட்டாலும் அவற்றின் பின்னே இயக்கங்கள் இருப்பது பகிரங்க இரகசியம்.

ஆரம்பத்தில் சுயேச்சைக் குழுக்கள் என்று கூறப்பட்டாலும்கூட தற்போது தமக்கு சார்பான, அல்லது தம்மால் நிறுத்தப்பட்ட சுயேச்சைக் குழுக்களை இயக்கங்கள் ஆதரித்து பிரச்சாரம் செய்கின்றன. பிரசுரங்கள் அடித்து வெளியிடுகின்றன.

சில இயக்கங்களின் பிரசுரங்கள் ஒன்றோடு ஒன்று முரண்படுகின்றன.

"இனி கட்சி நடத்தி புண்ணியமில்லை. அபிவிருத்திச் சங்கமாக மாறப்போகிறோம் என்று முன்னர் அறிக்கை விட்டது" ஈரோஸ் அமைப்பு.

இந்த ஈரோஸ் என்ற பெயர் வந்தாலே ஒரே குழப்பம்தான்.

ஈரோசுக்கு அர்த்தம் என்ன? 'ஈழப்புரட்சி மாணவர் அமைப்பு' என்று சில பத்திரிகைகள் பெயர் சொல்லுகின்றன.

'ஈழப்புரட்சி அமைப்பு' என்பதே சரியானது.

மலையத்திலும் புரட்சி செய்யப் புறப்பட்டவர்கள் அவர்கள்.

விருப்பம்போல ஈழப்படம் கீறி அதில் தமது விருப்பப்படி மலையகத்தையும் இணைத்து 'தான் போக வழிகாணவில்லையாம். மூஞ்சூறு எதையோ தூக்கிக்கொண்டு போக நினைத்ததாம்' என்ற கதையாக இயக்கம் நடத்தினார்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் "இந்தியப்படை வற்புறுத்துகிறது அதனால் தேர்தலில் நிற்கிறோம்" என்று சில பகுதிகளில் சொன்னார்கள்.

தேர்தலில் வென்றவர்களை பின்னர் புலிகள் மிரட்ட வாக்களித்தவர்களை கைவிட்டு நாட்டைவிட்டு பறந்தார்கள்.

ஈரோஸ் அமைப்பு கலைக்கப்பட்டு விட்டதாக அதன் முன்னாள் தலைவர் திரு.வே.பாலகுமார் அறிவித்துள்ளார். தற்போது அவரும் ஈரோஸ் முக்கிய தலைவர்களும் புலிகள் அமைப்பில் இணைந்து செயற்படுகிறார்கள்.

கொழும்பிலே தாங்கள்தான் ஈரோஸ் என்று ஒரு குழு இயங்குகிறது.

அப்படியானால் பாலகுமார் பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால் வாய்திறக்க மாட்டார்கள். அந்தளவுக்கு தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்புகிறார்கள்.

இப்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு மிக நீண்ட பிரசுரம் ஒன்றை மட்டக்களப்பில் வெளியிட்டுள்ளார்கள்.


மட்டக்களப்பு மாநகர சபையில் மட்டுமே தமது கட்சி தேர்தலில்

(6ம் பக்கம் பார்க்க...)

தமிழர்கள் கஷ்ரப்படுகிறார்களாம். யார் சொன்னது? இப்ப தமிழர்கள் எல்லாரும் தனவந்தர்களாய் மாறிட்டினம். தேர்தலுக்கு வர்ணக்கலரிலை போஸ்டர்கள். கீழே பார்த்தால் தமிழ் மக்கள் என்று எழுதியிருக்குது. தேர் முட்டியிலையும் தேர்தல் சின்னம் கீறி இருக்கினம். அதுக்கு கீழே கீறினதும் கடவுள் எண்டு எழுதியிருக்கோ எண்டு பார்த்தனான். இல்லை. நல்ல காலம் கடவுள் தப்பினது.

வேட்பாளர் ஒருத்தரும் அவர் கட்சிக்காரர்களும் வாக்கு கேட்க வீடொன்றுக்குப் போயிருக்கினம். அந்த வீட்டிலை இருந்த பெண் ஒருவர் தினமுரசைக்காட்டி அதிலை முகப்பிலை அரிவாள் உருட்டைக்கட்டை சகிதம் இருந்த கவுண்டமணி கோஷ்டியைக் காட்டி "பாருங்கோ தம்பி எழுதியிருக்கினம்" எண்டு சொல்லியிருக்கிறா. உடனை அதிலை வந்த புத்திசாலித் தம்பி ஒருத்தர் "அது எங்களைச் சொல்லேல்லை. மற்ற ஆட்களை" எண்டு போட்டாரே பாருங்கோ, ஒரு போடு.

இப்ப பாருங்கோ செத்த வீடுகளுக்கு எக்கச்சக்கமான மரியாதை. யார் செத்தது எண்டு தெரியுதோ இல்லையோ சகல கட்சி வேட்பாளர்களும் பரிவாரங்களோடு வந்து முகத்தை சோகமாய் வைத்திருந்து..... படுற பாட்டைப் பார்க்கேக்கை எனக்கு ஒரு யோசனை. என்னெண்டு கேட்பியள். செத்தவருக்காகப் பரிதாபப்படுறதோ. அல்லது வேட்பாளர்களின் நிலையை எண்ணிப் பரிதாபப்படுகிறதோ எண்டதுதான்.



## அதிரடி அய்யாத்துரை

மலையில் ஒரு தலைமை வேட்பாளர் தனது கடைசிப் பிள்ளையின் சாதகமும் கையுமாய் அலையுறார். ஒண்டுமில்லைப் பாருங்கோ மண்ணின் மைந்தன் எண்டு சொன்னாலும் மக்கள் தன்னை கைவிட்டுப் போடுவினமோ எண்டதை முன்கூட்டியே அறியும் முயற்சியாம். எங்களுக்கென்ன அறியட்டுமன்.

அதிகாரம் இருந்த நேரத்திலை வேறை இயக்கங்களில் இருந்து கண் தெரியாமல் ஆடின ஆட்கள் சிலர் இப்ப வேறை இயக்க லேபிள்களோடை வந்து எலெச்சன் கேட்கினம். அவை ஆடினதை மறந்தாலும் சனம் அவை தங்களை ஆட்டுவிச்சதை மறக்குமோ.

மீன்பாடும் நாட்டிலை உயர் பதவியில் இருக்கிறவருக்கு பல பிரச்சனைகள். தன் வீட்டுப் பிள்ளை சொல்லுறதைக் கேட்கிறதோ அல்லது தன்னை இந்தளவுக்கு வளர்த்துவிட்ட மேலிடம் சொல்லுறதைக் கேட்கிறதோ என்பதுதான் பிரச்சனை. கடைசியிலை வென்றது சுயநலம்தானாம். சாமி சொன்னாச் சரிதான்.

எங்க-அரசியல் கூத்துக்கள் பற்றிப் பேசியாச்சு. இப்பவொரு பாரதிதாசன் பாடல் கேளுங்கோ. எல்லாம் ஒரு மாற்றத் துக்குத்தான்.

*முல்லை விலை என்ன என்றான்*
*இல்லை என்று நான் சிரித்தேன்.*
*பல்லை இதோ என்று காட்டிப்*
*பத்து முத்தம் வைத்து நின்றான்.*

................................................................

*பின்னலைப் பின்னே கரும்பாம்பென்றான்-உடன்*
*பேதை துடித்தேன். அணைத்து நின்றான்.*
*கன்னல் என்றான் கனியிதழைக்*
*காதல் மருந்தென்று தின்றான்.*

பார்த்தியளோ? என்ன நயம்! இப்பவும் பாடுகினம் பாருங்கோ 'ஆய்....ஊ...யா...கூ...சிக்குபுக்கு ரயில் தண்டவாளம்' எண்ட ஸ்ரைலிலே.

■

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அல்ஜீரியாவில் தொடரும் இராணுவ ஆட்சி!

## தினசரி நடக்கும் படுகொலை வேட்டைகள்!!



அல்ஜீரியா நாட்டின் தலைநகரான அல்ஜீயர்சின் புறநகர்ப்பகுதியில், கடந்த மாதம், ஒரு பொலிஸ்காரர் சாதாரண உடையில் தன் குடும்பத்துடன் சென்று கொண்டிருந்தார். உள்நாட்டுப்போர் நடந்துகொண்டிருப்பதனால் ஆங்காங்கே சோதனைச் சாவடிகள் பொலிசாரால் அமைக்கப்பட்டிருந்தன. அத்தகைய சாவடி ஒன்றில் பொலிஸ்காரரும் தனது பொலிஸ் அடையாள அட்டையினை காவலுக்கு நின்றிருந்த ஒரு பொலிசாரிடம்- மகிழ்ச்சியாக- காண்பித்தார். அவ்வளவுதான்! அதே காவல் பொலிஸ்காரர், தனது கூரியவாளை உருவி, அந்த அப்பாவிப் பொலிஸ்காரரின் தலையைச் சீவிவிட்டார். அவருடைய மனைவியும் பிள்ளைகளும் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இந்தப் பயங்கரச் சம்பவம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சி அல்ஜீயர்ஸ் நகரில் சர்வ சாதாரணம். காவலுக்கு நின்றவர்கள் உண்மைப் பொலிஸ்காரரல்ல. அல்ஜீரியா நாட்டினை ஒரு தீவிர இஸ்லாமியக் குடியரசாக மாற்றி அமைக்க வேண்டுமென்று பல்லாண்டுகளாக வன்முறைப் போரில் ஈடுபட்டுவரும் இஸ்லாமிய விமோசன முன்னணியின் ஆயுதப் படைப்பிரிவே இத்தகைய பயங்கரச் செயல்களில் ஈடுபட்டு வருகிறது.

இ.வி.முன்னணியினை அல்ஜீரிய அரசாங்கம் 1992ல் தடை செய்ததைத் தொடர்ந்து வன்முறை தீவிரமடைந்துவிட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 3500 பேர் கொல்லப்பட்டுவிட்டனர். பெரும்பாலான புத்திஜீவிகள் இவர்களுள் அடக்கம். ஜனாதிபதி ஒருவரும் கொலைசெய்யப்பட்டார்.

இரண்டு முன்னாள் பிரதமர்கள் ஃபிரான்ஸுக்கு ஓடிவிட்டனர். உயர்தர அரச அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிசார் ஆகியோரைத் தவிர அப்பாவிப் பொதுமக்களே அதிகமாக படுகொலை செய்யப்படுகின்றனர்.

அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப் பட்டு நாட்டின் முக்கியமான நகரங்கள்- தலைநகர் அல்ஜீயர்ஸ் உட்பட-இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோதிலும் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது முடியாத காரியமாகவே இருக்கிறது.

ஃபிரான்ஸ் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து அல்ஜீரியாவை விடுவிக்க 1954 முதல் 1962வரை- எட்டு ஆண்டுகள் மிகத் தீவிரமான போராட்டங்கள் நடைபெற்றன.

போராட்டங்களை முறியடிக்க ஃபிரெஞ்ச் அரசாங்கம் கடுமையான அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டது. இதனால் 8 ஆண்டுப் போராட்டங்களினால் 3 இலட்சம் பேர் உயிரிழந்தனர். ஆனால் சுதந்திரம் கிடைத்த பின்னர் பதவியைக் கைப்பற்றுவதற்காக முட்டி மோதிய பல குழுக்கள் நாட்டை இரத்தக் காடாக்கத் தலைப்பட்டுவிட்டன.

நாட்டில் அந்நியர்கள் எவரும் நடமாட முடியாது. அந்நாட்டில் ஃபிரெஞ்ச் ஆட்சி இருந்தமையினால் மிக நெடுங்காலத்துக்கு முன்னர் அங்கு குடியேறி வாழ்ந்தவர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அந்த நாட்டுக்குடியுரிமை பெற்றவர்கள்கூட படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். குறிப்பாக இ.வி. முன்னணியின் நடவடிக்கைகளுக்கு விரோதமானவர் என்று சந்தேகப்படும் எவரும் உயிருடன் உலாவ முடியாது.

இத்தனை கட்டுக்காவல்கள் இருந்தும் தலைநகரில் சர்வ சாதாரணமாக இந்த முன்னணியைச் சேர்ந்தவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் பவனி வருகின்றனர். மாலையானதும் எவரும் வெளியே தலைகாட்ட முடியாது.

தொலைக்காட்சியில் பிறநாட்டு ஒளிபரப்புகள் எதுவும் பார்க்க முடியாது. வெளிநாட்டு நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக எங்காவது 'டிஷ் அன்ரனா' பொருத்தப்பட்டிருந்தால், அவை பிடுங்கி உடைத்து நொறுக்கப்படும். திரை அரங்குகள் மூடப்பட்டுவிட்டன. மதுபானக் கடைகள் எதுவுமே இல்லை. பெண் நோயாளிகள் ஆண் மருத்துவர்களிடம் வைத்தியத்துக்காகச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக அந்நாட்டில் இஸ்லாமிய ஆட்சிக் கோட்பாடுகள்-சட்டங்கள் அமுலில் இருக்கவேண்டும் என்பதே இ.வி. முன்னணியின் கொள்கை. அல்ஜீயர்சில் பிறநாட்டுத் தூதரகங்கள் கூட செயலாற்ற முடியாத சூழ்நிலை. பிறநாட்டுத்தூதரக அதிகாரிகள் கூடக் கொல்லப்பட்டுள்ளனர்.

பெண்கள் இஸ்லாமிய முறைப்படி உடைகள் அணிந்து செல்லவேண்டும். பள்ளிக்கூடங்களிலும் இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கமைவான பாடத்திட்டங்களே பின்பற்றப்படவேண்டும். இவற்றில் ஏதாவது மாறுபாடுகள் இடம்பெறுமானால் சம்பந்தப் பட்டவர்களின் தலை உருளும்.

நாட்டின் பொருளாதாரம் நலிந்துவிட்டது. வளம் நிறைந்த நாட்டில் விவசாயம் கிடையாது. 1000 கி.மீட்டர் நீளக் கடற்கரை இருந்தும், கடற்றொழில் கிடையாது. உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி துன்ப துயரங்களில் சிக்கிச் சீரழிவோரையே நாட்டில் காண முடிகிறது. அல்ஜீயர்ஸ் நகரில் அசுத்தங்களும் கழிவுகளும் பல மாதங்களாக அகற்றப்படாமல் அழுகி நாற்றமெடுத்துள்ளன.

அல்ஜீரியாவில் தொடர்ந்து இராணுவ ஆட்சி நடைபெற்று இரண்டு வருடங்களுக்கு முன்னர் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இஸ்லாமிய விமோசன முன்னணி போன்ற தீவிரவாத இஸ்லாமிய இயக்கங்கள் ஆட்சியினைக் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக அங்கு ஒரே கட்சி ஆட்சி நடைமுறைப்படுத்தப் பட்டது. ஆனால் ஊழலும் அராஜகமும்தான் தலைவிரித்தாடுகின்றன.

இஸ்லாமியத் தீவிரவாதிகளை வன்முறை மூலம் ஒழித்துக்கட்ட, அவர்களுக்கு எதிரான வன்முறைக்குழுக்கள் இப்போது தலையெடுத்து ஈவிரக்கமற்ற வகையில் படுகொலைகளையும் சித்திரவதைகளையும் புரியத் தொடங்கியிருக்கின்றன. இராணுவமும் பொலிசும்கூட மனிதாபிமானமற்றவகையில் பலகொடுமைகளைப் புரிகின்றன.

இத்தனைக்கும் அந்நாட்டின் அரசியல் கட்சிகள் சில சேர்ந்து ஒரு சமாதான மாநாட்டினை ஜனவரி இறுதியில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. தடை செய்யப்பட்ட இ.வி.முன்னணிக்கும் அழைப்புவிடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அம் முன்னணி இதில் பங்கெடுக்கவில்லை. இருப்பினும் 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் இரத்த வெறி ஆட்டங்கள் ஓரளவாவது முடிவுக்கு வரக்கூடும் என்று அல்ஜீரிய மக்கள் அங்கலாய்ப்புடன் காத்திருந்தனர். ஆனால் உயர்தர இராணுவ பீடம் இறுதி நேரத்தில் விடுத்த அறிக்கை சகல அரசியற் கட்சிகளையும் கூட்டத்தை விட்டு வெளியேறவைத்துவிட்டது. நடைமுறையிலுள்ள ஐவரைக் கொண்ட அதிகார சபையின் காலக்கெடு முடிவடைவதனால் ஓர் இராணுவ அதிகாரியே ஜனாதிபதியாக நியமிக்கப்படுவார் என்று இராணுவபீடம் அறிவித்தது. "பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய" கதைபோன்று அந்த இராணுவபீடத்தின் அறிக்கை இருந்தமையினால் சகல கட்சிகளும் இருக்கைகளைவிட்டு எழுந்து வெளியேறி விட்டன.

இதனால் அல்ஜீரியாவுக்கு விமோசனம் அண்மையில் இல்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. ■

## உலக ரவுண்டப்

## மூக்கை கடித்து டொலர் பறித்தார்கள்

எட்ரோபிக்கோ நகரைச் சேர்ந்த ஒருவரின் மூக்கை கடித்துவிட்டு அவரிடம் இருந்த 15 டொலர் பணத்தை பறித்துச் சென்றார்கள் கொள்ளையர்கள்.

வாகன தரிப்பிடம் ஒன்றில் கடிபட்டவர் காருக்குள் இருந்தார்.

அப்போது நேரம் அதிகாலை ஒன்றரை மணி. ஐந்துபேர் காருக்கு அருகில் வந்து தாம் பொலிசார் என்றும் அவரை காருக்கு வெளியே வருமாறும் கூறினார்கள்.

வெளியே வந்தவருக்கு அவர்கள் பொலிஸ் அல்ல என்று விளங்கிவிட சண்டை மூண்டது. அப்போது அவர்மீது பாய்ந்த கொள்ளையன் ஒருவன் அவரது மூக்கை கடித்துவிட்டான். அவர் வலியால் துடித்தபோது அவரிடமிருந்து 15 டொலரையும் பறித்துக்கொண்டு ●

# ஆணுறுப்பை வெட்டி எறிந்த பெண்! நிரபராதி என்று நீதிமன்றம் தீர்ப்பு!!

அமெரிக்காவையே கலக்கிக்கொண்டிருந்த வழக்கில் தீர்ப்புச் சொல்லப்பட்டு விட்டது.

தனது கணவரது ஆணுறுப்பை வெட்டிய லேரெனா என்னும் பெண் நிரபராதி என்று நீதிமன்றம் விடுதலை செய்துவிட்டது.

மனநிலை சரியில்லாத நிலையிலும், தனது கணவரின் வக்கிரமான சித்திரவதைகளை தாங்கமுடியாமலும் லேரெனா அப்படி நடந்துகொண்டார் என்று தனது தீர்ப்பில் நீதிபதி கூறியிருக்கிறார்.

பெண் விடுதலை அமைப்புக்கள் மகிழ்ச்சியில் துள்ளுகின்றன.

ஆண்கள் சார்ந்த அமைப்புக்கள் அச்சத்தில் நடுங்கியுள்ளன.

யூன் 23 1992 காலையில் தன்னோடு பலவந்தமாக உறவுகொள்ள முயன்ற தனது கணவரின் ஆணுறுப்பை சமையலறையில் இருந்த கத்தியால் வெட்டினார் லேரெனா.

எனினும் வைத்தியர்கள் பெருமுயற்சி செய்து ஆணுறுப்பை மீண்டும் இணைத்தனர்.

தற்போது நீதிமன்றம் நீண்ட விசாரணையின்பின் லேரெனாவை விடுவித்துள்ளது. ஆண்கள் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது என்கிறார் தீர்ப்பைக் கேட்ட அமெரிக்கர் ஒருவர். ■

# சினிமா பாணியில் சினிமா திருட்டு!

சினிமாப் படங்களில் நூதனமான திருட்டுச் சம்பவங்கள் காட்டப்படுவதுண்டு.

சினிமாப் பாணியில் உண்மையாகவே சில திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் பற்றி நாம் கேள்விப்பட்டதுமுண்டு.

ஆனால் சினிமாப் பாணியில் சினிமாப் படப்பெட்டிகளையே திருடிச் சென்றுவிட்டது ஒரு கும்பல்.

இந்தியாவில் டில்லியில் உள்ள பிலிம் கொலனி என்ற இடத்தில் சினிமாப்பட விநியோகஸ்தர் ஒருவரின் அலுவலகம் இருக்கிறது.

வாகனம் ஒன்றில் வந்த கும்பல் ஒன்று அலுவலகத்திற்குள் புகுந்து சினிமாப்படப் பெட்டிகளை தூக்கி ஏற்றியிருக்கிறது.

அப்போது அலுவலகத்தில் யாரும் இருக்கவில்லை. அருகில் உள்ள கடைக்காரர் விசாரித்தபோது, "அலுவலகத்தை வேறு இடத்துக்கு மாற்றுகிறோம்." என்று கும்பல் சொல்லியிருக்கிறது. படப்பெட்டிகளோடு அவர்கள் பறந்துவிட, அலுவலகம் வந்த விநியோகஸ்தர் அதிர்ந்து போனார்.

சூர்யா, திரங்கா, சிவசக்தி, இன்சாப் போன்ற வெற்றிப்படங்களாக தெரிந்தெடுத்து கொண்டுபோய்விட்டது கும்பல்.

பொலிஸ் வலைவீசித் தேடுகிறது. கும்பல் இதுவரை சிக்கவில்லை. ●



அடடா.. அடடா.. என்ன சுவை. என்ன சுவை. ஒரு முறை இழுப்பதே சொர்க்கம் என்று நினைத்து இவர்கள் புகைப்பது ஹெரோயின் போதையை! பாகிஸ்தானில் போதைப் பொருட் கடத்தலும் பாவித்தலும் அதிகமாகி வருகிறது. கராச்சி தெருமுனையில் போதை ஏற்றுவதில் மும்முரமும் அக்கறையோடு இருக்கும் இருவர்தான் படத்தில்.

## உதட்டிலிருந்து எடுத்துக்கொள்க!



ஒட்டகச் சிவிங்கிமீது மகா பிரியம் இந்த பதினொரு வயதுச் சிறுவனுக்கு. நிலத்தில் போட்டால் மண்படுமோ என்று நினைத்து தன் உதட்டால் உணவை ஏந்தி உண்ணக் கொடுக்கிறான். சென்னை நகரில் கமராவில் சிக்கிய காட்சி இது.

### எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

நிற்பதாகவும் வெளிச்சவீடே தமது சின்னம் என்றும் அந்தப் பிரசுரத்தில் கூறியுள்ளனர்.

"ஏன் மட்டக்களப்பு மாநகரசபையில் மட்டும் போட்டியிடுகிறோம் என்றால் கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ள உள்ளூராட்சி சபைகளில் மட்டக்களப்பு மாநகர சபை மட்டுமே சிகரமாக இருக்கிறது" என்று காரணம் சொல்லியிருக்கிறார்கள்.

அது உண்மையாக இருக்குமோ என்று யோசித்து முடிப்பதற்கிடையில் திருகோணமலையில் இருந்து ஒரு பிரசுரம் ஈரோஸ் என்ற பெயரில் வந்திருக்கிறது.

"திருமலை நகரசபையில் போட்டியிடுகிறோம். நாங்கள் மக்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமாச் செய்த அணியினர்" என்ற ரீதியில் அந்தப் பிரசுரம் வந்துள்ளது.

இப்போது உள்ள கேள்வி இதுதான். 'ஈரோஸ் என்ற அமைப்பு இப்போதும் உண்டா?'

உண்டு எனில் கொழும்பு ஈரோஸ், மட்டக்களப்பு ஈரோஸ், திருமலை ஈரோஸ், என்று மூன்று ஈரோசுகளுக்குள் எந்த ஈரோஸ் உண்மையான ஈரோஸ்?

பாலகுமாரால் கலைக்கப்பட்டது எந்த ஈரோஸ்?

கட்சி நடத்த முடியாது. கிழக்கில் அபிவிருத்தி பணி செய்யப்போகிறோம் என்று அறிக்கைவிட்டது எந்த ஈரோஸ்?

மக்களை ஈரோஸ் என்ற பெயரில் ஏமாற்ற முயல்பவர்கள் யார்?

மட்டக்களப்பு மாநகரசபையில் போட்டியிடுகின்ற குழுவினரா? அல்லது, திருகோணமலை நகரசபையில் போட்டியிடுகின்ற குழுவினரா என்பதை யார் தெளிவாக்கப் போகிறார்கள்?

இல்லாவிட்டால் இவர்களில் போலிகள் யார் என்று தெரியாமல் மக்கள் வாக்களித்து ஏமாளிகளாகும் நிலைதான் ஏற்படும்.

ஈரோஸ் அமைப்பில் முன்னர் இருந்தவர்கள் என்பதற்காக அவர்கள் இப்போதும் ஈரோஸ் என்று எப்படி நம்புவது?

தலைவரே கட்சியை கலைத்துவிட்டு புலிகளோடு இணைந்து செயற்படும்போது கீழே இருந்தவர்கள் 'நாம்தான் ஈரோஸ்' என்றால் அர்த்தம் என்ன? நாளை புலிகளோ அல்லது வேறு யாருமோ மிரட்டினால் நாட்டைவிட்டு ஓடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் போல் இவர்களும் தலைமறைவானால் வாக்களித்தவர்கள் என்ன செய்வது? ஆக, மொத்தத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இவ்வாறான வேடிக்கைகள், குழப்பங்கள் முடியைப் பிய்க்கவைக்கும் சிக்கல்களுக்கு குறைவில்லை.

அரசியல் ரீதியில் மிக முன்னேற்றமான சிந்தனைகொண்டவர்கள் இலங்கையில் உள்ள தமிழ்பேசும் மக்கள் என்று கூறப்படுவதுண்டு.

அதனை பொய்ப்பித்து பக்கத்தில் உள்ள தமிழ்நாட்டு அரசியலைவிட தரம் தாழ்த்த சிலர் நினைப்பது புரிகிறது.

ஈரோஸ் மட்டுமல்ல, ஏனைய அமைப்புக்கள் விடுத்துள்ள அறிக்கைகளும், பிரசுரங்களும்கூட முன்னுக்குப் பின் முரணானவைதான். அவற்றை அடுத்த வாரம் பார்க்கலாம். ■

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# அழிவையும்-அவலத்தையும் உருவாக்கி நிற்கும் இலங்கையின் குறுகிய இனமத வாதம்!

**அலசுவது - இராஜதந்திரி**

இலங்கை அதன் 46-வது சுதந்திர தினத்தை அண்மையில் கொண்டாடியிருந்தது.

இலங்கையின் மூன்றாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவிருக்கும் டிங்கிரி பண்டா விஜேதுங்க கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் 46-வது சுதந்திரதினத்தை குறிக்கும் வகையில் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

இதே சுதந்திர சதுக்கத்தில் கடந்த ஆண்டு இலங்கையின் 45-வது சுதந்திரதினம் கொண்டாடப்பட்டிருந்தது. மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா மங்கள பேரிகைகள் ஒலிக்க சுதந்திர சதுக்கத்தில் தேசிய கொடியை ஏற்றி வைத்த காட்சி இன்றும் மனதில் நிழலாடுகின்றது.

கடந்த வருடம் காலையில் சுதந்திர சதுக்கத்தில் சுதந்திர தின வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டதையடுத்து மாலையில் கொழும்பு சுகததாஸா விளையாட்டரங்கில் ஆயுதப் படையினரின் சாகஸ நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றிருந்தன.

இந்த மாலை நேர நிகழ்ச்சிகளையும் அன்று திரு. ரணசிங்க பிரேமதாசா சிறு பிள்ளைபோல இருந்து கண்டுகளித்ததை தொலைக்காட்சி நாடு முழுவதும் ஒளிபரப்புச் செய்திருந்தது.

இத்தடவையும் வழமை போலவே சுதந்திர சதுக்கம், சுதந்திர தின வைபவத்துக்காக களை கட்டியிருந்தது.

அமைச்சர்கள், இராஜதந்திரிகள், படை அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் சுதந்திர சதுக்கத்தில் கூடியிருந்தனர்.

சுதந்திர சதுக்கம் கடந்த ஆண்டில் இருதடவைகள் சனக்கூட்டத்தினால் சூழப்பட்டிருந்தது. 45-வது சுதந்திர தினத்துக்காக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மக்கள் அங்கு கூடியிருந்தனர்.

இதனையடுத்து இரண்டாவது தடவையாக கடந்த மே மாதம் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் இறுதிச்சடங்குகளுக்காக பெருமளவு பொதுமக்கள், மற்றும் வெளிநாட்டுத் தலைவர்கள், ஆயுதப் படையினர் ஆகியோர் சுதந்திர சதுக்கத்தில் குழுமியிருந்தனர்.

எனவே ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் இறுதிச்சடங்குகளையடுத்து சுதந்திர சதுக்கத்தில் பெருமளவு பொதுசனத்தைக் கூடச் செய்த ஒரு வைபவமாகவே இந்த ஆண்டின் 46-வது சுதந்திர தினம் விளங்கியிருந்தது.

இத்தடவை சுதந்திர தின வைபவத்தை முன்னிட்டு சுதந்திர சதுக்கத்துக்கு வந்திருந்த ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் புது முகங்களாகவே இருந்தனர். இதுதவிர இராணுவத் தளபதி, கடற்படைத்தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் புதுமுகங்களாவே இருந்தனர். புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி. சில்வா, முன்னாள் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்யரத்னவின் இடத்தில் நின்றிருந்தார்.

கடந்த ஆண்டு காலிமுகத்திடலில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட கடற்படைத்தளபதி கிளான்ஸி பெர்னாண்டோவின் இடத்தில் புதிய கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகரா காணப்பட்டார்.

இளைப்பாறிய பொலிஸ்மா அதிபர் ஏனஸ்ட் பெரேரா[illegible]த்தில் புதிய பொலிஸ்மா அதி[illegible] டி. சில்வா காணப்பட்டார்.

இதேவேளை கடந்த ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்த திரு. அனுரா பண்டாரநாயக்கா, இத்தடவை சுதந்திர சதுக்கத்தில் ஆளும் கட்சி அமைச்சர்கள் நடுவே ஓர் அமைச்சராக அமர்ந்திருக்கக் காணப்பட்டார்.

திரு. அனுரா பண்டாரநாயக்காவின் சகோதரியும், மேல் மாகாண சபை முதலமைச்சருமான திருமதி. சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா சுதந்திர சதுக்கத்தில் முக்கிய விருந்தினர்களுக்கான முன்வரிசையில் அமர்ந்திருக்கக் காணப்பட்டார்.

இவ்வாறு அரசியல், இராணுவத் துறைகளில் பல புதுமுகங்களைக் கொண்டதாகவே சுதந்திர சதுக்கத்தில் இத்தடவை இலங்கையின் 46-வது சுதந்திரதினம் கொண்டாடப்பட்டிருந்தது.

சுதந்திர சதுக்க வைபவங்களின் இறுதி நிகழ்ச்சியாக ஜனாதிபதி, பிரதம மந்திரி உட்பட பிரமுகர்கள் பலர் இலங்கையின் முதலாவது பிரதம மந்திரியாகவிருந்த அமரர் டி.எஸ். சேனநாயக்காவின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இந்த மலரஞ்சலி செலுத்தும் நிழ்ச்சியில் அமரர் டி.எஸ்.சேனநாயக்கா பிரதம மந்திரியாகவிருந்தபோது அவரது அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜயவர்த்தனாவும் கலந்து கொண்டிருந்தார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான அமரர் டி.எஸ்.சேனநாயக்கா இன்று சுதந்திர சதுக்கத்தில் ஒரு மாபெரும் கற்சிலையாக நிற்கின்றார்.



அமரர் டி.எஸ்.சேனநாயக்கா இலங்கையின் சுதந்திரத்துக்காக உழைத்தவர்களில் முக்கியமானவர். சேர். பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம் போன்ற தலைவர்களுடன், திரு.டி.எஸ். சேனநாயக்கா இலங்கையின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்டார்.

அன்று இலங்கையில் வாழ்ந்த அனைத்து இன மக்களும் நாட்டின் சுதந்திரத்துக்காக தமது வேறுபாடுகளை மறந்து, இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்ட விதத்தில் உழைத்திருந்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே அனைத்து இலங்கையர்களினதும் குறிக்கோளாக இருந்தது. இதன் காரணமாக அவர்கள் தம்மிடையே குறுகிய இன,மத,வகுப்பு வாதக் கண்ணோட்டங்களுக்கு இடந்தந்திருக்கவில்லை.

அன்று இலங்கையர்கள் இவ்வாறு ஒருமித்த வகையில் தமது ஒற்றுமையை வெளிப்படுத்தியதால் இலங்கை எதுவித சிரமமுமின்றி இலகுவாக தனது சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது.

அயல்நாடான இந்தியாவில் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டம் தீவிரமானதாகவே காணப்பட்டது.

மகாத்மா காந்தியடிகள் சுதேசியம், சாத்வீகம் என்பவற்றின் அடிப்படையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்.

ஆயினும் அவரது அஹிம்சை வழியிலான போராட்டம் பலதடவைகள் பல்வேறு பின்னடைவுகளையும் கண்டிருந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டம் மும்முரமடைந்திருந்த காலப்பகுதியில், இந்து-முஸ்லிம் கலவரங்களும் தீவிரமடைந் திருந்ததே இப்பின்னடைவுகளுக்கு முக்கிய காரணமாக இருந்தது.

இந்தியாவில் சுதந்திரப் போராட்டத்தில் குதித்திருந்தவர்களுக்கெதிராக பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அடக்கு முறைகளைப் பிரயோகித்திருந்தவேளை, வட இந்தியாவின் பல பாகங்களிலும் இந்து- முஸ்லிம் கலவரங்களும் மோசமடைந்திருந்தன.

இதன் காரணமாகவே இந்தியாவுக்கு சுதந்திரத்தை வழங்க பிரிட்டிஷ் தயாரான போது இந்திய உபகண்டத்தில் இருந்தும் ஒரு தனி நாடாகப் பிரிவதில் பாகிஸ்தான் ஆர்வங்காட்டியிருந்தது.

இதனையடுத்து இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததும், பாகிஸ்தானும் தனி ஒரு நாடாக சுதந்திரம் பெற்றுக்கொண்டது.

ஆனால் இலங்கையில் சுதந்திரத்துக்கான குரல் அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் ஏகோபித்த முறையிலேயே ஒலித்திருந்தது. சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம், மற்றும் கலாயோகி ஆனந்தகுமாரசாமி ஆகியோர் பிரிட்டிஷ் ஆட்சியாளரின் பெருமதிப்புக்குரியவர்களாக விளங்கியிருந்தனர்.

ஆயினும் அவர்கள் தாம் சார்ந்த, இனம் மதம் என்ற வட்டத்துக்குள் இருந்தும் தமது செல்வாக்கைப் பிரயோகிக்கவில்லை.

அத்துடன் இலங்கையை வடக்கு-கிழக்கு, தெற்கு, மலையகம் என்ற அடிப்படையில் கூறுபோட்டும் அவர்கள் தமது அரசியல் கண்ணோட்டத்தைச் செலுத்தியிருக்கவில்லை.

ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் குறுகிய இன,மத, பிரதேச, வகுப்பு வாதங்களுக்கு முக்கியமளித்தவர்களாக இருக்கக் காணப்படுகின்றனர்.


இலங்கையில் இன்று கோரத்தாண்டவ மாடிவரும் இனப்பிரச்னை இலங்கையின் ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட தொன்றாகும்.

சுதந்திர இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்றிய பெரும்பான்மை இன அரசியலாளர்கள், தமது அரசியல் இலாபங்களுக்காக இனவாதத்தையே கருப்பொருளாக்கிக் கொண்டனர்.

எங்கும், எதிலும் இனக்குரோதத்துக்கு வழிவகுத்து தமது சொந்த நலன்களைப் பேரினவாத சக்திகள் பாதுகாத்து வந்தன.

இலங்கை பிரிட்டிஷ் காரரிடமிருந்து சுதந்திரமடைந்து 46 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. அத்துடன் சுதந்திர நாடு என்ற தரத்தில் இருந்தும் மேலுயர்ந்து ஒரு பூரண குடியரசு என்ற நிலையிலேயே இலங்கை இன்று காணப்படுகின்றது.

> "மனிதன் பிறக்கும்போது சுதந்திரமாகப் பிறக்கின்றான். வாழும்போது சங்கிலிப் பிணைப்புகளுக்குள் வாழுகின்றான்."
>
> ஜீன் ஜக்கூஸ் ரூசோ-பிரெஞ்சு தத்துவஞானி-



ஆயினும் இலங்கை பெற்ற சுதந்திரம் பெயரளவில் மட்டுமே காணப்படுகின்றதே தவிர நாட்டு மக்களின் உரிமைகள், நாட்டின் பொருளாதாரம், மற்றும் சமாதான-சகவாழ்வு என்பன தீய சக்திகளின் கெடுபிடிகளினால் கட்டுண்டிருக்கக் காணப்படுகின்றன.

"மனிதன் பிறக்கும்போது சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் வாழும்போது அவன் சங்கிலிப் பிணைப்புகளுக்குள் கட்டுண்டே இருக்கின்றான்."

(Man is born free; yet he is every where in chains) என்று பிரெஞ்சு தத்துவஞானியான ஜீன் ஜக்கூஸ் ரூஸோ

இலங்கையில் இன்று தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடைல் வேற்றுமைகள் நிலவக் காணப்படுகின்றன.

இதுதவிர பிரதேச ரீதியாகவும் வேற்றுமைகள் வேரூன்றியிருக்கக் காணப்படுகின்றன.

இத்தகைய பிரிவினைகளும், வேற்றுமைகளும் இன்று ஓர் இரத்த வெறிபிடித்த பிரச்னையாகவே மாறியிருக்கக் காணப்படுகின்றன.

இப்பிரச்னையை எவ்வாறு அரசியல் ரீதியாக இரத்தக் களரிக்கு இடமின்றித் தீர்த்து வைக்கலாம் என்பதிலேயே பலரும் ஆர்வங்காட்டுகின்றனர்.

உணர்ச்சி வசப்பட்ட பேச்சுக்கள், இனவாதக் கருத்துக்கள் என்பவற்றினாலேயே நாட்டின் இனப்பிரச்னை இன்று மோசமான கட்டத்தை எட்டியிருக்கக் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம் பெறும் யுத்தம் நாட்டைக் குட்டிச் சுவராக்குவதாக இருக்கின்றது.

நாட்டின் அபிவிருத்திக்கு செலவிடப்பட வேண்டிய பணத்தில் பெரும்பகுதி யுத்தப் பிரதேசங்களில் விமானக் குண்டுகளாகவும், துப்பாக்கி வேட்டுகளாகவும், வீணே விரயமாகி வருகின்றது.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஓர் அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டுமென்ற ரீதியில் இலங்கைப் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க சில வாரங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைப் பேச்சுவார்த்தை களுக்கு வரும்படி அழைப்பு விடுத்திருந்தார்.

அத்துடன் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு வரவேண்டுமென்பதில் இலங்கையின் புத்திஜீவிகள் மட்டத்திலும், சமயத்தலைவர்கள் தரப்பிலும் ஆர்வங்காட்டப்பட்டு வருகின்றது.

இராணுவத் தளபதி ஜெரி டி.சில்வா கூட இராணுவ அணுகுமுறைகள் மட்டும் இருந்தால் போதாது அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளும் வடக்கு-கிழக்கு பிரச்னை தீர்வு தொடர்பாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க அண்மைக்காலங்களில் அரசின் நிலைப்பாடு தொடர்பாக வெளியிட்டு வரும் கருத்துக்கள் விசனத்துக்குரியவையாகவே காணப் படுகின்றன.

"தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் நீரோட்டத்தில் முதலில் குதிக்க வேண்டும். இதன் பின்னரே அவர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்த முடியும். புலிகள் தமிழீழம் கேட்கிறார்கள். ஆனால் நாட்டை ஒருபோதும் பிரித்து விடமுடியாது."

"இந்த நாட்டில் சிங்கள மக்களே பெரும்பான்மையானவர்கள். ஏனைய சிறுபான்மை இன மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழ வேண்டும்."

"மலையகத் தமிழர்களிடம் மலையகத்தைக் கையளித்துவிட முடியாது."

மேற்கண்டவாறு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க அண்மைக்காலங்களில் தாம் பங்குபற்றும் கூட்டங்களில் உரை நிகழ்த்துவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளார்.

புலிகள் தாம் ஒரு ஆயுதமேந்திய போராட்டக் குழுவென்பதை வெளிப்படையாகவே தெரிவித்து வருகின்றார்கள்.

அத்துடன் தமது பலத்தையும் அவர்கள் ஆயுதப் போராட்டம் மூலமாகவே கட்டியெழுப்பியுள்ளார்கள். தமது நடவடிக்கை களையும் பெருமளவில் ஆயுத ரீதியாகவே அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள்.

ஆனால் அவ்வப்போது தமக்கு சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் இருப்பதாகவும், அவர்கள் கூறிவருகின்றனர்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க நாட்டைப் பிரித்துக் கொடுத்துவிடமுடியாது என்று கூறிவருகின்றார். ஜனாதிபதி மட்டுமல்ல இந்நாட்டில் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், இன சௌஜன்யத்தையும் விரும்பும் பெரும்பாலான மக்கள் நாடு பிரிந்துவிடக் கூடாது என்பதிலேயே அக்கறை காட்டுகின்றனர்.

இந்நிலையில் பிரிவினையைக் கோரி போரிட்டுவரும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரச தரப்பினர் சமாதானப் பேச்சுக்களை நடத்த வேண்டும். புலிகளும் பேச்சுக்களில் பங்குபற்றி இரு சாராரும் அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்குப் பிரச்னையை அணுக வேண்டுமென்பதே நாட்டு நலன் விரும்பிகளினது எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

ஆனால் ஜனாதிபதி நிகழ்த்திவரும் உரைகள் சமாதானப் பேச்சுக்களுக்கான சந்தர்ப்பங்களை கைநழுவச் செய்பவையாகவே இருக்கின்றன.

இந்நாட்டில் சிங்கள இனமக்கள் பெரும்பான்மையினராக இருப்பதும், ஆட்சியதிகார விடயங்களில் அவர்கள் கூடுதல் செல்வாக்கைச் செலுத்துவதும் நாடறிந்த விடயங்களே.

ஆனால் இந்நாட்டின் பிரதான சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் தாம்பூரண உரிமை பெற்ற மக்களாக தமது பிரதேசங்கள், பாரம்பரியங்கள் தம்மால் பாதுகாக்கப்பட்ட நிலையில் இந்நாட்டில் வாழவேண்டுமென்பதிலேயே முனைப்பாக இருக்கின்றனர்.

இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற அந்தஸ்தில் இருக்கும் திரு.டி.பி.விஜேதுங்க, தாம் நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிய ஒரு தலைவர் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

அவர் சிங்களவராக இருக்கலாம், அல்லது சிங்களவர்களுக்குள்ளேயே மேம்பட்ட கண்டியச் சிங்களவராகவும், பௌத்தராகவும் இருக்கலாம்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க தமது இனம் மதம் குறித்து கொண்டுள்ள கண்ணோட்டத்தையே ஏனைய சிறுபான்மை இனத்தவர்களும், தமது இனம், மதம் என்பன குறித்துக்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் இனம், மதம், பிரதேசம், பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வட்டத்துக்குள்ளிருந்து தீவிரக்கருத்துக்கள் வெளியிடப்படுமானால் இலங்கையும் ஒரு 'பொஸ்னியா'வாக மாறும் சூழ்நிலைகளே நாளடைவில் தோற்றம் பெறும்.

எனவே இன, மதவாதங்களினால் நாடு அடைந்துள்ள பின்னடைவுகளையும், அழிவுகளையும் ஒரு படிப்பினையாகக் கொண்டு செயல்படுவதே இன்று இன்றியமையாததாகின்றது.

இலங்கையில் இனவாதம், மதவாதம் என்பன ஒரு காலத்தில் நல்ல அரசியல் இலாபத்தை தேடித்தந்தது உண்மைதான். ஆனால் இக்குறுகிய வாதங்கள் தற்போது அழிவையும், அவலத்தையும், தருவனவாகவே இருக்கின்றன.

"நாட்டில் இனப்பிரச்னை எதுவுமில்லை; பயங்கரவாதமே நிலவுகின்றது" என்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கூறிவந்தார்.

ஆனால் தற்போது பெரும்பான்மை, சிறுபான்மை இனங்கள் என்ற வேறுபாடுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க, நாட்டில் இனப்பிரச்னை எதுவுமில்லை என்று தான் கூறியதை தன் வாயாலேயே மறுதலிக்க ஆரம்பித்துள்ளார்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# வாழ்க்கைத் துணைவரைத் தெரிவு செய்யும் வழி

## உளவியல் நிபுணர்களின் ஆலோசனைகள்

தங்கள் எதிர்காலக் கணவன் எவ்வாறு அமைய வேண்டும் என்று ஒவ்வொரு கன்னிப் பெண்ணும் கனவு காணுவாள். அவற்றை நனவாக்கும் வழிமுறைகளைப்பற்றி பிரபல உளவியல் நிபுணர்கள் இருவர் கூறும் கருத்துக்கள் இவை:

தான் கற்பனை செய்து வைத்துள்ள இலட்சணங்களனைத்தையும் கொண்ட ஒருவன் எப்படியாவது தன்பாதையில் வருவான் என்று காத்திருப்பதனால் பலன் கிட்டப் போவதில்லை. அத்தகைய வித்தைகள் தற்காலத்தில் நடப்பதில்லை, "இன்று அத்தகைய கற்பனைக் கணவனைத் தேடிக் கண்டுபிடிப்பதில் காலத்தையும் கருத்தையும் செலுத்தி முயற்சியிலீடுபடவேண்டும்" என்று டாக்டர் ஆலன் கெஸ்னர் தெரிவிக்கிறார். அவர் சில வழிமுறைகளைத் தருகிறார்.


- உங்கள் வாழ்க்கைத் துணைவனாக எத்தகைய நபர் வரவேண்டும் என்று நீங்கள் உங்களுக்குள் அலசி ஆராய்ந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பாதுகாவலராக கணவன் அமைய வேண்டுமா அல்லது உங்களுடைய வாழ்க்கையில் சம பங்கேற்பாளனாக இருக்க வேண்டுமா அல்லது வேறு எத்தகைய இலட்சணங்களை அவர் கொண்டிருக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

"இதனைத் தீர்மானித்துத் திடப்படுத்திக் கொண்டீர்களானால் இத்தகைய நபரை எங்கே கண்டுகொள்ளலாம் என்பதனை சுலபமாக அறிந்துகொள்ள முடியும்" என்கிறார் டாக்டர் கெய்ஸ்னர்.

"ஓரளவு அரசியலில் ஈடுபாடுடைய மங்கை ஒருத்தி என்னிடம் ஆலோசனை கேட்டு வந்தாள். அவளுடைய கற்பனைக் கணவனை கேளிக்கை விடுதிகளிலும் உல்லாசப் பொழுது போக்குமிடங்களிலும் இதுவரை தேடி அலைந்துள்ளாள். பலன் கிட்டவில்லை.

"இவளுக்கு அரசியலில் அதிக நாட்டம் இருப்பதைக் கண்ட நான், அரசியல் தொடர்பான பல்கைக்கழக பயிற்சி நெறி ஏதாவதொன்றில் ஈடுபடும்படி சொன்னேன். அவள் அதனைப் பின்பற்றினாள். இதனால் அரசியலில் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் ஒரு வேட்பாளரின் உதவியாள ரானாள். விரைவில் அரசியலைத் தன் வாழ்க்கை முறையாக ஏற்ற ஒருவனின் காதலியாகவும் மாறிவிட்டாள்." என்று டாக்டர் கெஸ்னர் கூறினார்.

- முக அழகு, உடல் அழகு ஆகியவற்றைக் கொண்டு உங்கள் கணவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம் என்று கருதி சுய அலங்காரங்களில் பொழுதையும்



**ஒப்பனை ஓரளவு அவசியம் தான். அதுவே வாழ்க்கையின் திறவுகோலாகவும் அமையக்கூடும். ஆனால்.......**

பொருளையும் கரைப்பதனால் பலன் போதுமான அளவு கிட்டப்போவதில்லை.

ஒப்பனை ஓரளவு அவசியம்தான். அதுதான் உங்கள் வாழ்க்கைக் கதவின் திறவு கோலாகவும் அமையக்கூடும். ஆனால் உள்ளே பண்டமில்லையானால் ஏமாற்றமே மிஞ்சும்.

"என்னிடம் ஆலோசனை கேட்டு வந்த ஒரு இளமங்கை சற்றுப் பருமனான உடலமைப்பினைக் கொண்டவளாக இருந்தாள். ஆனால் கவர்ச்சியுடன் காணப்பட்டாள். பருத்த உடல் அமைப்பினால் அவள் ஒருவகை ஊக்கமற்றவளாகவும் தாழ்வு மனப்பான்மை கொண்டவளாகவும் இருந்தாள். உடலமைப்பைப் பொருட்படுத்தாமல் சகலருடனும் கூச்சமின்றிப் பழகிவரும்படி அறிவுரை தந்தேன்.

"இதனால் தைரியமடைந்த அவள் தானாக அமைத்துக்கொண்டிருந்த ஒதுக்குப்புறத்தைவிட்டு வெளியில் உலவ ஆரம்பித்தாள். தனக்கேற்ற துணையினையும் விரைவாகத் தேடி மகிழ்ச்சியாக இன்று வாழ்கிறாள்."


இவ்வாறு கூறுகிறார் மற்றுமொரு உளவள ஊக்குவிப்பினரான டாக்டர் ரோபட் ஸ்டாஹ்மான். போலியான வேடம் போட்டு இணை தேட முயல்வது வாழ்க்கையில் கசப்பான அனுபவங்களிலேயே முடியும் என்று அவர் எச்சரிக்கிறார். தங்களைப் பற்றி பெரிதாக மற்றவர்கள் நினைக்க வேண்டும் என்று பாசாங்கு செய்பவர்களின் சாயம் வெகுவிரைவில் வெளுத்துவிடும். போலித்தன்மை நீடிக்காது என்கிறார் அவர்.


## நீங்களும் தைக்கலாம்

### இழையோட்டல் (Darning)


(37ம் முரசின் தொடர்ச்சி..)

கிழிச்சல் உடையிலுள்ள தையலுக்கு அல்லது கரைக்கு அல்லது கோட்டிற்கு அருகில் இருந்தால், போடும் ஒட்டை அந்தத் தையல் அல்லது கரை அல்லது கோடு வரையில் வளர்த்தி, அந்த ஒட்டுத் தையலைப் பழைய தையலுடன் அல்லது அந்தக் கரையுடன் அல்லது அக்கோட்டுடன் கலந்தாற்போலத் தைக்க வேண்டும்.









4. ஒட்டிற்கு அதே ரகத்துணி கிடைக்காவிட்டால், சட்டையில் மறைவிடமாக அல்லது இரட்டைத் துணியாக உள்ள இடத்திலிருந்து உட்பாகத்தில் இருக்கும் துணியை வெட்ட வேண்டிய அளவு வெட்டிக் கொண்டு வெட்டப்பட்ட இடத்தில் வேறு துணியை இணைக்க வேண்டும். இந்த மறைவிட ஒட்டுப் பார்வைக்குத் தெரியாது.

படம் 2ல் குறித்த பிரகாரம் ஒட்டுப் போட வேண்டிய அளவுக்கு நீண்ட சதுரம் அல்லது டக்குப் போட்டுக் கொள்ளுக. கிழிந்து பழுதான பாகத்தை டக்கு உள் மடிப்புக்கு 3/8 அங்குலம் மிகுதியை வெட்டித் தள்ளிவிடுக.

#### ஒட்டுப் போடுதல் (Patching)

**முறை 1 (Method 1)**

படம் 1ல் காண்பித்த பிரகாரம் உள் மடிப்புக்காக விடப்பட்டிருக்கும் 3/8 அங்குலம் துணியைத் தவறான பக்கமாக (Wrong side) ஓரம் மடித்து டக்கு ஒட்டிக்கொள்க.

**முறை 2(Method2)**

படம் 2ல் காண்பித்த பிரகாரம் உள் மடிப்புக்காக விடப்பட்டிருக்கும் 3/8 அங்குலம் துணியைச் சரியான பக்கமாக (Right sid) ஓரம் மடித்து டக்கு ஒட்டிக்கொள்க. படம் 1ல் மடித்த முறைக்கு எதிரிடையாக மடிக்கவும்.

**ஒட்டுத்துண்டு**

ஒட்டிற்கு வேண்டிய துண்டு, துவாரத்தின் அளவிற்கு ஒவ்வொரு பக்கமும் 1 1/4 அங்குலம் வளர்ந்து, பெரியதாய் இருக்கத் துண்டு போட்டுக் கொள்க.

**முறை 1 (Method1)**

படம் 3ல் ஒட்டுத்துண்டின் ஓரத்தை அதனுடைய சரியான பக்கம் (Right side) மடித்துக்கொண்டு, அதைக் கிழிந்த துவாரத்தின் மேல் மத்தியிலும் ஒழுங்காகவும் பொருந்தியிருக்க ஒட்டின் சரியான பக்கமும் கிழிந்த துணியின் சரியான பக்கமும் ஒரே பக்கம் இருக்கிறது போல அமைக்க. அப்படி ஒட்டைத் துவாரத்தின் மேல் அமைக்கும் பொழுது கிழிந்த துணியின் உட்பாகம் அல்லது தவறான பக்கம் (Wrong side) ஒட்டுத் துண்டு பொருந்தி இருக்க அமைத்துத் துவாரத்தின் ஓரமாக டக்குப் போடுக.

**முறை 2 (Method2)**

ஒட்டுத் துண்டின் ஓரத்தை அதனுடைய தவறான பக்கம் (Wrong side) மடித்துக்கொண்டு அதைக் கிழிச்சலுக்கு மேல் -அதாவது துணியின் சரியான பக்கமாகவும் (Right side) துவாரத்தின் மத்தியிலும் ஒழுங்காகப் பொருத்தி இருக்கச் செய்க. அப்படிச் செய்யும் பொழுது ஒட்டுத் துணியின் சரியான பக்கமும், கிழிந்த துணியின் சரியான பக்கமும் ஒரே பக்கம் இருக்கின்றாற்போல அமைத்து, துவாரத்தின் ஓரமாக டக்குப் போடுக.

படம் 4ம் படத்தில் காண்பித்த பிரகாரம் தையல் யந்திரத்தால் ஒட்டு ஓரமாகவும் துவாரத்தின் ஓரமாகவும் தைக்கவும். தையல் ஒவ்வொரு முனையிலும் வளர்ந்து இருக்கக் கவனித்துக்கொள்க.


## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

பரிசுத் திட்ட கூப்பன் இல-1

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது,

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.


## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது - சுகந்தினி

### முட்டை வெண்ணெய் சாண்ட்விச்

**தேவையானவை:**

வேகவைத்து துருவிய முட்டை- 1
சீஸ்- 25 கிராம்
மிளகாய்த்தூள்- 1/2 தே.கரண்டி
உப்பு- 1/4 தே.கரண்டி
மாஜரீன் அல்லது பட்டர்- 25 கிராம்

**செய்யும் முறை:**

1. மாஜரீனைச் சிறிது குழைக்கவும்
2. எல்லாச் சாமான்களையும் ஒன்றாகக் கலக்கவும்.
3. இரண்டு பாண் துண்டுகளின் மத்தியில் வைத்து சாண்ட்விச் தயாரிக்கவும்.

### சீஸ் ரோல்ஸ்

**தேவையானவை:**

பாண்துண்டுகள்- 10
பெரிய வெங்காயம்- 3
பச்சைமிளகாய்- 4 அல்லது 6
இஞ்சி சிறு துண்டு
சில்லி கோஸ்- 2 மே.கரண்டி
சீஸ்- 25 கிராம்
உப்பு- தேவையான அளவு
மாஜரீன் உருக்கியது- 3 மே.கரண்டி.



**செய்யும் முறை:**

1. வெங்காயம் இஞ்சி இரண்டையும் பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.
2. பாண்துண்டுகளை அப்பளக் குழவியில் நன்றாக அழுத்தி உருட்டி விடவும்.
3. இருபக்கமும் உருக்கிய மாஜரீனைத் தடவிக் கொள்ளவும்.
4. மேற்கூறிய கலவையை பாண் துண்டுகளில் வைத்து மெதுவாக உருட்டி, ஒரு குச்சியை செருகி சுமார் 400°f டிகிரியில் பேக் செய்யவும்.

## வீட்டுக் குறிப்புகள்

- பச்சை மிளகாய் அடிக்கடி உலர்ந்து விடும். அவ்வாறு காய்ந்து வாடி விடாமல் இருக்கவேண்டுமானால் காம்புகளைக் கிள்ளி எடுத்துவிடவும். பிறகு அவை வாடாமல் இருக்கும்.
- கத்திகளைக் கூர்மையாக்க உப்புத் தூளைப் போட்டுக் கவனமாக நுனியைத் தேயுங்கள்.
- துருப்பிடித்த கத்திகளின் துரு போவதற்கு அவற்றை ஒரு வெங்காயத் துண்டினால் நன்றாகத் தடவுங்கள். சிறிது நேரம் கழிந்த பின் நன்கு துடைத்து விடுங்கள். துரு போய்விடும்.
- தோசைக்கல்லில் வெடிப்புக்கள், ஓட்டைகள் ஏற்படுவதைத் தவிர்க்க, தோசை சுட்டு முடிந்ததும் கல்லை நன்றாக எண்ணைத் துணியால் துடைத்து விடுங்கள்.
- பட்டுச்சேலைகளைக் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கொரு தடவையாவது தோய்த்து உலர்த்த வேண்டும்.
- சரிகைகள், பட்டு, ரேயோன், எம்பிரொய்டரி துணிகளைப் பின்புறமாகப் போட்டு இஸ்திரி செய்யுங்கள்.

# பசும்பாலிலும் பழுதிருக்கலாம்!

## குழந்தைகளுக்குக் கொடுக்கும் போது கவனிக்கவும்



வளரும் குழந்தைகளுக்குப் பசுவின் பால் நல்ல பலனைத் தருகிறது. இதிலுள்ள கல்சியச் சத்து குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கும், தசைகளின் வளர்ச்சிக்கும் உதவுகிறது.

குழந்தைகளுக்குக் கல்சியச் சத்து எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறதோ அந்த அளவுக்கு இரத்த அழுத்தம் சீரடைகிறது.

பொஸ்ரன் பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் மத்தியூ கில்மன், சிறு வயதிலேயே கல்சியச் சத்தை அதிகமாகப் பெறுகின்ற பிள்ளைகள் நோய்கள் அற்றவர்களாகவும் தேக ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் வளர்கின்றனர் என்கிறார்.

சந்தையில் பெறப்படும் பசும்பால் பெரும்பாலும் கலப்படமில்லாமல் கிடைப்பதில்லை. பல இன மாடுகளில் இருந்து பெறப்படும் அத்தனை பாலையும் ஒன்று கலந்து பக்குவப்படுத்தி பைகளில் அல்லது போத்தல்களில் அடைத்தே சந்தையில் பால் விற்கப்படுகிறது. பொதுவாக பசும்பாலில் ஒரே அளவிலான சத்துக்கள் இருந்த போதிலும் சில பசுக்களில் பெறப்படும் பாலில் சில குறைபாடுகளும் இருக்கலாம். இதனால் சந்தையில் கிடைக்கும் பாலிலும் சில மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் தான் குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் பால் ஒரே பசுவிடம் இருந்து பெறப்படும் பாலாக இருத்தல் சிறந்தது என்று எமது முன்னோர்கள் கூறியுள்ளனர்.

# நீதி கேட்ட பெண்ணைக் கேலி செய்தனர்! எட்டி உதைத்தாள்- எலும்புகள் முறிந்தன!!

பெண்களோடு வாலாட்டுகிறவர்கள் பலர். அவர்கள் திருப்பித் தாக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையில்தான் அப்படிச் செய்கிறார்கள்.

இப்போது நிலமை மாறிவருகிறது. பெண்களும் தற்காப்புக்கலையை பயிலத் தொடங்கிவிட்டனர்.

சினிமாக்களில் பெண்களை வீரமாகச் சித்தரிக்கும் போது கைதட்டி வரவேற்கும் பலர்கூட பெண்கள் தற்காப்புக்கலை பயிலும் போது முகம் சுளிக்கின்றனர்.

வக்கிரங்களும், ஆண்-பெண் உறவுகள் பற்றிய புரிதல்கள் இல்லாமையும் பெண்களை அச்சுறுத்தும் இக்காலகட்டத்தில் தற்காப்பு கலையின் அவசியம் உணரப்படுகிறது.

தற்காப்புக்கலையின் பெறுமதியை கீழே வரும் சம்பவம் உணர்த்துகிறது.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பற்றீஸியா கேண் என்ற 16 வயது மாணவியை பாதையில் வழிமறித்த கும்பல் ஒன்று கடத்திச் சென்றது.

பாலியல்வதைக்கு உள்ளாக்கிவிட்டு அந்த மாணவியை வீதியில் நிர்வாணமாகப் போட்டுச் சென்றது அந்தக் கும்பல்.

பொலிசிலே புகார் செய்யப்பட்டது. காரண மானவர்கள் கைது செய்யப்பட்டனர். எனினும்



போதிய சாட்சியம் இல்லை என்பதால் விடுவிக்கப்பட்டனர்.

அதனை அறிந்து ஆத்திரம் கொண்ட பற்றீஸியாவின் சினேகிதி கிளெஸ்ரே தன்னம் தனியாக அக்கும்பலிடம் சென்றாள், "பற்றீசியாவுக்கு நடந்தது போல் உனக்கும் நடக்கவேண்டுமா?" என்று கேட்டு எக்காளமிட்டது கும்பல்.

அவர்களில் தலைவன் நிலையிலிருந்த ஒருவனுடைய நெற்றிப்பொட்டினை நோக்கி ஒரு கிரிக்கெட் பந்தினை வீசியிருக்கிறாள். இரத்தம் பீறிட அவன் கீழே விழுந்தான். ஏனைய நால்வரும் உசாராகி கம்புகள் தடிகளுடன் கிளெஸ்ரேயைத் தாக்கமுயன்றனர். ஆனால் கிளெஸ்ரே வேகமாக இயங்கி தாக்கத்துவங்கினாள். இருவர் சுருண்டு விழுந்தனர். இருவருடைய கைகால்களில் எலும்புகளும் முறிந்துள்ளன. மற்ற இருவரும் காயங்களுடன் ஓடி மறைந்துவிட்டனர்.

"என்னுடைய தாக்குதல்முறை அவர்களுக்கு அதிர்ச்சியினை ஏற்படுத்திவிட்டது. அவர்களை பந்தாடுவது எனக்கு வேடிக்கை விளையாட்டாகவே இருந்தது." என்று கிளெஸ்ரே கூறினாள். சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு தாக்கியமை சட்டப்படி குற்றமாகும் என்று பொலிசார் கிளெஸ்ரேயைக் கைது செய்தனர். பொலிசாரின் துப்பறியும் பிரிவு தலையிட்டு அந்த ஐவரையும் கற்பழிப்புக் குற்றவாளிகள் என்று கண்டதன் பின்னர் கிளெஸ்ரே விடுதலை செய்யப்பட்டார்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

த
க
வ
ல்
பெ
ட்
டி

# இரட்டையரை மணந்த இரட்டையர்

## மணவிழாகாண திரண்டனர் ஆயிரமாயிரம் இரட்டையர்கள்



ஜில் மற்றும் ஜேனா இருவரும் இரட்டையர்கள். இவர்கள் இருவரும் ஃபில் மற்றும் டௌக் மால்ம் என்ற இரட்டையர்கள் இருவரையும் திருமணம் செய்தனர். திருமண விழாவில் இரட்டையர்கள் 3,000பேர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இந்த இரு இரட்டைத் தம்பதியினரும் தற்போது இடாகோ மாநிலத்திலுள்ள மாஸ்கோ நகரில் ஒரே இல்லத்தில் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். "எங்கள் வாழ்க்கை மிக்க மகிழ்ச்சியாகவே இருக்கிறது. ஆள்மாறாட்டங்கள், குழப்பங்கள் ஏற்பட்டு சிக்கல் நிறைந்ததாக எங்கள் வாழ்க்கை இருக்கும் என்று பலர் கருதலாம். ஆனால் எதுவித சங்கடமுமின்றி நாங்கள் வாழ்கிறோம்." என்கிறார் 36 வயதான டௌக்.

டௌக்கும் ஃபில்லும் ஒரு தச்சுத் தொழிற்சாலையில் ஒன்றாகவே பணிபுரிகின்றனர். இவர்களின் மனைவிமார் இருவரும் ஒரே பள்ளியில் ஆசிரியைகளாகவுள்ளனர்.

"ஃபில் எனது சகோதரன் என்பதைவிட நாங்கள் மிக நெருங்கிய நண்பர்கள் என்றால் மிகையாகாது. அதேபோல் ஜில்லும் ஜேனாவும்கூட நெருக்கமான நண்பர்களைப் போன்றே பழகுகின்றனர். இவர்கள் பிறந்ததிலிருந்து ஆக மூன்றே மூன்று நாட்கள் மட்டுமே பிரிந்திருக்க நேரிட்டது. ஆனால்அந்த மூன்று நாட்களும் மிக வேதனையான காலமாக இருந்ததாகத் தோன்றியதாம்." இவ்வாறு டௌக் தெரிவித்தார்.

ஒஹையோ, ருவின்ஸ்பேர்கில் 3 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற இரட்டையர்கள் தினத்தன்று இந்த இரு இரட்டையர்கள் முதன் முதலில் சந்தித்தனர். அங்கு பல்லாயிரக்கணக்கான இரட்டையர்கள் ஒன்று கூடினர். டௌக்-ஜோனா, ஃபில்-ஜில் இரட்டையர்கள் அன்றே காதல் வசப்பட்டனர்.

மூன்று வருடக் காதல் சந்திப்புகள் மென்மேலும் உறவினை வளர்க்க, கடந்த ஆகஸ்டில் இவர்களின் திருமணம் நடைபெற்றது. இந்தத் திருமணத்தின்போது 3,000 இரட்டையர்கள், நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வந்து கலந்து சிறப்பித்தனர். தங்களுக்குள் ஒருவித ஒருமைப்பாடு இருப்பதனால் தற்செயலான ஆள்மாறாட்டங்கள் ஏற்படாமல் இருக்கிறது என்றார் ஜோனா.

தங்களுக்கிடையில் ஒரு தடவை ஏற்பட்ட ஆள் மாறாட்டத்தின் பின்னர், பின்புறமாக வந்து அணைப்பதை நால்வரும் தவிர்த்து வருவதாக ஜேனா கூறுகிறார். திருமணமான அன்றே அந்த ஆள் மாறாட்டம் நடந்ததாம். உடனடியாக உண்மை தெரிந்துவிட்டமையினால், பாரதூரமாக எதுவும் நடப்பதற்கு முன்னர் நிலமை சுமுகமடைந்துவிட்டதாக அவர் சொன்னார்.

இந்த நால்வரும் ஒரே வீட்டில் வாழ்வதால் அயலில் உள்ளவர்கள் அடையாளம் காண்பதில் சங்கடப்படுவதாக ஜேனா கூறுகிறார். எவருடைய கண்ணிலாவது எங்களில் ஒருவர் தென்பட்டதும் அவர் ஒருவினாவினை வீசுவாராம். "யார் இது? ஜேனாவா? ஜில்லா?" என்று கேட்டு அறிந்த பின்னர்தான் உரையாடல் தொடருமாம். நால்வரும் ஒரே நேரத்தில் வெளியே செல்லும்போது பார்ப்பவர்கள் மிகவும் அதிசயப்பார்வையினை வீசுவார்களாம். குறிப்பாக வாடகை வண்டிக்காரர்கள் தான் தங்கள் மீது அதிசயமான பார்வையினை வீசுவார்களாம்.



Double wedding





நீண்ட மீசைமீது
ஆசை கொண்ட மங்கை
அதனைத் தொட்டுப்
பார்க்கிறாள்
மனம் துள்ள!

கலிபோனியா மாநிலம், நியூ ஹோலைச் சேர்ந்த ஜிம் மிச்செல் ஒரு பழமை விரும்பி. அக்காலத்து மேற்கு மாநிலங்களில் வாழ்ந்தவர்களைப் போன்று நடையுடை பாவனைகளை கைக்கொள்ளவே அவர் விரும்புகிறவர்.

ஜிம் இப்பொழுது 34 அங்குல மீசையினை வளர்த்திருக்கிறார்.

# ஆசையோடு வளர்க்கப்படும் நீளமான மீசை!

இவர் தெருவில் நடந்து சென்றால் பெண்கள் ஓடோடி வந்து தழுவுகிறார்கள். ஆண்களோ வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே உள்ளனர்.

இருவருடைய வீட்டில் பழங்காலத்துக் குதிரைக் கோச்சுவண்டிச் சக்கரங்கள், 'கௌபோய்'கள் அணியும் தொப்பிகள், ஆரம்பகால றெயில்பாதைகளில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் எல்லாம் காணப்படுகின்றன. பழைய பொருட்களைச் சேர்ப்பதில் இவருக்குத்தனி ஆர்வம்.

ஜிம் ஏற்கனவே மூன்று தடவைகள் மீசை வளர்த்து அவற்றை வெட்டி விட்டார். ஆனால் வெட்டிய மீசையை வீசிவிடாமல் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கிறார். இப்பொழுது வளர்த்திருக்கும் 34 அங்குல மீசை தனக்கு புகழுடன் பணமும் கொண்டு வரும் என்று கருதுகிறார். ஹோலிவூட் திரைப்படங்களிலும் தொலைக்காட்சிகளிலும் ஜிம் மிச்செல் விரைவில் தோன்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான முயற்சிகளில் ஜிம் தற்போது மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்.

# மரணத்தின் விலை மூன்று அமெரிக்க டொலர்

## உண்மையைச் சொல்லி ஒரு வியாபாரம்





கலிபோனியாவிலுள்ள ஒரு சிகரெட் நிறுவனம் உண்மையினைக் கூறி பெரும் பணம் திரட்ட ஆரம்பித்திருக்கிறது.

அந்த நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனைக்கு அண்மையில் சந்தைக்கு விட்டிருக்கும் புதிய சிகரெட்டுக்குப் பெயர் 'டெத்'– அதாவது 'மரணம்'. ஒரு மண்டை ஓட்டையும் இரு எலும்புத்துண்டு களையும் சிகரெட் பெட்டியின் அடையாளமாகத் தந்திருக்கிறார்கள். சிகரெட் பாவிப்பவர்கள் விரைவில் மரணமடைந்துவிடுவார்கள் என்று பரவலாகவுள்ள உண்மையினை இந்த அடையாளமும் பெயரும் அப்பட்டமாக வெளிக்காட்டுகின்றன.

ஏனைய சிகரெட்களைவிட 'டெத்' சிகரெட்டின் விலை சற்று அதிகமாக இருந்தபோதிலும் பரீட்சார்த்தமாக சந்தைக்கு அனுப்பப்பட்டவை உடனடியாக விற்கப்பட்டு விட்டன. இதனை அமெரிக்காவெங்கும் சந்தைப்படுத்தத் தொடங்கினால் 22 கோடி டொலர் நிகர லாபம் கிடைக்கும் என்று நிறுவன இயக்குநர்கள் கருதுகின்றனர்.

10 சிகரெட்டுகள் கொண்ட ஒரு 'பக்கெற்'றின் விலை 3.00 அமெரிக்க டொலர் மட்டுமே.

# உலகில் மிகச்சிறிய வயலின்



உலகிலேயே மிகச் சிறிய வயலின் இது.

இரு விரல்களுக்குள் இடுக்கிக்கொள்ளத்தக்கதாக- ஆக ஒன்றரை அங்குல நீளமானது. இதற்கு ஆக இரண்டு தந்திகளே பொருத்தப்பட்டுள்ளன.

சுவிட்சர்லாந்தின் கிளெயின்லூட்ஸெல் என்ற இடத்தைச் சேர்ந்த 29 வயதுடைய கோர்னெல் ஸ்கினீடர் இதனை உருவாக்கியுள்ளார். இதனை அமைக்க கோர்னெலுக்கு 70 மணிநேரம் தேவைப்பட்டது. பல் மருத்துவர்கள் பயன் படுத்தும் கருவிகளைக் கொண்டே இதனை அமைத்துள்ளார். இந்த இசைக்கருவியில் நாதம் எழுப்பவும் முடியும் என்று கோர்னெல் கூறுகிறார். மிகச் சிறிய நுணுக்கமான பொருட்களை உருவாக்குவதையே பொழுது போக்காகக் கொண்ட அவர் இந்தச் சிறிய வயலினை ஏலத்தில் விட்டபோது 1,695 டொலர் விலை கொடுத்து ஒரு தனவந்தர் வாங்கிக்கொண்டார்.

பெறப்பட்ட பணத்தினை வைத்து மேலும் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்ய கேர்ணல் திட்டம் வைத்திருக்கிறார்.

ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டவற்றை வைத்தே மேலும் புதுமையான கண்டுபிடிப்புக்கள். ஆச்சரியான மாற்றங்கள்.

# சினி விசிட்

## பறக்கும் பாவை!

[illegible]

## இயக்குநராகும் கவிஞரின் மகன்


[illegible]

## சூடான மம்தா

[illegible]




ரேவதி-ஜெயராம்
படம்-பிரியங்கா



கார்த்திக்
படம்-இனியெல்லாம் சுகமே

முகப்பிலே புன்னகையோடு -சிவதமி- பொல்லாத கத்தியோடு -பிரசாந்த்-



மம்தா

## மினிசினி

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

★ [illegible]

## சத்யராஜின் வெட்கம்

'அமைதிப்படை' வெற்றிக்குப் பின் அடுத்துவரப் போகும் சத்யராஜ் படம் 'வண்டிச் சோலை சின்ராசு'. தாயகி சுகன்யா. வெகு தாராளமாக நடித்து காதல் காட்சிகளில் சத்யராஜுகூட வெட்கப்படும் அளவுக்கு வெளுத்துவாங்கியிருக்கிறாராம்.

படப்பிடிப்புகள் முடிவடைந்துவிட்டதால் வெளியிடும் வேலைகள் நடை பெற்றுவருகின்றன.

## "கலைகளில் வெல்ல ஆர்வம் முக்கியம்!"

விறு விறுப்பான சண்டைக்காட்சிகளில் நடித்து பெயர் வாங்கியுள்ளவர் விஜயசாந்தி.

தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்படும் படங்களில் விஜயசாந்தி நடித்த படங்களுக்கே வசூல் மரியாதை அதிகம்.

சுமார் ஏழுகோடி ரூபா பட்ஜட்டில் தமிழிலும், தெலுங்கிலும் ஒரு படம் தயாரிக்க நீண்டதான திட்டம் வைத்திருக்கிறார்.

"சண்டைக் காட்சிகளில் நடிப்பதற்காக பெரிய பயிற்சிகள் எதுவும் செய்வதில்லை. வீட்டில் தினமும் உடற்பயிற்சி, நடனம் போன்றவை செய்வேன். சண்டைக் காட்சிகளில் பயிற்சியாளர்கள் சொல்வதை அப்படியே செய்வேன்.

ஆர்வம் இருந்தால் எந்தக் கலையிலும் வெற்றிபெற முடியும். அதுதான் என் கருத்து" என்கிறார் விஜயசாந்தி.

உங்களுக்கு தமிழ்நாட்டில் அதிக இரசிகர்களா? ஆந்திராவில் அதிகமா? என்று தமிழகப் பத்திரிகை ஒன்று அவரிடம் கேட்டது. புத்திசாலித்தனமாகப் பதில் சொல்கிறார்.

"அப்படி என்னால் பிரித்துப் பார்க்கமுடியாது. என்றாலும் ஒரு வாதத்திற்குச் சொல்கிறேன். தமிழகத்தில் சின்னக் குழந்தை முதல் வயதானவர்வரை எனக்கு அதிகமான பெண் இரசிகைகள் இருக்கிறார்கள். ஆந்திராவில் ஆண்களும், பெண்களும் என்று நிறைய இரசிகர்கள் இருக்கிறார்கள்.



சத்யராஜ
படம்-வண்டிச்சோலை சின்ராசு

## பெண்ணுரிமை பேசும் படம்

பெண்ணுரிமைக்காகப் போராடும் ஒரு பெண்ணின் வாழ்க்கையை சுற்றி உருவாகிவரும் படம் 'பூவெல்லாம் உனக்காக'.

நிழல்கள் ரவி, கஸ்தூரி, ஜோடி, ஜனகராஜ், விஜயகுமார், மனோரமா, ஷர்மிலி ஆகியோரும் உண்டு.

ஸ்ரீதர் என்னும் புது இயக்குநர் படத்தை இயக்குகிறார்.

## முன்னாள் முதல்வரின் இரண்டாவது படம்

கர்னாடக முன்னாள் முதல்வர் ஹெக்டே தேர்தலில் தோல்வியடைந்த பின் 'மரணமிருதங்கம்' என்ற படத்தில் நடித்தார்.

இப்போது 'பிரஜாசக்தி' என்ற படத்தில் நடித்துவருகிறார்.

ஒரு தனிநபர் மக்களை தட்டி எழுப்பி, வலிமை படைத்தவர்களாக, ஜனநாயக சக்தியாக உருவாக்க முடியும் என்பதை சொல்லும் படமாக இருக்குமாம்.

முதல் படத்தில் நடிக்கும்போது செக்ஸ் காட்சிகள் படத்தில் இருக்கக்கூடாது என்று நிபந்தனை போட்டார் ஹெக்டே. ஆனால் பாடல் காட்சிகளில் திணித்துவிட்டார்கள். இந்தப் படத்தில் அப்படி நடக்காது என்கிறார் முன்னாள் முதல்வர்.




விஜயசாந்தி
படம்-சூர்யா

www.padippakam.com





ரவீனா ராண்டன்




ரோஜா-சுமன்
படம்-அதிரடிப்படை

## சிரிக்க வைக்கும் ரஜனி

ரஜனிகாந்த் இப்போதெல்லாம் பொது விழாக்களில் சிரிக்கவைக்கும் உதாரணங்களை சொல்லிப் பேசுகிறார்.

சிறந்த மேடைப் பேச்சாளராக ரஜனி உருவாகி வருவதால் அரசியல்வாதிகள் சிலர் சந்தேகத்தோடு பார்க்கிறார்கள் என்றாலும் முன்புபோல் ரஜனியை அரசியலோடு சம்பந்தப்படுத்தும் பேச்சுக்கள் தற்போது வெளியானதில் இல்லை.


## குரு-சிஷ்யன்!



## காதோடு சொல்லுகிறோம்

## அதிகாரம் போனால் மரியாதையும் போகும்!

### சினிமாவும்-அரசியலும்



## தண்ணீரில் மிதக்க கஸ்தூரிக்கு ஆசை!

## மோகனாவின் நம்பிக்கை

## விட்ட இடத்தை பிடிப்பதற்கு...

## "இனி மாட்டேன் போ!"

## பாப்பா முரசு சிறுகதை



# நெய்க்கடன்

செல்வம் என்றால் நாம் உடனே அதைப் பணம் என நினைக்கிறோம். ஆனால் செல்வம் என்பது பலவகைப்படும். கல்விச் செல்வம், கேள்விச் செல்வம் என்பது போல கால்நடைச் செல்வம் என்று ஒன்று உண்டு. வீட்டிற்குப் பெரிதும் பயன்படும் பசு, எருது, ஆடு போன்றவைகளைக் கால்நடைச் செல்வம் என்பார்கள். அவைகளை நடத்தியே எங்கும் கூட்டிச் செல்ல முடியும் என்பதால் அவைகளுக்குக் கால்நடைச் செல்வம் என்ற பெயர் வந்தது.

மாதுரி என்ற ஒரு பெண்ணிடம் கால்நடைச் செல்வமான பசுக்கள் இருந்தன. அவைகள் கொடுக்கும் பாலை விற்றும், பாலைத் தயிராக, வெண்ணையாக, நெய்யாக மாற்றியும் அவள் வியாபாரம் செய்துவந்தாள். அதன் மூலம் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஜீவித்து வந்தாள் அவள். கணவன் கோவிந்தன் பசுக்களை மேய்த்து வருவான்.

மாதுரியின் வீட்டின் எதிரில் மாதங்கி என்று ஒரு பெண் வசித்து வந்தாள். அவளுக்கு நிறைய சொத்து சுகம் இருந்தாலும் மாதுரியைப் போலவே அவளும் பசுக்களை வளர்த்தாள். அவை கொடுக்கும் பாலை விற்று வரும் பணத்தில் அவள் மிகவும் ஆடம்பரமாகவும், ஊதாரித்தனமாகவும் வாழ்க்கை நடத்தினாள். அப்படியும் அவளுக்குப் பணம் போதவில்லை.

மாதங்கி சுகபோகமாக தன் இஷ்டம் போல வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த பொழுது ஒரு நாள் அவள் வீட்டிற்கு விருந்தினர் வந்து சேர்ந்தனர். வந்தவர்கள் ஒருவர் இருவரல்ல. ஆறுபேர். பல ஆண்டுகள் கழித்து வராதவர்கள் வந்தார்கள். மாதங்கி சகல வித வசதிகளுடன் இருப்பதையும், வீட்டில் பசுமாடுகள் வளர்ப்பதையும் பார்த்தார்கள்; சந்தோசப்பட்டார்கள்.

தான் நன்றாக இருப்பதையும் பசுக்கள் வளர்ப்பதையும் பார்த்துவிட்டார்கள். இவர்களுக்கு வேளா வேளைக்கு உணவுப் பலகாரங்கள் செய்துபோட்டு உபசரிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஊர் போய் அங்கு கேவலமாகப் பேசுவார்கள் என்று எண்ணினாள் மாதங்கி.

அதனால் அவர்களுக்கு உணவு பண்டங்களை நெய்யிலேயே தயாரிப்பதென முடிவு செய்தாள். உடனே என்னென்ன தயாரிக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு அதற்குத் தேவையான பொருட்கள் எல்லாம் உள்ளனவா என்று சமையலறைக்குச் சென்று பார்த்தாள். அரிசி, பருப்பு, புளி, வெல்லம், சீனி, எண்ணை எல்லாம் இருந்தன. ஆனால் நெய் மட்டும் மிகவும் குறைவாக இருந்தது. இனிப்புப் பண்டங்கள் செய்ய நெய் போதாது. அதற்கு நிறைய நெய் வேண்டும். யாரிடம் சென்று கேட்பது? மாதங்கி யோசித்தாள்.

அவளுக்கு எதிர்வீட்டு மாதுரியின் நினைவு வந்தது. அவளும் பசுக்கள் வைத்து பால் கறந்து பால், தயிர், மோர், வெண்ணை என்று விற்கிறாள். அவளும், அவள் புருஷனும் தான் வீட்டில் இருக்கிறார்கள். குழந்தை குட்டிகளோ, பெரியவர்களோ கிடையாது. அதனால் நெய்யின் உபயோகம் மாதுரியின் வீட்டில் குறைவாகத்தான் இருக்கும். சேமித்து வைத்திருப்பாள்.

மாதுரியிடம் சென்று, "திடீரென்று விருந்தாளிகள் வந்து விட்டார்கள். அவர்களை நன்கு உபசரித்து அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால் உற்றார் உறவினர்களிடம் எல்லாம் குறை சொல்வார்கள். அதனால் இரண்டு படி நெய் இருந்தால் கொடு... ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்," என்று கேட்டாள் மாதங்கி.

மாதுரியும் எதிர்வீட்டு மாதங்கிதானே நெய் கடனாகக் கேட்கிறாள். அவளிடமும் பால் கறக்கிற பசுக்கள் உள்ளனவே. அதனால் சொன்னபடி இரண்டு படி நெய்யைத் திருப்பிக் கொடுத்து விடுவாளென எண்ணி இரண்டுபடி நெய்யை மாதங்கியிடம் கொடுத்தாள் மாதுரி.

தனக்கு மட்டும் என்றாலும் கூட பொருட்களைக் கண்டபடி செலவழிப்பாள் மாதங்கி. இப்பொழுது உறவினர்களுக்கு, தான் நன்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்பதற்காக இரண்டு படி நெய்யையும் வைத்து இனிப்புப் பலகாரங்கள் செய்து போட்டாள். அவர்களும் வயிற்றில் இடமில்லாத அளவுக்குச் சாப்பிட்டுவிட்டு ஊர் போய்ச் சேர்ந்தார்கள்.

ஒரு வாரமாயிற்று, பதினைந்து நாளாயிற்று, ஒரு மாதமாயிற்று. அப்பொழுதும் மாதங்கி, தான் கடனாக வாங்கிய நெய்யை மாதுரிக்குத் திருப்பிக் கொடுக்கவில்லை.

பொறுத்துப் பார்த்த மாதுரி கடனாகக் கொடுத்த இரண்டுபடி நெய்யைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டாள்.

"நான் உன்னிடம் இரண்டுபடி நெய் கடனாக வாங்கினேனா?....பொய் பேச எங்கே கற்றுக்கொண்டாய்?...நான் உன்னிடம் ஒரு கரண்டி நெய்கூட வாங்கவில்லை." என்று துணிந்து பொய் பேசி மாதுரியை அழவைத்து அனுப்பி விட்டாள்.

என்ன செய்வதென்று அறியாத மாதுரி, மரியாதை இராமனிடம் சென்று முறையிட்டாள்.

மாதங்கியை அழைத்து விசாரித்தார் மரியாதை இராமன்.

"நான் நன்றாக இருப்பதைப் பார்த்துப் பொறாமைப்பட்டு என் மீது அபாண்டமாகப் பொய் சொல்கிறாள் மாதுரி. என் வீட்டிலேயே நிறைய பசுக்கள் இருப்பதால் நான் எவரிடமும் சென்று கைநீட்டி நெய் கடன் வாங்கவேண்டிய அவசியமில்லை," என்று அடித்துப் பேசினாள் மாதங்கி.

"வியாழக்கிழமை வாருங்கள். உங்கள் வழக்கிற்குத் தீர்ப்புச் சொல்கிறேன்." என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தார் மரியாதை இராமன்.

அவர்கள் நீதிமன்றத்திற்கு வருகின்ற அன்று நீதிமன்ற நுழைவாயிலிலிருந்து வருகின்ற வழி முழுவதும் களிமண் சேற்றைத் தரையில் பூசி வைத்தார் மரியாதை இராமன்.

மாதங்கியும், மாதுரியும் வந்தார்கள். வழி எல்லாம் சேறாகக்கிடப்பதைப் பார்த்து உள்ளே வரத் தயங்கினார்கள். அப்படியே நின்றார்கள். அவர்களைப் பார்த்து, "அம்மணிகளே, பயப்படாமல் வாருங்கள். இங்கே மன்றத்தின் உள்ளே தண்ணீர் இருக்கிறது. அதைக் கொண்டு நீங்கள் காலைக் கழுவிக் கொள்ளலாம்," என்றார் மரியாதை இராமன்.

முதலில் மாதுரி சேற்றில் இறங்கி உள்ளே வந்தாள். பணியாள் ஒரு செம்பு நீரை அவளிடம் கொடுத்தான். அவளோ செம்பு நீரைச் சிக்கனமாகச் செலவழித்துக் கால்களில் படிந்த சேற்றைக் கழுவினாள். செம்பில் தண்ணீர் மீதமிருந்தது.

அவளுக்குப் பின் சேற்றில் வந்த மாதங்கியோ கால்களில் ஒட்டிய சேற்றைக் கழுவ ஒரு செம்பு தண்ணீர் அவ்வளவையும் செலவழித்து விட்டு இன்னமும் தண்ணீர் வேண்டுமென்று கேட்டாள்.

"மாதங்கி தண்ணீரை உபயோகித்ததில் இருந்து சிக்கனமாக இருக்கத் தெரியாதவள் என்பது தெரிகிறது. தன் செலவுக்குக் கடன் வாங்குபவளாகவும் அவள் இருக்கக் கூடுமென்று ஊகிக்க முடிகிறது. விருந்தாளிகள் தன்னைப் புகழவேண்டுமென்பதற்காக மாதுரியிடம் இரண்டுபடி நெய்யை அவள் கடன் கேட்டு வாங்கி இருப்பாள் என்று தெரிகிறது. ஆகவே மாதுரிக்கு மாதங்கி இரண்டுபடி நெய்யை இன்னும் ஒருவார காலத்திற்குள் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று தீர்ப்பளிக்கிறேன்," என்றார் மரியாதை இராமன்.

தன் குற்றத்தை ஒப்புக்கொண்டாள் மாதங்கி.

பாப்பா முரசு

## விடுகதைகளும் விடைகளும்

1. காட்டிலும் மேட்டிலும் முளைக்காத பனை. என்ன பனை?
2. கண் உண்டு ஆனால் பார்க்கமாட்டான். அவன் யார்?
3. தட்டும் தாளம் நின்றுவிட்டால் ஆட்டம் நடக்காது. அது என்ன?
4. வாயும் காதும் கொண்டு வாழ்வை ஆட்டுபவன். அவன் யார்?
5. கைக்குள் ஏறும் காலுக்குள் ஏறாது. அது என்ன?
6. வட்ட வட்ட செப்புக்குள் விட்டதெல்லாம் பாம்புக்குட்டி.. அது என்ன?

1. கற்பனை 2. தேங்காய்
3. இதயம் 4. தொலைபேசி
5. வளையம் 6. இடியப்பம்

ஏ.எல். பாயிஸ்
தோப்பூர்.

1. வெள்ளைக் கத்தரிக்காய். கள்ளக் கூச்சல் போடுது. அது என்ன?
2. பரட்டைத் தலை மாமியாருக்குப் பவளம் போன்ற மருமகள். அவள் யார்?
3. ஆற்று மணலை அள்ளித்தின்போம் நாங்கள் ஒரு சாதி, வெள்ளைக்கல்லை உடைத்துத் தின்போம் நாங்கள் ஒருசாதி- நாங்கள் யார்?

1. சங்கு 2. அத்திப்பழம்
3. சீனி, கற்கண்டு

தவராசா பிரதீபா
செங்கலடி மகாவித்தியாலயம்

## சக்கரப் புதிர்

A,B,C என்று மூன்று சிறுவர்கள் ஒவ்வொருவரும் ஒரே அளவுள்ள சைக்கிள் சக்கரங்களை ஒருவர் பின் ஒருவராக உருட்டி வந்தனர்.

ஒரு கிலோமீட்டர் தூரத்தை அடைய அவர்கள் முறையே 5,8,10 நிமிடங்கள் எடுத்துக்கொண்டனர். அவர்களுக்குள் ஒரு பிரச்சனை. தன்னுடைய சைக்கிள் சக்கரம்தான் அதிகமுறை சுற்றியது என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டனர். முடிவாக அவர்கள் உங்களிடம் வந்தால் உங்கள் பதில் என்ன?

யோசித்துவிட்டு விடையை பாருங்கள்.

மூன்று சைக்கிள்களின் சக்கரங்களும் சம எண்ணிக்கையிலேயே சுற்றியிருக்கும்.

த. மணிவாசகம்.

## சார்க் நாடுகளும் அதன் தலைநகரங்களும்

1. இலங்கை - கொழும்பு
2. இந்தியா - புதுடில்லி
3. பாகிஸ்தான் - இஸ்லாமாபாத்
4. பங்களதேஷ் - டாக்கா
5. மாலைதீவு - மாலே
6. நேபாளம் - கட்மண்டு
7. பூட்டான் - திம்பு

**எழுதுங்கள்**
பாப்பா முரசுக்கு உங்கள் சொந்த ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.


## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.02.1994.


வர்ணம் தீட்டும் போட்டி இல: 29
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

## பறவைகள் பலவிதம்



பறவைகளிலேயே அதிக சிறகுகள் உடையது விசிலடிக்கும் அன்னப் பறவை. இப்பறவைக்கு 25 ஆயிரம் சிறகுகள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

இங்கிலாந்தில் ஆனெட்லி, ஆஞ்செலர் பட்லர் என்ற இருவருக்குச் சொந்தமான வாத்து 464 நாட்களில் 457 முட்டைகளை இட்டது.





பறவைகளிலேயே குறைந்த சிறகுகள் உள்ள பறவை சிவப்பு கழுத்து பாடும் பறவை. இதன் சிறகுகளின் எண்ணிக்கை 940.



'பட்கெரிக்கா' எனப்படும் சிறுகிளிகள் இருபது ஆண்டுகளுக்கு மேலும் உயிர்வாழக் கூடியவை. விஞ்ஞானிகளின் கண்காணிப்பில் உள்ள இந்த ஒரு பட்கெரிகா கிளி 29 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தது.

## வர்ணம் தீட்டும் போட்டி இல. 26

**பரிசுக்குரியர்:**
எம்.ஜே.எம்.பஜ்ரி
உடுகொட அரபா முஸ்லிம் வித்தியாலயம்
ருக்கஹவில.

**பாராட்டுக்குரியவர்கள்:**

டிலேஸ் கிறிஸ்தோபர்
மத்திய மகா வித்தியாலயம்
வவுனியா.

செல்வி. சிந்தியா சந்திரகுமார்
ஹெரோ சர்வதேசப் பாடசாலை
கொள்ளுப்பிட்டி.

எப். மேரி அன்டன்ற்
புத்தளம்.

வில்வராசா சிவசாந்தன்
ஸ்ரீகோணேஸ்வரா இந்துகல்லூரி
திருகோணமலை.

எப்.நபீலா-கொழும்பு-14.

இ.எல்.தோமஸ்-ஹட்டன்.

எ. எமலின்
சிசிலியா மகளீர் மகாவித்தியாலயம்
மட்டக்களப்பு.

ஸஹீர் கான்-தர்கா நகர்.

பீ.எம்.எம்.மாஜீத்
மூதூர் மத்திய மகா வித்தியாலயம்.

முகம்மத் இம்தாத்-புத்தளம்.

செல்வி. நிஜந்திகா கனகசிங்கம்
வின்சன் மகளிர் உயர்தர பாடசாலை, மட்டக்களப்பு.

சிவநாதன் பிரசாந்தினி-பதுளை.

செல்வன்.நிரஞ்சன்-மஸ்கெலியா.

டி.புளொரிடா தங்கையா
ரலோஸ் தமிழ் வித்தியாலயம்
உடபுசல்லாவ

பா.நியோரதன்-மட்டக்களப்பு.

ஏ.எஸ்.றியாஸ்-கிண்ணியா-03.

செல்வி.சி.வாணஸ்ரீ-அட்டபாகே.

செல்வி.அஞ்சனா இரங்கசாமி
மகளிர் மகாவித்தியாலயம்
வவுனியா.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ஸ்போர்ட்ஸ்


# விளையாட நிபந்தனை!

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்குழு, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஐ.எஸ். பிந்திரா தலைமையில் புது டில்லியில் கூடியது. இந்தக் கூட்டத்திற்குப் பிறகு ஐ.எஸ். பிந்திரா செய்தி நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சார்ஜாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளில் பங்குகொள்ள இந்தியா தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருகிறது. குறிப்[illegible] சார்ஜா ஒஸ்ரலேசியா கிரிக்கெட் போட்[illegible]யில் இந்தியா பங்கு கொள்வதற்கு இன்னும் ஒரு சில பிரச்சனைகள்தான் தீர்க்கப்பட இருக்கின்றன. இதுபற்றி கட்டுப்பாட்டுச் சபைச் செயற்குழு சார்ஜா கிரிக்கெட் அமைப்பான சி.பி. எவ்.எஸ்இற்கு சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அவையாவன;

1. சர்வதேச கிரிக்கெட் சங்கத்தால் நடுநிலையான நடுவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.
2. சர்வதேச கிரிக்கெட் சங்கத்தில் இருந்து நடுவர் ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும்.
3. சி.பி.எவ்.எஸ்.சின் தொழில்நுட்ப செயற்குழுவில் ஒஸ்ரலேசியா போட்டியில் பங்குபெறும் அனைத்து நாட்டு கிரிக்கெட் சபைகளின் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டும்.
4. எந்த நாட்டிற்கும் எதிரான பனர்கள், போஸ்டர்கள் மற்றும் கோஷங்கள் போன்றவற்றை இரசிகர்கள் பயன்படுத்துவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப் பட்டால் சார்ஜா கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா பங்குகொள்ளும்.



## சிறந்த வீரர்கள் வரிசையில் முதல் பத்துப்பேர்

சர்வதேச அளவில் தலைசிறந்த பந்து வீச்சாளர்கள் மற்றும் துடுப்பாட்ட வீரர்களில் முதல் பத்துப்பேர் பெற்றுள்ள புள்ளிகள் விவரம்.

### பந்து வீச்சு

| | |
|---|---|
| 1. வக்கார் யூனுஸ் (பாகிஸ்தான்) | 910 புள்ளிகள் |
| 2. கேர்ட்லி அம்புறோஸ் (மேற்கிந்தியத்தீவுகள்) | 888 புள்ளிகள் |
| 3. ஷேன் வோன் (அவுஸ்திரேலியா) | 865 புள்ளிகள் |
| 4. அனில் கும்ளே (இந்தியா) | 828 புள்ளிகள் |
| 5. இயன் பிஷப் (மேற்கிந்தியத்தீவுகள்) | 802 புள்ளிகள் |
| 6. அலன் டொனால்ட் (தென் ஆபிரிக்கா) | 755 புள்ளிகள் |
| 7. மேர்வ் ஹியூஸ் (அவுஸ்திரேலியா) | 703 புள்ளிகள் |
| 8. வின்ஸ்டன் பெஞ்சமின் (மேற்கிந்தியத் தீவுகள்) | 697 புள்ளிகள் |
| 9. அங்குஸ் ஃபிரேசர்(இங்கிலாந்து) | 674 புள்ளிகள் |
| 10. வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்) | 668 புள்ளிகள் |

### துடுப்பாட்டம்

| | |
|---|---|
| 1. கிரஹாம் கூச் (இங்கிலாந்து) | 819 புள்ளிகள் |
| 2. டெஸ்மண்ட் ஹெயின்ஸ் (மேற்கிந்தியத் தீவுகள் | 818 புள்ளிகள் |
| 3. றிச்சி றிச்சட்சன் (மேற்கிந்தியத் தீவுகள்) | 785 புள்ளிகள் |
| 4. டேவிட் பூன் (அவுஸ்திரேலியா) | 755 புள்ளிகள் |
| 5. சச்சின் டென்டுல்கர் (இந்தியா) | 699 புள்ளிகள் |
| 6. பிரையன் லாரா (மேற்கிந்தியத்தீவுகள்) | 696 புள்ளிகள் |
| 7. அரவிந்த டி சில்வா (இலங்கை) | 671 புள்ளிகள் |
| 8. மார்ட்டின் குரோ (நியூசிலாந்து) | 351 புள்ளிகள் |
| 9. அலன் போடர் (அவுஸ்திரேலியா) | 636 புள்ளிகள் |
| 10. ஸ்டீவ் வோவ் (அவுஸ்திரேலியா) | 632 புள்ளிகள் |



## தேன் கிண்ணம்



### போனால் போகட்டும் போடா(டி)!

ஓ...எல்...ஓ...
ஏ...எல்...ஓகோ...ஓ..ஓ..
போனால் போகட்டும் போடா-இந்த
பரீட்சையில் ஒழுங்காய் செய்தது யாரடா?
(போனால்...)

வந்தது 'டெஸ்டு' போனது 'டெஸ்டு'
'ஆன்சர்' ஒண்டும் தெரியாது
வந்தவரெல்லாம் எழுதிவிட்டால்-இங்கு
'செக்கண்ட்இயருக்கே' இடமேது?
'எக்சாம்' என்பது வியாபாரம்-அதில்
'சக்சஸ்' என்பது 'பாசாகும்'-வரும்
தோல்வி என்பது 'பெயிலாகும்'
போனால் போகட்டும் போடா..
(போனால்...)


'ரிசல்டில்' சொன்னான் 'பெயிலென்று'-அதை
இல்லையென்றால் அவன் விடுவானா?
திறமையைச் சொல்லி அழுவதனாலே
'கெம்பஸ்' போக விடுவானா?
நமக்கும் மேலே ஒருவனடா-அவன்
நாலும் தெரிந்த (4 பாடங்கள்) தலைவனடா-தினம்
பேப்பர் திருத்தும் மாஸ்டரடா
(போனால்...)


எண்ணுக்கும் எழுத்துக்கும் விடைகளைக் கண்டேன்
கணக்கியல் பரீட்சையில் தோற்றேனா?
பொருளியல் படிக்க டியூசன் சென்று
சாந்தியின் வலையில் விழுவேனா?
'பிட்'டடியாலே கிடைக்காது- இது
'கரக்ஷன்' போனால் ஜெயிக்காது-அந்த
பேட்டையில் நுழைந்தால் திரும்பாது
(போனால்....)

-எம். சுரேஷ்-

### காதலை வெல்வோம்

நேசம் நேசம்
தேசம் கண்ணீர் தாலாட்டோடு
வீசும்
ரத்தபாசம்.
◆
அந்தி வேளைமட்டுமல்ல
எந்த வேளையிலும் இங்கு
காதல் கைகூடல்
கலகலக்கும்
◆
மனிதக் காதலிகளும்
துப்பாக்கிக் காதலர்களும்
எங்கள் தேசத்தில்
முத்தமிடும் பொழுதுகள்
இப்போதெல்லாம்
கணக்கெடுக்க முடியாத
கணிப்புகளாய்
போய்விட்டன.
◆
காதல் கடிதங்களாய்
இம்மண்ணில்
மரண ஓலங்கள்
தினம் தினம்
வரையப்பட்டுக்
கொண்டிருக்கிறது.
◆
மடல்கள்
மௌனித்து
சுவாசத்தால்
மண்ணைச் சுடும்.
◆
ஆ...ஆ...
எங்கும்
சுக்குநூறாகிப் போன
இதயத்துண்டுகளாய்
இம் மண்ணில்
மனித சதைத் துண்டுகள்
துடித்தவாறு......
◆
துப்பாக்கி
மனிதக்காதலிகளை
முத்தமிடும் ஒவ்வொரு
பொழுதுகளிலும்
சப்தங்கள்
சலனங்களினால்
சங்கீதமிசைக்கும்
காற்று
பூனைப்பதுங்கலாய்
எலியைப்போல்
உயிரை
ஈவிரக்கமில்லாது
கவ்விக் கொண்டுபோகும்
◆
ஞாபகச்சின்னங்களாய்
இம்மண்ணில்
மீண்டும் மீண்டும்
கல்லறைத் தாஜ்மஹால்கள்
எழுப்பப்படும்.
கனத்த காவியமும்
அதில் எழுதப்படும்.
◆
கிண்ணியா சபறுள்ளா.





### பாவம் மனிதர்கள்

பெரிய உலகம்
சிறிய இதயம்
மயங்கும் மனிதன்
மாறும் காலம்
இரவில் மயங்கி
இடையில் தவிப்பான்.
நிலையில்லாவுலகில்
நிற்கும் மனிதன்
சிறையில் கூட
சிரிக்கும் மனிதன்
நரகைக் கூட
நினைக்கவில்லை
உலகில் வாழ்வு
நிலை[illegible]குமென்று
பகடை கொண்டு
வாழும் மனிதன்
சிலைபோல்
ஒரு நாள்
சிதைந்து செல்வான்.
பாவம் மனிதன்
புவியில் செய்த
நன்மையென்ன?

கே.ஏ.மஜீத்
சவுதி அரேபியா.

### தொட்டுவிடும் தூரத்தில்.....

கால்கள் என்ன
தூண்களா
நட்ட இடத்தில்
நிற்பதற்கு?
•
தொட்டாச் சிணுங்கியாய்
உள்ளம்-
விரிவதும்....
சுருங்குவதுமாய்...
கிடந்தது.
•
காகம்-
உனது திசை பார்த்து,
கரையக் கரைய...
இதயம்-
இடைவெளியின்றி,
துடித்துக்கொண்டது.
•
நுளம்பு கடித்தாலும்-
அழுது விடுவேன்
போலிருந்தது-
நீ கணங்கக் கணங்க...
•
அதோ-
தொட்டுவிடும் தூரத்தில்
புள்ளியாய் நீ
வளர்ந்து..
வளர்ந்து..
நெடுத்து வருகிறாய்.
•
பொரிபட்ட
பப்படமாய்,
மனசு நொறுங்க...நொறுங்க
ஒடுங்கிப் போனேன்,
•
நீ வந்து விட்டாய்
செம்பகத்தின்-
முக்கல்,
உனக்கும்
எனக்கும்
இடைவெளியானது.
•
நிமிர்ந்து பார்த்தேன்
மீண்டும் நீ-
புள்ளியாய்-
தேய்ந்து போனாய்.
•
குனிந்து பார்த்தேன்.
வாடைக் காற்றில்-
நடுங்கிக்கொண்டிருந்தது..
உன்-
திருமண அழைப்பு.

ஒட்டமாவடி-அறபாத்.

### இனி என்றைக்கோ?

நைந்த உள்ளங்களில்
நங்கூரங்கள் இட்டு
நலிந்த உடல்களை
நைலோனால் தைத்து
இனியேதும் இனபேதம் இன்றி
நம்முள் நட்புவலை பின்னி...

என்றைக்கு இனி
புரிந்து
தெளிந்து

நம்முள் உயிர்த்து...

சாந்திக் கடலில்
சமாதானத் தூண்டிலிட்டு
அபிவிருத்தி மீன்
பிடிக்கப் போகிறோம்?
இனி என்றைக்கோ??

ஜெ.மதுபாஷினி
வவுனியா.

### மே(ல்)தாவிகள்

புத்தகக் கட்டுக்குள்ளும்
பூச்சிகள் ஜீவிப்பதால்
புத்தி யென்பதும்
புதிராகி விட்டது!
இங்கிதத்தை விற்று
இலக்கணம் வாங்குவதால்
சந்ததிகள்
சந்திக்கு வருகின்றன!

கலங்கரை விளக்கங்களே
வெளிச்சத்தை கவர்ந்து கொள்வதால்
வீதி விளக்குகளே
வெளிச்சம் காட்டும் நிலை!
விட்டங்களே
பட்டங்களாவதால்
சூரியனே அஞ்சுகிறான்
சுட்டு விடுவார்களோ வென்று!

-தில்லையடிச் செல்வன்-
புத்தளம்

### -தனிமை-

என் எண்ணங்களுக்கு
வர்ணம் பூசும்
தாரிகைப் பொழுது.

நினைவுச் சுழலுக்குள்
மனசைத் தள்ளிடும்
ஒற்றை அலை.

மனசுக்குள்
உதடு திறக்கும்

வாயோ மௌனம் காக்கும்.
அது
மனிதர்கள் 'மைனஸா'ன
என் சுயராஜ்யம்-மனமே
ஆளவும், ஆட்படவும் ஆனதாய்...
எனக்கு நானே
எனக்குள் நானே-மிதந்து கிடப்பேன்
உன் நினைவுத் தரையில்
வழுக்கி விழும் வரை.

-ஷர்மிளா இஸ்மாயில்,கண்டி-

## இந்த வாரம் உங்கள் பலன்

(20.02.94 முதல் 26.02.94 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், சுக்கிரன், சனி |
| இடபம் | - கேது |
| துலாம் | - வியாழன் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - புதன், செவ்வாய் |

இடபம், மிதுனம், கர்க்கடகம் இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்.

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, மனச் சஞ்சலம். | காலை 7 மணி |
| திங்கள்- பணத்தட்டுப்பாடு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்-கௌரவம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| புதன்- துயர் அதிகம், குடும்பக் கலகம். | காலை 9 மணி |
| வியாழன்- மறைமுக எதிர்ப்பு, செய்தொழில் கேடு. | பி.ப 1 மணி |
| வெள்ளி- பணச் செலவு, இனசன விரோதம். | காலை 8 மணி |
| சனி- செய்தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணச்சிக்கல், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, தொழில் மேன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்-உறவினர் பகை, மனக் கவலை. | காலை 8 மணி |
| புதன்- காரிய சித்தி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- அரச கௌரவம், செல்வாக்கு. | காலை 10 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| சனி- தொழில் சித்தி, அந்நியர் உதவி. | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப 2 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பணச்செலவு. | காலை 9 மணி |
| செவ்வாய்-பெரியோர் சகவாசம், தொழில் சித்தி. | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வியாழன்-பயனற்ற பிரயாசம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| வெள்ளி- வெளியிடவாசம், ஆடம்பரச் செலவு. | பி.ப 2 மணி |
| சனி- கௌரவக் குறைவு, வீண் மனஸ்தாபம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மனச்சஞ்சலம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- மறைமுக எதிர்ப்பு, வீண் பிரயாசம். | காலை 10 மணி |
| புதன்- உறவினர் பகை, மனஸ்தாபம். | காலை 9 மணி |
| வியாழன்- வெளியிடப் பிரயாணம், அலைச்சல். | பகல் 11 மணி |
| வெள்ளி- பணத் தட்டுப்பாடு, உறவினர் உதவி. | காலை 8 மணி |
| சனி- நிலையற்ற தன்மை, தேகசுகம் பாதிப்பு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, கௌரவம். | பி.ப 1 மணி |
| திங்கள்- செய்தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| செவ்வாய்- உறவினர் இழப்பு, கவலை. | காலை 9 மணி |
| புதன்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், உயர்ச்சி நிலை. | காலை 10 மணி |
| வெள்ளி- தெய்வ தரிசனம், மனச்சுமை நீங்கும். | காலை 7 மணி |
| சனி- உயர்ச்சி நிலை, தொழில் சித்தி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 9

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- கடன் பயம், மனக்கவலை. | காலை 9 மணி |
| திங்கள- வெளியிட வாசம், செய்தொழில் நஷ்டம். | காலை 10 மணி |
| செவ்வாய்- கௌரவம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், சஞ்சலம். | காலை 9 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், பெரியோர் நட்பு. | பி.ப 2 மணி |
| வெள்ளி- பணக்கஷ்டம், செய்தொழில் விருத்தி. | பி.ப 3 மணி |
| சனி- உறவினர் கஷ்டம், ஆடம்பரச் செலவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, பணத் தட்டுப்பாடு. | பகல் 12 மணி |
| திங்கள்- உறவினர் வருகை, விருந்துபசாரம். | காலை 7 மணி |
| செவ்வாய்-அந்நியரால் தொல்லை, பெண்கள் சகாயம். | பி.ப 1 மணி |
| புதன்- தெய்வ நம்பிக்கை, பணவரவு. | காலை 6 மணி |
| வியாழன்- அதிஷ்ட நிலை, காரியசித்தி. | காலை 7 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த எண்ணம், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், கீர்த்தி மேன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், நிலையற்ற தன்மை. | காலை 10 மணி |
| வியாழன்- தன்னம்பிக்கை, சிறந்த வாழ்வு. | பகல் 11 மணி |
| வெள்ளி- தெய்வ நம்பிக்கை, மனச் சந்தோஷம். | பி.ப 3 மணி |
| சனி- பயனற்ற செய், கடன் பயம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வீண் சந்தேகம், மனச் சஞ்சலம். | பி.ப 1 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- செய்தொழில் விருத்தி, பண இலாபம். | பி.ப 3 மணி |
| புதன்- வெளியிட வாசம், நிலையற்ற தன்மை. | காலை 8 மணி |
| வியாழன்- உயர்ச்சி நிலை, பணவரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, தெய்வ நம்பிக்கை. | பகல் 12 மணி |
| சனி- மனக்கஷ்டம், வீண் பயம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தேகசுகம் பாதிப்பு, வைத்தியச் செலவு. | காலை 9 மணி |
| திங்கள்- மறைமுக எதிர்ப்பு, மனக் கவலை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்-உறவினர் இழப்பு, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- வெளியிட வாசம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பிரயாணம். | காலை 9 மணி |
| வெள்ளி- தனலாபம், செய்தொழில் விருத்தி. | பி.ப 1 மணி |
| சனி- நடைக்கஷ்டம், கௌரவம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, மேன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- வீண் குழப்பம், உயர்ச்சியில் தடை. | காலை 9 மணி |
| செவ்வாய்-தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- உறவினர் உதவி, பணவரவு. | காலை 8 மணி |
| வியாழன்- கடன் பயம், மனக்கவலை. | காலை 10 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| சனி- செலவு கஷ்டம், வெளியிட பயணம். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனமகிழ்ச்சி, பணவரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- அந்நியரால் கஷ்டம், மனச்சஞ்சலம். | காலை 7 மணி |
| செவ்வாய்- உயர்ந்த எண்ணம், குடும்ப சுகம். | காலை 10 மணி |
| புதன்- பயனற்ற செயல், மனக் கவலை. | பகல் 12 மணி |
| வியாழன்- ஊதாரித் தனம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| சனி- உறவினர் உதவி, கீர்த்தி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ விந்தைகள்




நேற்று மிக நல்ல மனோநிலையில் இருந்திருப்பீர்கள். ஆனால் இன்று உலகமே உங்கள் தலையில் ஏறி அமர்ந்துகொண்டு விட்டதோ என்று துயரடைவீர்கள். எத்தகைய அடிப்படைக் காரணங்களுமின்றி உங்கள் மன நிலையில் திடீர் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக பெண்களுக்குத் தான் இத்தகைய மனநிலை மாற்றங்கள் அடிக்கடி ஏற்படும். இதனை ஒரு பொருட்டாகக் கருதலாகாது.

வாழ்க்கையில் அன்றாடம் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் நம் மனநிலையில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. பிரச்சனைகளை சமாளிப்பதற்கேற்ற வலுவினை நமக்கு ஊட்டுவதற்காகவே நரம்பு மண்டலத்தினூடாக மூளை, மனநிலை மாற்றத்தினை ஏற்படுத்துகிறது.

வேலைப்பழு அல்லது குடும்பச் சிக்கல்கள் போன்றவற்றால் அழுக்கம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இதனால் தூக்கம் வர மறுக்கும். கால நிலையாலும் மனோ நிலை பாதிப்படையும்.

பெண்கள்-குறிப்பாக மாதவிடாய் ஏற்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னரே ஒருவகை மனோ நிலைப்பாதிப்புக்குள்ளாகுகின்றனர்.

ஹோர்மோன் சுரப்புகளில் ஏற்படும் மாற்றமே இதற்கான காரணமாகும். வெறுப்பு, கோபம், தடுமாற்றம் என்ற பாதிப்புகள் இக்காலகட்டத்தில் ஏற்படும். உணவில் கொழுப்புத்தன்மை அதிகரித்தாலும் விட்டமின் B சத்து குறைந்தாலும் சோர்வினைக் காட்டும் மனோ நிலையினை அடைவார்கள்.

இவையெல்லாம் தற்காலிகமானவையே. ஆனால் இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானால் களைப்பு அதிகரிக்கும். பசியின்மை, தூக்கமின்மை ஆகிய நிலை தோன்றும். இவ்வாறானால் வெறுப்புணர்ச்சி அதிகரித்து வேறுபல கோளாறுகள் ஏற்படக்கூடும். இந்நிலை ஏற்படுமானால் நிச்சயமாக மருத்துவரை நாட வேண்டும்.


இத்தகைய தடுமாற்ற நிலையிலிருந்து மீள உங்களுக்கு உதவக்கூடியது உடற்பயிற்சியேயாகும். உங்கள் மனோ நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, சிந்தனைத் தெளிவைத் தரவல்ல சாதனம் தொடர்ச்சியான தேகப்பயிற்சியே. 'என்ட்றோஃபின்' எனப்படும் இரசாயனப் பொருளை மூளை சுரக்க உதவுவதும் உடற்பயிற்சியே. இந்தத்திரவமே உடலுக்குரிய இயல்பான சக்தியினை வழங்குகிறது.

உடலுறுதியானால் தான் உள்ளமும் உறுதியடையும். சிந்தனையும் தெளிவடையும்.

## தலைவலி தீர தக்க வழி!

எத்தகைய தலைவலிக்கும் இஞ்சி மிகச் சிறந்த மருந்தாகும்.

ஒற்றைத் தலைவலி போன்ற- மனிதனை வதைக்கும் உபாதைக்கு பல ஆங்கில மருத்துவ முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இவற்றால் பின் விளைவுகள் அதிகம். சாதாரண இஞ்சியை உபயோகித்தால் வேறு எந்தப் பாதிப்புகளும் கிடையாது. மாறாக உடலிலுள்ள ஏனைய பல வியாதிகளும் இஞ்சியினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.



இஞ்சியை சுக்காக்கி, பொடி பண்ணி வைத்துக்கொண்டு, தலைவலி வரும்போது கால் தேக்கரண்டி தூளை வெந்நீரில் கலந்து குடித்தால் போதும். தலைவலி நீங்கிவிடும்.


டென்மார்க் ஒடென்சி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இந்திய மருத்துவ நிபுணர் டாக்டர் கிருஷ்ணா சி.வஸ்தாவ இக்கருத்தினைக் கூறுகிறார். இந்திய மருத்துவ முறையில் இஞ்சிக்குச் சிறப்பிட முண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

தலைவலி வராமல் தடுப்பதற்கு மீன் உதவுகிறது. சின்சினாட்டி பல்கலைக்கழக மருத்துவ பீட ஆராய்ச்சியின் படி, மீன் எண்ணைக் குளிகைகளை தொடர்ந்து 6 வாரங்கள் சாப்பிட்டுவந்தால் மைக்றேன் எனப்படும் ஒற்றைத் தலைவலி நீங்கி விடுகிறது. மிக மோசமான மைக்றேன் வலியும் 6 வாரம் மீன் எண்ணை சாப்பிடும்போது 60 சதவிகிதம் குறைந்து விடும். தொடர்ந்து பயன்படுத்தினால் படிப்படியாக வேதனை குறைந்து விடும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

## சத்திர சிகிச்சைக்கு மனிதர் தேவையில்லை!

## இயந்திர மனிதனே இனி கவனிக்கலாம்!!

மிகவும் சிக்கலான நரம்பியல் அறுவை சிகிச்சையிலிருந்து இடுப்பு எலும்பு மாற்ற சிகிச்சை வரை அனைத்துவகை சத்திர சிகிச்சைகளும் செய்ய இயந்திர மனிதன்களைப் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். இதற்காகவே அமெரிக்காவில் மிக நவீனமான இயந்திர மனிதன்களை தயாரிக்கின்றனர்.



கலிபோர்னியாவைச் சேர்ந்த டாக்டர் ஹோவர்ட் பால், டாக்டர் வில்லியம் பர்கர் ஆகியோர் இடுப்பு எலும்பு மாற்று ஒப்பரேஷனுக்கு 'ரோபோடாக்' என்னும் இயந்திர மனிதனை பயன்படுத்துகின்றனர்.

இதற்கு கொம்பியூட்டர் பெருமளவில் உதவுகிறது. எலும்புக்குப் பதிலாகப் பொருத்தப்படும் மாற்று எலும்பை 'டைடேனியம்' என்னும் உலோகத்தில் உருவாக்குகிறார்கள். கொம்பியூட்டரைப் பயன்படுத்தி இந்த எலும்பு வெட்டி எடுக்கப்படுகிறது.

சத்திர சிகிச்சை செய்யப்படவேண்டிய இடுப்பு எலும்பின் வடிவம் கொம்பியூட்டர் திரையில் உருவாக்கப்படுகிறது. அதன் மேல் பொருத்துவதற்குத் தேவையான மாற்று எலும்பை கொம்பியூட்டர் திரையை பயன்படுத்தி டாக்டர்கள் தேர்வு செய்கின்றனர். இரண்டு எலும்பும் ஒன்றுக்கொன்று பொருந்துகிறதா என்று கொம்பியூட்டர் திரையில் உள்ள வடிவங்களில் ஒன்றன் மேல் ஒன்றைப் பொருத்தி ஆராயப்படுகிறது. சரியாகப் பொருந்துவதாக டாக்டர்கள் திருப்தியடைந்தவுடன் உண்மையான ஒப்பரேஷன் துவங்குகிறது.

நோயாளியின் இடுப்பில் ஒப்பரேஷன் செய்து இடுப்பு எலும்பை டாக்டர்கள் வெட்டி எடுக்கின்றனர். அதில் பழுதுற்ற பாகத்தை வெட்டி விட்டு டைடேனியத்திலான செயற்கை எலும்பை அதனுடன் இணைக்கின்றனர்.

இதன்பிறகு 'ரோபோடாக்' இயந்திர மனிதன் அதில் வேகமாகத் துளையிடுகிறது கொம்பியூட்டர் படத்தை அடிப்படையாக வைத்து அது இந்தப் பணியைச் செய்து முடிக்கிறது. அதன் பிறகு அதனை அந்த நோயாளியின் இடுப்பு எலும்பில் பொருத்தி மற்றொரு டைடேனியம் முடுக்கியைப் பொருத்தி வெற்றிகரமாக இணைக்கின்றனர்.

'ரோபோடாக்' இயந்திர மனிதனை பயன்படுத்தி 18 நாய்களுக்கு இது போன்ற இடுப்பு எலும்பு மாற்ற அறுவை சிகிச்சைகளை டாக்டர் ஹோர்வர்ட் பால், டாக்டர் வில்லியம் பர்கர் ஆகியோர் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். இதன் மூலம் மற்ற ஒப்பரேஷன்களையும் இயந்திர மனிதன் மூலம் நடத்த [illegible] மனிதனின் இதய ஒப்பரேஷனை செய்யக்கூடிய இயந்திர மனிதன்களும் தயாரிக்கப்பட உள்ளன.

## பிறப்பதற்கு முன்பே திருமணப் பிணைப்பு

## கனவு கண்டனர் பெற்றோர்-நிறைவேற்றினர் பிள்ளைகள்




அவனும் அவளும் அன்றுதான் முதன்முதலில் சந்தித்தனர். காதல் வசப்பட்டனர். திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மணமகனின் பெற்றார் 3000மைல் கடந்து மணமகள் இல்லத்தை நாடி வந்தனர். அதிர்ச்சியும் அளவிலா ஆனந்தமும் அடைந்தனர்.

இந்த அதிர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம்- காதலர்களின் தந்தையர் இருவரும், திருமணமாகாத இளைஞர்களாக இருந்தபோது, தாங்கள் மணம் முடித்து தங்களுக்குக் குழந்தைகள் பிறந்து வளர்ந்து அவர்களும் திருமண வயதை எட்டியதும் அவர்களுக்கு திருமணம் செய்து வைப்பதென முடிவெடுத்திருந்தனர்.

இவ்வாறு சபதம் மேற்கொண்டவர்கள் இருவரும் பிரிந்து எங்கெங்கோ சென்று வாழ்ந்தனர். இருப்பினும் இருவருக்கும் பிறந்த பிள்ளைகள் இருவரும், தங்கள் பெற்றார் பல ஆண்டுகளுக்கு முன்னர் கண்ட கனவை நனவாக்கி விட்டனர். இதனால் தான் 'திருமணங்கள் தேவலோகத்தில் நிச்சயிக்கப்படுகிறது' என்கிறார்கள் போலும்!

மணமகளான றோனா கலிபோனியாவில் தனது பெற்றாருடன் வாழ்ந்து வந்தாள். வயது 22. ஜோர்ஜியாவிலிருந்து தொழில் காரணமாக ஸ்ரீவ் கலிபோனியாவுக்கு வந்திருந்தான். அடிக்கடி சந்தித்தனர். காதல் வசப்பட்டு திருமணத்துக்கான நாளையும் குறித்துவிட்டனர். றோனாவின் பெற்றாரும் மணமகனைப்பற்றி எதுவித விசாரணையுமின்றி சம்மதமளித்தனர்.

நல்ல உடலமைப்புடன் அழகு சிறப்பான உத்தியோகத்திலுள்ள மாப்பிள்ளை கிடைத்திருக்கும்போது தடை ஏன்?

திருமணத்துக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. அடுத்த நாட்காலை தேவாலயத்தில் திருமணம். முதல்நாள் நள்ளிரவு மணமகனின் பெற்றார் ஜோஜியாவிலிருந்து வந்தனர். தனது தகப்பனாரை ஸ்ரீவ் தனது மாமனாருக்கு அறிமுகப்படுத்தியது தான் தாமதம்- இருவரும் ஒடிச்சென்று ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டு 'ஓ'வெனக்கதறி அழ ஆரம்பித்தனர்.

மணமக்களாகப் போகும் ஸ்ரீவ் மற்றும் றோனா ஆகியோருக்கு மட்டுமல்லாமல் தாய்மாருக்கும் ஏனைய உறவினருக்கும் எதுவுமே புரியவில்லை. சம்மந்தி இருவரும் கண்ணீர் விட்டே அழுதனர். அந்த அழுகையினை மாற்ற எவராலும் முடியவில்லை. ஏறத்தாழ ஒரு மணிநேரம் வரை இருவராலும் எந் வார்த்தையுமே பேச முடியவில்லை. திக்தித் திணறி மெதுவாக தங்கள் ஆனந்தக் கண்ணீருக்கான கதையைச் சொன்னார்கள். அந்தக் கதையைக் கேட்டிருந்த அனைவருமே, 'இப்படியும் நடக்குமா?' என்று ஆச்சரியப்பட்டனர்.

ஜோனும் டேவிடும் வியட்நாம் போரில் ஒன்றாகப் பணிபுரிந்தவர்கள். இருவரும் அமெரிக்காவிலிருந்து இராணுவ சேவைக்காக வியட்நாம் யுத்தமுனைக்கு அனுப்பப்படும்போது இருவருக்கும் 20 வயதேயாகியிருந்தது. ஒரே படைப்பிரிவில் இருந்தமையினால் ஒன்றாகவே இரண்டு வருடங்கள் வாழ்ந்தனர். யுத்த முனையிலிருந்து நாடு திரும்பும் போது, தங்கள் நட்பைத் தொடர்ந்து வளர்ப்பதற்காக ஒரு சபதம் செய்தனர். இவர்களுக்கு உரிய வயது வந்து திருமணமாகி குழந்தைகள் பெற்றால், தங்கள் மூத்த பிள்ளைகள் ஆணும் பெண்ணுமாகப் பிறந்தால், அவர்களை திருமண ஒப்பந்தத்தால் பிணைத்து தங்கள் நட்பினைத் திடப்படுத்திக்கொள்வது என்று தீர்மானித்தனர்.



இவ்வாறு முடிவெடுத்துவிட்டு இருவரும் பிரிந்து சென்றுவிட்டனர். இரண்டொரு வருடம் கடிதத் தொடர்புடன் ஒருவரை ஒருவர் மறந்துபோய் விட்டனர். ஜோன் கலிபோனியாவிலும் டேவிட் ஜோஜியாவிலும் குடும்பம் நடத்த ஆரம்பித்தன்ர். குழந்தைகளும் பிறந்தனர். அவர்களும் வளர்ந்து, யார் இன்னார் என்று தெரியாமலே காதல் வசப்பட்டு கலியாணம் செய்துகொள்ளவும் முன்வந்தனர்.

தாங்கள் 27 ஆண்டுகளுக்கு முன்னர் கண்ட கனவு தங்கள் பிள்ளைகளினாலேயே நனவாவது கண்டு ஆனந்தம் கொள்ளாமல் இருக்க முடியுமா?

## ஆடுகதிரை ஆரோக்கியமளிக்கும்!

## வயதானவர்களுக்கு ஒரு வசதியான யோசனை



வயதானவர்கள் ஆடுகதிரையில் அமர்ந்த வண்ணம் பொய்த்தூக்கம் போடுவார்கள். தினசரி ஒருசில நிமிடங்கள் ஆடுகதிரையில் அமர்ந்து ஆடுவது தேக ஆரோக்கியத்துக்கு உதவும் என்று 'மெடிக்கல் அப்ஸ்ட்ராக்ட் ஜேர்னல்' என்ற மருத்துவ சஞ்சிகை கூறுகிறது.

65 முதல 95 வயது வரையிலானவர்கள் 25 பேரை வைத்து நடத்திய ஆய்வின் படி வயதானோருக்கு இருதய நோய் வராமல் தடுக்க ஆடுகதிரை ஆட்டம் உதவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வேறு வகையான உடற்பயிற்சிகளில் ஈடுபடமுடியாதவர்கள் ஆடு கதிரையில் சில நிமிடங்கள் ஆடுவதனால் நல்ல பலன் அடையலாம் என்று அச்சஞ்சிகை கூறுகிறது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

எழுதுவது ரசிகன்

# கொலை விழும் நேரம்



"வேட்டையாடும் மானானேன்
வித்தை காட்டும் பொருளானேன்
காட்டில் வாழும் கிளியாகாமல்
நாட்டில் வாழும் பெண்ணானேன்."
-கவியரசு கண்ணதாசன்.

புதுமை-இளமை-விறுவிறுப்பு

பூபால் அன்ட் பிரதர்ஸ் சோகத்தை நிரப்பிக்கொண்டு சந்திரன் இல்லாத வானம்போல களையிழந்திருந்தது.

மனோகர் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருக்க விசாரித்துக்கொண்டிருந்த டி.ஐ.ஜி.டென்சில் அவனை விசாரித்துக்கொண்டே, கவலையாய் முகம் வைத்துக்கொண்டிருந்து, தங்களிடம் என்ன கேள்வி வருமோ என்று யோசித்துக்கொண்டிருந்த ஊழியர்களை விழிகளால் நுட்பமாக அளவெடுத்துக்கொண்டிருக்க, பொலிஸ் போட்டோகிராபர், ஹரிகரனை பல கோணங்களில் கமராவால் கிளிக் பண்ணிக்கொண்டிருந்தார்.

சித்ரா கருகிய மலர்போல முகம் வாடிப் போய், காலையில் கண்ணாடி பார்த்து கச்சிதமாக கண்களுக்கு தீட்டிய மை கண்ணீர்பட்டு கொஞ்சம் கரைந்திருக்க, அளவோடு லிப்ஸ்டிக் பூசிய உதடுகள் விம்மிக்கொண்டிருக்க செத்துப்போய் விட்ட ஹரிகரனையே வெறித்துப் பார்த்தபடி நின்றாள்.

"அப்படியானால் மிஸ்டர் மனோகர் சித்ராதான் ஹரிகரன் செத்துக்கிடந்ததை முதலில் பார்த்தது என்கிறீர்கள்."

வேண்டியது உங்கள் கடமை."

மெல்லத் தலை திருப்பி, சோகம் நிரம்பிய முகத்தில், ஈரத்தில் நனைந்த விழிகள் படபடக்க டி.ஐ.ஜியை நோக்கினாள்.

"பிளீஸ்."

என்றார் டி.ஐ.ஜி. வெந்த புண்ணில் வேல் செருகாத மென்மையான குரலில்.

அடுத்த நொடியே உதடு பொத்திய கரம் விலக்கி 'ஓ'வென்று உடைந்து அழுதுகொண்டே,

"யார்....யார்...என் ஹரியை...இப்படி மோசமாய்.....அநியாயமாய்...நாசமாய்..... ஐயோ...!...ஐயோ..."

டி.ஐ.ஜி. டென்சிலுக்கு சங்கடமாய் இருந்தது.

கொலை விவகாரங்களில் இதுதான் சங்கடம். உறவுகள் கதறும். விசாரணைகளுக்கு குறுக்கே விழுந்து புரண்டு கண்ணீர்விட கவலை தொற்றிக்கொள்ளும்.

இத்தனை இளமையான, அதிக பட்ச அழகான சித்ரா தன் இனிமையான கனவுகளை ஹரிகரன் சிந்திய குருதியோடு சேர்ந்து இழந்துவிட்டு, கனவுகள் தெரிந்த விழிகளில் கண்ணீரை சுமந்துகொண்டு...நினைத்தபோது

"வீட்டுக்கு விடப்பா." பரபரப்பு மாறாத குரலில் பிரசாத் சொல்ல, "ஏதோ பெரிய சிக்கல்" என்று நினைத்தபடி காரை கிளப்பினான் சாரதி.

■

ஆள் உயரக் கண்ணாடியில் -ஆண் கண்டால் அசந்து மயங்கும், பெண்கண்டால் பொறாமையால் பெருமூச்சுவிடும் தன் உடலின் அமோக செழிப்புக்களை இரசித்தபடியே நைற்றியை தோள் வழியாக நழுவவிட எத்தனித்த நொடியில்,

"நிரோசா ஆபத்து" என்று உள் மனது எச்சரிக்க,

"இங்கே நீ மட்டும் அல்ல. இன்னொரு ஆளும் உண்டு" என்று உறுத்தல் செய்ய,

சட்டென்று தலைதிருப்பி பின்னால் பார்க்க,

இடுப்பில் ஒரு கை ஊன்றியபடி, மறுகையில் ரோஜாப்பூவோடு மயக்கமாய் அவளைப் பார்த்தபடி, தன் உதடுகளை மேலும் கீழும் நாவால் ஈரப்படுத்திக்கொண்டான்.

திடுக்கிடலோடு விக்கித்துப்போன நிரோசா, வாய் திறந்து கத்த முயல,

மென்மையான மலர் இதழ்களை ஆழமாய் கடித்ததால் பற்குறி பதிந்து இரத்தம் கசிந்தது.

வலிதாங்காமல் நிரோசா விழிகள் மூட விழிக்கதவுகளை உடைத்துக்கொண்டு கண்ணீர் வந்து இறங்கியது.

இதழ்களை விடுவித்து அங்கே கசிந்த இரத்தம் பார்த்து வக்கிரமாய் புன்னகைத்து இரசித்தான்.

இதழ்கள் விடுவிக்கப்பட,

"அ..ம்...மா.." என்று நிரோசா வாய்விட்டு கதற,

"அம்மாதான் ஊரில் இல்லையே கண்ணு. நீ அழைப்பது எப்படி காதில் விழும். வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வீட்டு வேலையாட்களுக்கு விடுமுறை கொடுக்கும் உங்கள் நல்ல குணம் எத்தனை உதவியாக இருக்கிறது பார்த்தாயா? மலைகள் மலைக்க வைக்கிறது."

சொல்லிக்கொண்டே அவள் தோள்வழியாக எட்டி தன் மணிக்கட்டில் நேரம் பார்த்தான்.

9.17 என்றது.

இன்னும் மூன்று நிமிடங்கள். நிரோசா செத்துப்போக வைக்கப்பட பாக்கியுள்ளது மூன்றே மூன்று நிமிடங்கள்.

'யார் இவன்? இவனுக்கு எப்படி அம்மா ஊரில் இல்லாமல் போனது, இன்று வெள்ளிக்கிழமை வீட்டில் வேலையாட்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்பது எல்லாம் எப்படித் தெரியும்?'

நிரோசா அந்த பரபரப்பிலும் யோசித்தாள்.

நிரோசா யோசித்துக்கொண்டிருக்க அவன் அவளது வெற்று மார்பில் குனிந்து பற்களால் கடித்தான்.

வீரிட்டு அலறி, பலம் திரட்டி அவன் தோள்களில் கைவைத்து நிரோசா தள்ளிவிட,

எதிர்பாராத பலத்தில் திகைத்து அவன் பின்னே சரிய,

தன்னைக் கொல்லவரும் பசுவைக்கூட கொல்லலாம். தவறில்லை. என்று எங்கோ கேட்டது நிரோசாவின் நினைவில் வர,

பின்னால் சரிந்தவனின் அடிவயிற்றுக்கு கீழே மிகச் சரியாகக் கணக்கிட்டு தன் கால் உயர்த்தி, கால்களில் தன் பலம் முழுவதும் செலுத்தி உதைத்தாள் நிரோசா.

எதிர்பாராத உதையில் துடித்து, தன்னை யறியாமல்,

"அ...ம்...மா..."

என்று அலறி அவன் சரிந்தபோது ஒலித்த குரல் பெண் குரல்போல் தெரிந்தது.

அவன் பின்னால் சரிய அறைக்கதவு நோக்கி ஓடினாள் நிரோசா.

தப்பப் போகிறாள் என்று தெரிந்து, வலியை அடக்கிக்கொண்டு அவன் சுதாகரிப்பதற்கு இடையில்,

அறைக்கதவு திறந்து, வெளியே பாய்ந்து திடீரென்று அந்த யோசனை வர, கதவு மூடி சாவியை எடுத்துக்கொண்டு, முன்ஹோலில் கிடந்த தொலைபேசி நோக்கி ஓடினாள்.

கதவு வெளியே பூட்டப்பட்டதால் அதிர்ந்து போய், அடுத்து என்ன செய்யலாம் என்று அவன் குழம்பிக்கொண்டிருக்க,

வெளியே ரிசீவரை கையில் எடுத்த நிரோசா யாருக்கு முதலில் போன் செய்வது, அப்பாவுக்கா, அல்லது பொலிசுக்கா? என்று யோசித்து முடிப்பதற்கிடையே,

அவள் கையில் இருந்த ரிசீவர் பிடுங்கப்பட்டது.

திடுக்கிட்டு திரும்ப முயல, வலிய கரம் ஒன்று இரும்புப் பலமாய் அவள் கழுத்தை சுற்றிவளைத்து இறுக்கத் தொடங்கியது.

இறுதி நேரப் பலப்பிரயோகமாய் சகல சக்திகளையும் திரட்டி கழுத்தை திருப்பி பார்த்து,

"நீயா?"

என்றாள் கழுத்து இறுக்கப்பட்டுகொண்டிருந்ததால் திணறலாய் வந்த குரலில்

"ஆம். நானே! இனி நீ சாவதுதானே."

என்றபடி அவள் கழுத்தை மேலும் இறுக்கத் தொடங்கினான் நிரோசாவால் "நீயா?" என்று கேட்கப்பட்டவன்.

நிரோசா கழுத்து நெரிக்கப்பட்டு விழிகள் பிதுங்கிக்கொண்டிருக்க, கால்களை தரையில் உதைத்து துடித்துக்கொண்டிருக்க,

வெளியே காரில் வந்து இறங்கி, அவசரமாய் குதித்து, கார்க் கதவுகூட மூட மறந்து ஓடிவந்துகொண்டிருந்தார் பிசாத்.

■

டி.ஐ.ஜி டென்சில் ஹரிகரனின் உடலை கொண்டுசெல்ல உத்தரவிட்டு, ஹரிகரனின் அலுவலக அறையை அங்குலம் அங்குலமாய் அலசிக்கொண்டிருக்க,

கதவு தட்டி, "யெஸ் கம் இன்" என்று அவர் குரல் கொடுக்க, உள்ளே வந்த ரிசப்ஸனிஸ்ட் அழகாய் தெரிந்தாள். அதிகமாய் குழைந்து,

"சேர் உங்களுக்கு ஒரு போன் வந்திருக்கிறது."

என்றாள். சத்தமாக பேசினால் தன் உதடுகளுக்கு வலிக்குமோ என்று பயப்படுவது போல் மிக மெல்லிய குரலில்.

"ஐ.சீ" என்றுவிட்டு, வெளியே செல்ல முயல,

"இங்கேயே கனெக்ஷன் கொடுத்தீருக்கிறேன் சேர்" என்றாள். ஹரிகரனின் மேசையில் இருந்த போன்களில் சிவப்பாக இருந்த போன் நோக்கி, நகச்சாயம் பூசப்பட்டிருந்த விரல் நீட்டி சுட்டிக்காட்டினாள்.

காற்சட்டைப் பொக்கற்றுக்குள் இருந்து கைக்குட்டை எடுத்து ரிசீவரின் முதுகில்போட்டு தூக்கி காதில் வைத்து,

"ஹலோ"


என்று குரல் கொடுக்க, மறுமுனையில் பெண் குரல் சிரித்தது.

"என்ன டி.ஐ.ஜி. என்னை - ஐ.மீன் என் குரலைத் தெரிகிறதா?"

என்று சிரிப்பின் ஊடே கேட்டது.

"தகவல் சரிதானே. அது ஏன் ஐயா பத்திரிகைக்காரர் என்றால் பாம்பை விரட்டுவது போல் துரத்துகிறீர்கள்?"

"என்ன சொல்கிறாய் நீ,"



"யெஸ் டி.ஐ.ஜி. காலையில் வரும்போதுகூட அவர் உற்சாகமாக எங்களுக்கெல்லாம் சொன்ன குட்மோனிங் இப்போதும் கண்ணில் நிற்கிறது டி.ஐ.ஜி!"

மனோகர் தன் இடது கைவிரித்து முகத்தை மூடிக்கொண்டு சின்னக் குழந்தைபோல உடல் குலுங்க விம்மினான்.

இன்ஸ்பெக்டர் மோகனை சைகையால் அழைத்து,

"பத்திரிகைக்காரர்கள் வெளியே நிற்கிறார்கள். கவனமாக டீல் பண்ணுங்கள். கிளறுவார்கள். உளற வேண்டாம்."

"யெஸ் சேர்."

நிமிர்ந்து சல்யூட் வழங்கி விலகி வெளியே போக, சித்ராவைப் பார்த்தார் டி.ஐ.ஜி. சித்ரா இப்போதும் ஹரிகரனையே வெறித்துக்கொண்டு கன்னங்களில் கோடாக இறங்கி தரைநோக்கி நழுவிக்கொண்டிருந்த கண்ணீரோடு, பொங்கி வரும் சோகத்தை உதடுகள் உரத்து அறிவித்து விடுமோ என்று நினைத்து தன் கரத்தால் உதடுகளை இறுகப் பொத்திக்கொண்டிருந்தாள்.

டி.ஐ.ஜி. தொண்டையை செருமிக் கொண்டு, சித்ராவுக்கும் கேட்கக்கூடியதாய், மனோகரையும், அவன் பக்கத்தில் நின்றவர் களையும் விழிகளால் வாங்கிக்கொண்டு,

"எல்லோரும் கொஞ்சம் வெளியே இருங்கள். எங்கள் வேலை கொஞ்சம் இருக்கிறது. பிளீஸ்."

மனோகரும் மற்றவர்களும் விலக சித்ரா மட்டும் அசையாமல் நிற்க, அறையின் மயான அமைதியை பூட்ஸ் சத்தம் சற்றுக்கலைக்க, அருகே போய்,

"மிஸ் சித்ரா. உங்கள் சோகம் புரியாமல் இல்லை. என்றாலும் எங்களோடு ஒத்துழைக்க நெஞ்சுக்குள் அனுதாபம் எழ,

"விலைமதிப்பற்ற இழப்புத்தான். எனக்குத் தெரியும். அறிந்துவிடலாம். யார் இதன் காரணம் என்று அறிந்துவிடலாம். பிளீஸ் அமைதியாக..."

அவர் சொல்லி முடிப்பதற்கிடையில் "நோ...நோ.." என்றபடி, தலையை இருபுறமும் வேகமாய் அசைத்தபடி, தள்ளாடி நடந்து வெளியே போக கட்டை விரலால் மூக்கின் நுனியை அழுத்தியபடியே டி.ஐ.ஜி. டென்சில், அவள் நடந்து போவதையே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, அவள் அழுதபோது, உடைந்து பேசியபோது மனதில் பதிவு செய்த காட்சிகளை மறுபடியும் மனத்திரையில் ஓடவிட்டு, அதிலே சத்தியமான சோகம் தெரிகிறதா? அல்லது பொலிசை திசை திருப்ப சோகம் பூசப்பட்ட போலித்தனம் தெரிகிறதா என்று யோசித்தபடி, ஹரிகரனின் உடலுக்கு பக்கத்தில் போய் உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை ஆராயும் வேலையை ஆரம்பிக்க,

ஹரிகரனின் இடதுகரம் இறுகப் பொத்தியபடி தெரிய, முதல் வேலையாக விரல்களை இழுத்து பொத்திய கையை விரிக்க, டி.ஐ.ஜி. டெனசிலின் விழிகள் வியப்பால் விரிந்தன. தடயம் கிடைத்த திருப்தி முகத்தில் அமர்ந்தது.

■

டி.ஐ.ஜி அலுவலகத்தில் வேகமாய் ஓடி, அவர் அங்கே இல்லை என்று பதில்வர, மேலும் பதட்டமாகி, திரும்பி வேகமாய் வந்து காரில் தாவி "ம்...போ" என்று பிரசாத் சாரதியிடம் சொல்ல, எங்கே போகச் சொல்கிறார் என்று புரியாமல், காரை ஸ்டாட் செய்தபடி தயங்கிய குரலில், "எங்கே போ...." என்று அவன் கேட்டு முடிப்பதற்கிடையில்,

ஒரே எட்டில் பாய்ந்து, கையில் கிடந்த ரோஜாப்பூவைத் தரையில் போட்டுவிட்டு, ஒரு கரத்தால் அவள் வாய்பொத்தி, மறுகரத்தால் அவளின் உடல் வளைத்து தன்னோடு இறுக்கினான் அவன்.

விழிகளில் பயம் நிறைய, திமிறி விடுபட முயன்றும் முடியாமல் போக,

"பயப்படாதே. மிக முக்கியமாய் தேவையற்ற முயற்சியாக சத்தம் போட முயலாதே. ஒத்துழை பெண்ணே. ஒத்துழை."

என்றான். வேண்டுமென்றே குரலை மாற்றிப் பேசுகிறான் என்று தெரிந்தது.

மறைப்பே இல்லாமல் இருந்த பருவச் செழுமைகள் மீது பார்வை பதித்துக்கொண்டே பல்லை காட்டினான்.

"என்ன ஒத்துழைக்கிறாயா? ஒத்துழைப்பாய். நீ புத்திசாலிப்பெண். சத்தம் போட்டால் உன் பொன்னான மேனி பிணமாகிவிடும். அது உனக்குத் தெரியும்."

என்றபடி அவள் உதடுகளை பொத்தியிருந்த தன் கரம் விலக்கினான். அவள் உடலை மட்டும் தன்னோடு சேர்த்து பலம்கொண்டமட்டும் இறுக்கினான்.

தன் மார்புகள் இரண்டும் அவன் மார்பில் பதிந்து அழுந்த நிரோசாவுக்கு வேதனையாக இருந்தது. விடுபட முயல, முடியாமல் அவள் முதுகின் மையத்தில் இருகரங்களால் அழுத்திய படி ஆவேசமாய் குனிந்து மென்மையான செம்பூவாய்த் தெரிந்த அவள் இதழ்களை கடித்தான்.

வலித்தது. இதழ்களை விடுவிக்க முயல இன்னும் பலமாய் கடித்தான்.

அழகிய பூவை சிகரெட் நெருப்பால் சுட்டு பார்த்து இரசிக்கும் வக்கிர மனம்போல,

"கொலை பற்றிய தகவல் தந்து உதவிய நானும் ஒரு பத்திரிகையாளர்? அல்லது பத்திரிகையாளினி. சரி கொலை விவகாரத்தில் எந்தளவுக்கு பொலிஸ் மோப்பம் பிடித்து முன்னேறியிருக்கிறது என்று அறிய வந்தால் உங்கள் இன்ஸ்பெக்டர் மிஸ்டர்...மிஸ்டர் ஆ...மோகன், அந்த மனுசன் முறைக்கிற முறைப்பே சரியில்லை."

அவள் சொல்லிக்கொண்டிருக்க டி.ஐ.ஜி டென்சில் யோசித்தார்.

அப்படியானால் பத்திரிகையாளர்களோடு இவளும் வந்திருக்கிறாள். எனில் மடக்குவது சுலபம். மடக்கி விசாரிப்பது முக்கியம்.

"ஹலோ டி.ஐ.ஜி. என்ன பலமான யோசனை? இன்னொரு தகவல். பூபால் அன்ட் பிரதர்ஸ் உரிமையாளர்களில் இன்னொருவர் பிரசாத். அந்த பிரசாத் வீட்டிலும் ஏதோ விபரீதம். உடனே போனால் தடுக்கலாம். முயன்றுபாருங்களேன். வாழ்த்துக்கள்."

தொடர்பு துண்டித்தாள். ரிசீவரை வைத்துவிட்டு, விரைந்து அறைக்கதவு திறந்து இன்ஸ்பெக்டர் மோகனை அழைத்து,

"இங்கு வந்திருந்த பத்திரிகையாளர்களில் பெண்கள் யாராவது."

"யெஸ் சேர். இரண்டு பேர் பெண்கள்."


"எந்தப் பத்திரிகை. மற்றும் விபரங்கள் தெரியுமா உங்களுக்கு?"

"தெரியும் சேர்."

"ஓ.கே. அடுத்த அரைமணிநேரத்தில் அவர்கள் இருவரையும் நான் பார்க்க வேண்டும்."

"யெஸ் சேர்." இன்ஸ்பெக்டர் உத்தரவோடு விரைய, மனேஜர் மனோகரை அழைத்து பிரசாத் வீட்டு தொலைபேசி இலக்கம் கேட்டுப் பெற்று தொலைபேசி நோக்கிப் போனார் டி.ஐ.ஜி.

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: கே. ஜேசுராஜா
முகவரி: C/O JINNAH
P.O.BOX 5952
DOHA, QATAR
AG
பொழுதுபோக்கு: ரி.வி., வானொலி, புத்தகம், பத்திரிகை.



பெயர்: எம். தஸ்லிமா
வயது: 18
முகவரி: 69/1, மணல் குண்டு, புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், பூந்தோட்டம் அமைத்தல்.



பெயர்: வ. முரளீதரன்
வயது: 22
முகவரி: 12, நீர்ப்பாசன மனை, கள்ளியங்காடு, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



பெயர்: ஏ.எம். சமீர்
முகவரி: இல. 63/2,
ஸமீனா மன்ஸில்,
கும்புகந்துறை,
தெல்தெனியா.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: எஸ். ஜோசப்
முகவரி: 12/2, புவக் வத்த வீதி,
நாயக்க கந்த,
ஹெந்தளை, வத்தளை.
பொழுதுபோக்கு: பேனா நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல்.

பெயர்: எம். ஐ.எம். நிலாம்
வயது: 17
முகவரி: இரும்பு தைக்கா வீதி,
காத்தான்குடி-06.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

பேனா நண்பர் அரங்கம்
தினமுரசு வாரமலர்
88/14 சோமாதேவி பிளேஸ்
கிருளப்பனை-கொழும்பு-5.

பெயர்: கௌரி நடேசன்
வயது: 16
முகவரி: எல்.எஸ்.15,
டி.எஸ்.சி. மார்க்கட்,
நீர்கொழும்பு.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், ரி.வி. பார்த்தல்.

பெயர்: ஐ. நஜீபா
வயது: 15
முகவரி: நடுத்தீவு, மூதூர்-7.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல்கள் வாசித்தல், வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல், ரி.வி. பார்த்தல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

கதாசிரியர்களின் கற்பனைக்கும் எட்டாத எத்தனையோ விஷயங்கள் நிஜவாழ்க்கையில் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. யாரவும் கற்பனை என்று கூறி பாராட்டுபெற விரும்பவில்லை. வியப்படைகிறீர்களா? நம்நாட்டு நடப்பு இது.

## சிறுகதை

# என்ன செய்வேனோ தெரியாது

முகில் வண்ணன்

அந்த வீடு அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. இன்னும் இரண்டு நாளில் அந்த வீட்டில் பெண் பார்க்க வரப் போகிறார்கள். பெண் பிடித்து விட்டதென்றால் நிச்சயதார்த்தம்-விரைவில் திருமணமும் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

அதனால் எல்லாவற்றிற்கும் ஏற்றாற்போல் வீட்டைத் திருத்திப் பெயின்ற் பண்ணி அலங்காரம் பண்ண ஏற்பாடாகி இருந்தது. அதற்கெனச் சிலர் சுடுபட்டிருந்தனர். நெருங்கிய உறவினர் வந்து கூடுவது வழக்கமாக இருந்தது. அவர்களது பிள்ளைகளின் கும்மாளத்தைக் கேட்கவே வேண்டாம்.

என்னென்ன பலகாரம் செய்வது? பெண்ணுக்கு எப்படி அலங்காரம் செய்வது? என்றெல்லாம் பெண்கள் கூடித்திட்டம் போட்டனர். இப்போதே செய்து வைக்கக் கூடியவற்றைச் சிலர் ஒரு பக்கமாக இருந்து செய்துகொண்டிருந்தனர். வீடு இப்போதே கல்யாண வீடுபோல் களைகட்டி இருந்தது.

இராமனுக்கு இரண்டு பெண்கள்-ஒன்று மங்களா- மூத்தவள். மற்றது மஞ்சுளா இளையவள். இருவருக்கு மிடையே இரண்டு வருட இடைவெளி இருந்தது. ஆனால் அந்த வித்தியாசம் மஞ்சு 'பெரிசாகும்' வரைதான் தெரிந்தது. மஞ்சு பெரிசாகியதும் மாயன் என்ன மாயம் செய்தானோ தெரியாது. அழகியாய் உருண்டு திரண்ட அவயவங்களுடன் வளர்ச்சியடைந்தாள். இப்போது பார்ப்பவர்கள் இரட்டைப்பிள்ளைகளா என்று கேட்கும் அளவுக்கு இருவர் வளர்ச்சியும் ஒற்றுமையும் நிறமும் இருந்தது. அழகில் மட்டும் மஞ்சு மங்களாவை விட ஒருபடி மேலே நின்றிருந்தாள். மஞ்சுவின் இடது பக்கம் காதுக்குக் கீழே ஒரு மச்சமும் இருந்தது. இந்த வித்தியாசங்களும் இல்லை என்றால் அக்கா தங்கையை அடையாளம் காண்பது அரிதாக இருக்கும்.

இராமனுக்குக் கவலையாக இருந்தது மூத்தவளைப் பெண்பார்க்க வருபவர்கள் எல்லாம் இளையவளையே கேட்டுச் சென்றார்கள். மூத்தவளுக்கு செய்யாமல் இளையவளைக் கட்டிக்கொடுக்க அவருக்கு மனம் வரவில்லை. இதனால் கவலை அவரிடம் நிரந்தரமாகக் குடிகொண்டுவிட்டது. இப்போது எப்படியும் இந்தச் சம்பந்தத்தை முடித்துவிட வேண்டும் என்று தீர்மானமாக இருந்தார்.

அதனாலே எல்லா ஏற்பாடுகளிலும் தீவிரமாக இருந்தார். அதனால் வீடு களைகட்டி மகிழ்ச்சியாக இருந்தது. தரகரும் இதற்கு ஒத்துழைப்பதாக கூறியிருப்பதில் நம்பிக்கை இருந்தது. வேறென்ன வேண்டும்?

அன்று மாலையாகிவிட்டது. பெண் பார்க்க இன்னும் சிறிது நேரத்தில் மாப்பிள்ளை வீட்டார் வர இருக்கிறார்கள். மங்களா முழுகி தலையை ஈரம் துவட்டிக் கொண்டிருந்தாள். அவளை அலங்கரித்து விட மூன்று பெண்கள் அறையில் காத்திருந்து கதைபேசிக்கொண்டிருந்தனர்.

சடுதியாக அறைக்குள் வந்த இராமன் "மங்களா இங்கே வா. நீ அறைக்குள் இருந்துகொள். வெளியே வரவேண்டாம். நீங்கள் மஞ்சுவை உடுத்தி அனுப்புங்கள். மூச். ஒருத்தரும் ஒன்றும் பேசக்கூடாது" என்று கூறிவிட்டு வெளியேறினார்.

அவர் சொன்னது போல் எல்லாம் நடந்தேறின. வந்தவர்கள் பெண்ணைப் பார்த்தார்கள். சம்மதம் சொன்னார்கள். நிச்சயதார்த்தம் உடனே முடிந்து வெற்றிலை பாக்கு மாற்றிக்கொண்டார்கள். திருமணத்திற்கு நாளும் மிக அண்மையிலேயே குறித்தாயிற்று. அடுத்த வருடம் மற்றப் பிள்ளைக்கும் திருமணம் செய்யவே இந்த அவசர ஏற்பாடு என்றார் இராமன். மாப்பிள்ளைக்கும் மட்டும் அவசரம் இல்லையா? அவரும் ஏற்றுக் கொண்டார்.

இதை எதிர்பார்த்துத் தானே இராமன் வீட்டில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்தார். அதன்படி அவர் காரியமாற்றினார். ஆனால் வீட்டில் இராமனைத் தவிர மற்றவர்கள் எல்லாம் மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருந்தனர். என்ன நடக்குமோ என்ற பயம் இருந்து கொண்டிருந்தது.

திருமண நாளும் வந்தது.

மணமகள் வீட்டிலேயே திருமணம் நடக்க ஏற்பாடு. ஐயர் மாப்பிள்ளையை வைத்து கிரிகைகளை ஆரம்பித்து இருந்தார். ஓமம் வளர்த்து கிரிகைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. மாப்பிள்ளைக்குரியவை முடிந்ததும் 'பெண்ணைக் கூப்பிடுங்கோ' என்றார் ஐயர்.

பெண்ணும் வந்து அமர்ந்து விட்டாள். ஐயர் பெண்ணுக்குக் காப்புக் கட்டி அந்தக் கிரிகைகளையும் நடத்தி முடித்து தாலி கட்டுவதற்குரியவற்றைச் செய்து கொண்டிருந்தார்.




திடீரென பெண்ணின் பக்கம் திரும்பிய மாப்பிள்ளை எழுந்து நின்று கொண்டார். மண்டபத்தில் சலசலப்பு. என்னபேச்சுக்கள். 'இருங்கோ இதோ முடித்து விடுகிறேன்.' என்றார் ஐயர்.

முன்னால் இருந்த தகப்பனிடம் வந்து விஷயத்தைச் சொன்னார் மாப்பிள்ளை. அதற்கிடையில் தாயும் வந்து விஷயத்தை அறிந்து பெண்ணிடம் அம்புபோல் சென்று அவளது முகத்தை மூடி இருந்த "மொக்காட்டை" திறந்துவிட்டார்.

"எங்களுக்குக் காட்டிய பெண் இது இல்ல. ஏமாற்றி வேறு பெண்ணைக் காட்டி இருக்கிறார்கள். இந்தக் கல்யாணம் நடக்காது." என்று சத்தமிட்டார் மாப்பிள்ளையின் தகப்பன். தாய் இன்னுமொருபடி மேலே. வந்திருந்தவர்கள் எல்லாம் எழுந்துநின்றுவிட்டார்கள். சுசாமுசா என்று எங்கும் பேச்சு நடந்தது.

மந்திரம் நின்றுவிட்டது. மங்கள மேளம் நின்றுவிட்டது. வெளியே பாடிய ஒலிபெருக்கியும் ஓய்ந்தது.

தரகரும் பெண்ணின் தகப்பனும் சமாதானம் சொன்னார்கள். "பெண்கள் இருவரும் ஒரே மாதிரித்தான். நீங்கள் வந்த அன்று இவளுக்குச் சுகமில்லை அதனால் உங்களை ஏமாற்றக்கூடாது என்று அவளைக் காட்டினோம் வேறு எந்தக் கெட்ட எண்ணமும் இருக்க வில்லை" என்று வாதாடினார்.

கெஞ்சிப் பார்த்தனர்.

இறுதியில் மாப்பிள்ளை விரும்பினால் சரி என்றனர். மாப்பிள்ளையோ "எனக்கு அந்தப் பெண்தான் வேண்டும்" என்று ஒற்றைக் காலில் நின்றார்.

மாற்றம் ஏற்படவில்லை. எல்லோரும் வெளியேறினர். உடனே பொலிஸ் நிலையத்திற்கு கேஸ் சென்றது. அவர்களாலும் இருவரையும் சமாதானப்படுத்த முடியவில்லை. இறுதியில் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாருக்கு இருபத்தி ஐந்து ஆயிரம் நஷ்டஈடு கட்ட வேண்டும் என்று தீர்ப்பாயிற்று.

கூட்டம் கலைந்தது.

இத்துடன் கதை முடியவில்லை. முடிவை வேறு விதமாகப் பார்ப்போம். அதற்கு மாப்பிள்ளையின் விருப்பத்திற்குச் செல்வோம்)

பெண்ணின் தகப்பனார் கெஞ்சியதில் மாப்பிள்ளை சற்று மனம் இளகினார். "ஐம்பது ஆயிரம் கூடுதலாக சீதனம் பெற்றுத் தருகிறேன். முகூர்த்தத்தைத் தவறவிடாதீர்கள்" என்ற தரகரின் ஆசை வார்த்தை வேறு.

மாப்பிள்ளை ஏதோ திட்டத்துடன் மணவறையில் போய் அமர எல்லோரும் 'கப்சிப்' என்று அமர்ந்துவிட்டனர்.

தாலி கட்டப்பட்டு திருமணம் நிறைவேறியது. பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டாரை எண்ணிப் பெருமிதப்பட்டனர். அதுவரை ஒழித்து இருந்த மஞ்சு இப்போது வெளியே வரத் தொடங்கினாள். வீடு மீண்டும் கலகலப்பாகியது.

விழா விமரிசையாக மூன்று நாட்கள் நடந்தேறியது.

தான் பார்த்த மாப்பிள்ளையை அக்கா கட்டிக்கொண்டாலும் அவளுக்கும் அத்தான் தானே அவர். அவருடன் அக்காவுடன் சேர்ந்து பகிடி சேட்டை பண்ணினாள் மஞ்சு.

மங்களாவுக்கு இப்படி ஒரு வாழ்வு அமைந்ததில் பரம திருப்தி.

அடுத்த வருடத்தில் இருந்து இராமன் மஞ்சுவுக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார். அவளுடைய அழகுக்குத் தான் எளிதான மாப்பிள்ளை பார்த்து விடலாமே என்று 'சிம்பளா'க எடுத்துக் கொண்டார். ஆனால் ஏற்கனவே பெண் பார்க்க வந்து இவளைக் கேட்டவர்கள் சிலர் வேறு மணம் முடித்துவிட்டார்கள். சிலரோ அந்தப் பக்கம் பார்க்கவும் மறுத்துவிட்டார்கள்.

சிலர் பேச்சுவார்த்தை அந்தா-இந்தா என்று முற்றுப் பெற இருந்த வேளை தட்டுப்பட்டது. ஏன் என்ன காரணம் என்று விளங்கவில்லை. இராமன் கலங்கத் தொடங்கினார். "என்ன- அவளுக்கு அழகுக்கு அழகு! பணத்திற்குப் பணம் இருக்கிறது. ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்க முடியவில்லை!" என்பதுதான் அந்தக் கவலை.

மாப்பிள்ளையிடமும் சொல்லிப் பார்த்தார். "தம்பி உங்களோட வேலை பார்க்கும் யாரை என்றாலும் கேட்டுப் பார்க்கலாமே!" என்று.

"நானும் முயற்சிக்கிறேன்" என்றான் அவன்.

இதற்கிடையில் மங்களாவுக்கு இரண்டாவது குழந்தையும் பிறந்துவிட்டது. அதற்கு உதவியாக மஞ்சு, மங்களா வீட்டில் வந்து நின்றிருந்தாள். சில நாட்களில் மாமன் மாமி சென்று விட்டனர். மஞ்சு மட்டுமே நின்றிருந்தாள். மங்களாவுக்கு இது சிசேறியனில் பிறந்திருந்ததால் அவள் படுக்கையிலே கிடந்தாள் மஞ்சுவே அத்தானைக் கவனித்துக்கொண்டாள்.

அத்தானின் கைச்சேட்டைகள் அவளுக்குக் கிளுகிளுப்பை மூட்டின. அப்பாவி மங்களா அறியாமல் தனது திட்டத்தைச் செயல்படுத்தினான் அவன்.

'உன்னைக் காட்டியா என்னை ஏமாற்றினார்கள்? உன்னை ஒருவரும் மணக்க முடியாமல் செய்ததும் நான்! உன்னை அடையப் போவதும் நானே! இப்போது என்ன செய்யப் போகிறார் மாமா என்று பார்ப்போம். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்று காட்டுகிறேன். உன்னை அடைய வேண்டும் என்ற ஏமாற்றத்தை, அடைந்தே தீர்த்துக் கொள்கின்றேன்.' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான்.

மங்களா ஒரு மாதமாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தது அவனுக்கு வசதியாகப் போய்விட்டது.

அவர்களின் சிரிப்பையும் பேச்சையும், பகிடியையும் பேபியை விளையாட்டுக் காட்டுவதையும், அவள் பார்த்தும், கேட்டும் கொண்டுதான் இருந்தாள்.

அவள் சந்தேகப் படவில்லை. இந்த மூன்று வருடமாகத்தான் அவர்கள் பழகிவருகிறார்களே. அந்தக் களங்கத்தையும் அவள் காணவில்லையே. அப்படி ஏதும் கண்டிருந்தாலல்லோ அவள் சந்தேகப்பட?

இப்படியான அப்பாவிகள் தங்கள் கணவனின் மீதுள்ள அபார நம்பிக்கையினால் பல சந்தர்ப்பங்களைத் தாங்களே ஏற்படுத்திக்கொடுப்பதை அறிவதில்லை.

அந்தச் சந்தர்ப்பத்தை அவன் பயன்படுத்திக்கொண்டான். அவள் அடங்கிப் போனதும் அக்காவுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை.

அவள் சுகமாகி எழுந்து நடமாடத் தொடங்கியதும் மஞ்சு வீட்டுக்குப் போய்விட்டாள்.

மீண்டும் தாயும் தகப்பனும் மஞ்சுவைக் கூட்டிக்கொண்டு வந்து அழுதபோதுதான் மங்களாவுக்கு அத்தானின் சுயரூபம் தெரிந்தது. இனி மூடி மறைக்க முடியாதே! வயிற்றிலே வாரிசு வளர்கிறதே!

அத்தான் ஏமாற்றவில்லை. தங்களை வஞ்சம் தீர்த்துக்கொண்டார் என்பது மட்டும் அவளுக்கு விளங்கியது.

அழுது என்ன பயன். கண்களைத் துடைத்துக்கொண்டு மங்களா சொன்னாள்:

"மஞ்சு நான் வாழ்ந்து விட்டேன். இனி நீ அத்தானுடன் வாழவேண்டியவள். நீ இங்கேயே இரு. நான் குழந்தைகளுடன் வீட்டுக்குப் போகிறேன். தயவு செய்து எக்காரணம் கொண்டும் அவர் என் கண்ணில் படும் படி வீட்டுப் பக்கம் அழைத்து வந்துவிடாதே! அவர் அவர் இனி உனக்குக் கணவர்"

"அக்கா..." என்றாள் மஞ்சு.

"ஆமாம்! அவர் செய்த துரோகத்தை என்னால் மறக்க முடியாது. அவரைக் கண்டால் என்ன செய்வேனோ எனக்கே தெரியாது. இப்போது உனக்காக விட்டுவிட்டுப் போகிறேன்." என்று தாய் தந்தையுடன் புறப்பட்டாள் மங்களா.

மஞ்சு அழுதுகொண்டு நிற்கிறாள்.

அவளுக்குத் தண்டனையா இது?

அக்காவுக்காக அப்பாவுடன் ஒத்துழைத்தற்குப் பரிசா?

"என்ன செய்வேனோ தெரியாது" என்ற மங்களா நடந்து கொண்டிருக்கிறாள். ●

## குட்டிக்கதை



# புத்திசாலிப் பெண்

எம். சுரேஷ்

"இவர்தான் என்னோட வருங்கால கணவர்" சிந்துஜா அறிமுகப்படுத்த, சித்தியா செயற்கையாய் சிரித்து, கடமைக்கு கைகுலுக்கினாள். அவன் கைகுலுக்கிவிட்டு அடக்கமாக அமர்ந்துகொண்டான்.

"இவர்தான் ரவிவர்மன்" மகிழ்ச்சி பொங்க அவனின் கைகளை பற்றியபடி சிந்துஜா கூறியது வித்தியாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் சாதாரணமாகத்தான் தோன்றினான். "கவர்ச்சி" என்று சொல்வதற்கு அவனிடம் ஒன்றும் இருக்கவில்லை.

"இவதான் என்னோட ஃப்பிரண்ட் வித்தியா."

"ஏண்டி ஒன்னோட 'அவரு' பேசவே மாட்டாரா?" வித்தியா கேட்க ரவிவர்மன் புன்னகைத்தான்.

"அவரு அப்பிடித்தான்டி யாரோடையும் லேசில பழகமாட்டாரு. ஆனா எங்கிட்ட மட்டும்..." ஜாடை காட்டிச் சிரித்தாள் சிந்துஜா.

"சிந்துவும் அப்பிடித்தாங்க லேசில யாரோடையும் பேசவே மாட்டாள். தப்பித்தவறி ஏதாவது பேசினா வெக்கப் பட்டுக்கிட்டே பதில் சொல்லிச் சொல்லியே ஓடிடுவா... ஏதோ அவளை...அதான் சிந்துவை பார்த்த முதல் நாளே எனக்கு ரொம்பப் புடிச்சுப் போயிட்டுது. அத மாதிரியே என்னையும் அவளுக்கு ரொம்பப் புடிச்சிடிச்சு, அப்புறம்...."

ரவிவர்மனின் சிரிப்பு சிந்துஜாவுக்கு "சாக்லட்"டாய் இனித்தது. (முதல் சந்திப்பின்போது காதலுக்கு அடையாளமாக ஒரு ரோஜாப்பூவை வரைந்து தரச் சொன்னதும் ஞாபகத்தில் குளிர்ச்சியூட்டியது)

சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்துவிட்டு ரவிவர்மன் விடைபெற்றுக் கொண்டான். அவன் சென்றதும் வித்தியா கேலியாய் சிரித்தாள். சிந்துவை ஏளனமாகப் பார்த்தாள்.

'ஏண்டி இவன் கிட்ட என்ன இருக்கின்னு காதலிச்ச? நீ ஆரம்பத்தில ஆபீஸ் வாரப்போ ஒன்னச் சுத்திச்சுத்தி வந்த ஜெமீந்தாரோட ஒரே பையன் முரளி எவ்வளவு அழகா, கம்பீரமா இருப்பான். அவன்கிட்ட அழகுக்கும் பஞ்சமில்லை. பணத்துக்கும் பஞ்சமில்லை... அப்பிடிப்பட்டவனை உதறித் தள்ளிவிட்டு போயும் போயும்.."

"போதும் நிறுத்துடி"...எல்லாரையும் மாதிரி வெறும் வெளித் தோற்றத்தை மட்டும் பார்த்து ஏமாந்துபோக எனக்கு இஷ்டமில்லடி... என்னோட ரவிவர்மன் சாதாரணமான ஆளாத் தெரிஞ்சாலும், நல்லாப் படிச்சவன். ஒரு விரிவுரையாளராகத் தொழில் செய்யிறவர்.

"நீ சொன்ன முரளியோட அழகும், பணமும் ஏதாவது ஒரு விபத்தில இல்லாமப் போகலாம். அல்லது இல்லாமலாக்கப் படலாம். அழகும், பணமும் தற்காலிகமானது வித்யா. ஒனக்கோ, எனக்கோ அல்லது அந்த முரளிக்கோ இருக்கிற அழகு இன்னும் 10 வருஷத்துக்கப்புறம் அப்பிடியே இருக்குமா?

"அழகுக்காக கணவனை தேர்ந்தெடுப்பது, வானவில்லுக்காக வானத்தை குத்தகைக்கு எடுத்த கதையாகத்தான் முடியும். என்னோட ரவிவர்மன் நெனைச்சிருந்தா எவ்வளவோ வ்சதியான, அழகான பொண்ணுங்களைக் காதலித்திருக்க முடியும். அவரு என்னையை விரும்பினார். என்னோட மனசை விரும்பினார். நானும் அப்பிடித்தான்.. வித்தியா அன்புதான்டி வாழ்க்கை... சொல்றேன்னு கோபிக்காதே, ஒன்னோட கணவனுக்கு என்ன நடந்தது?"

கேட்டதும் திடுக்கிட்டாள் வித்தியா- அழகுக்காக ஒரு இளைஞனைக் காதலித்து திருமணம் செய்ய இரண்டே மாதத்தில் ஒரு எதிர்பாராத விபத்தொன்றில் சிக்கி, படுகாயமடைந்து, அவனின் முகம் விகாரமடைந்து போனது- தன் கணவனின் முகம் திடீரென நினைவுக்கு வர மனதிற்குள் அழுதாள் வித்தியா... சிந்துஜாவின் படித்த ரவிவர்மன் வித்தியாவுக்கு பொறாமையை ஏற்படுத்தினான்! ■

## பத்தடி பின்னே காந்தியின் நகைச்சுவை ஐந்தடி முன்னே!



பெரும்பாலும் காந்தியடிகளின் பயணங்கள் பாதயாத்திரையாகவே இருப்பது வழக்கம்.

அப்படி ஒரு சமயம் காந்தி அடிகளுடன் நேரு மற்றும் தலைவர்களும் தொண்டர்களும் நடந்து கொண்டிருந்தார்கள்.

வழியில் சுமார் ஐந்தடி அகலமுள்ள கால்வாய் குறுக்கிட்டது. அதில் இறங்கி நடப்பதா அல்லது அதைத் தாண்டிக் கடப்பதா என்று பேச்சு வந்தது.

உடனே நேரு அவர்கள் சொன்னார்கள்,

"இதை சுலபமாகத் தாண்டிக் கடக்கலாம்."

"அப்படியா? எங்கே நீங்கள் தாண்டிக் கடந்து செல்லுங்கள் பார்க்கலாம்,"

என்றார் காந்தி.

நேருவும் தாண்டுவதற்கு தயாராகி சற்று பின்னோக்கிச் சென்று வேகமாக முன்னாலே ஓடிவந்து கால்வாயைத் தாண்டினார்.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த காந்திஜிசொன்னார்,

"நீங்கள் கால்வாயைத் தாண்டியதைப் பாராட்டுகிறேன். ஆனால் ஐந்தடி முன்னால் போவதற்காக பத்தடி பின்னால் போனீர்களே! அதுதான் யோசிக்க வேண்டிய விசயம்."

■

காந்தியடிகள் நூல் நூற்றுக் கொண்டிருந்த போது, ஒருவர் கேள்வி கேட்டார்-

"பாபுஜி! சுதந்திரம் எப்போது கிடைக்கும்?"

"இந்த ராட்டையை எவளவு விரைவாக- வேகமாக சுழற்றுகிறோமோ அதற்கேற்ப விரைவாக சுதந்திரம் கிடைக்கும்," என்று கூறிய காந்தி பேச்சுவாக்கில் நாட்டை சுற்றுவதை நிறுத்தியிருந்தார்.

உடனே கேள்வி கேட்டவர் பதறிப்போய்,

"பாபுஜி ராட்டை சுற்றுவதை சற்று நிறுத்தி விட்டீர்களே..அப்படியானால் சுதந்திரம் கொஞ்சம் தாமதமாகத்தான் கிடைக்குமோ?"

"ஆமாம், ஆமாம். இரண்டு மூன்று கெஜம் தாமதமாகக் கிடைக்கலாம்." என்றார் அவரைக் குறும்பாகப் பார்த்தபடி காந்திஜி. ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தயிர் நானா யாசகம் கேட்கிறார்......

ஹரீரா அனஸ்



"போஸ்ட் ஒஃப்பீஸ்" வழியாக சோனக வாடிக்குள் நுழைந்து அப்படியே கிறீன் வீதியில் நடந்து 'நெல்சன்" தியேட்டரடி வரும் வரைக்கும் மனம் அந்தரப்பட்டுக்கிடந்தது. சிறுவர் பூங்காவடி "சேமக்காலை" மதிலருகில் நடக்கும் போதுதான் என்ன உணர்வுகள்! பாரப்பட்ட உணர்வுகளுடன் மனைவி கதீஜாவின் நினைவு அவரை வாட்டி எடுக்க இயந்திரம் போல பத்தாம் நம்பரால் ஜெமாலியாவிற்கு வந்தபோதுதான் நேரம் இருட்டி விட்டது அவர் நினைவிற்கு வந்தது.

கதீஜாவோடு சேர்த்து அவர் பொறுப்பில் ஐந்து பிள்ளைகளும், மாமியும் மாமாவும் என்ற பாரம் அவர்மீது. அன்றாடம் தயிர் விற்று தனது குடும்பத்தேவைகளைப் பூர்த்தி செய்தும் செய்யாமலும் கடன் வாங்கியும் - என்று காலம் கடந்தது. அவரின் தொழில் நிமித்தம் அவர், தயிர் நானா ஆனார். .

கதீஜாவின் வருத்தம் கூடிவிட்டிருந்தது. இன்றைக்கு பக்கத்து வீட்டு சலாம் பாயரின் பைசிக்கிளை இரவல் வாங்கிக்கொண்டு போகும் வழியில் அவருக்கு சிறிமா புர வழியாகப் போகும் போது நெல்லு ஸ்டோரின் காலியான கூடாரத்தில் வாழும் அகதிகளும், அருகே தமிழர்களின் கல்வீடுகளின் எரிந்த அடையாளங்களும் மனதை நெரித்தது. இது இன்று நேற்று காணும் காட்சியல்ல. இப்போது சராசரியாகத் தினமும் காணும் காட்சிதான். ஆனாலும் இன்று ஏனோ தெரியாது அவரின் மனம் முழுக்க பாரமாய் இந்த எதேச்சாதிகாரத் தன்மையின் மீது முழு வெறுப்பேற்பட்டது.

ஆஸ்பத்திரியில் கூட்டம் அதிகமாகவே இருந்தது. தன் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புவது தொடக்கம் மாமா மாமியின் பணிவிடை, தயிர்களை தரம்பிரிப்பது, பால் காச்சுவது, ரின்னில் போடுவது, உறைய வைப்பது என்று கதீஜா செய்த வேலைகளை தனியே அவரால் செய்ய முடியாது திணறினார் தயிர்நானா. "யா அல்லாஹ்" கதீஜாவின்டை நோயைக் குணப்படுத்திடு நாயனே!' ஆஸ்பத்திரி வாசலில் வைத்து மனதினில் பிரார்த்தித்துக் கொண்டார்.

குடும்பம் என்ற நந்தவனத்திற்கு மனைவி என்ற நீர்தான் அழகு, உயிர், ஆயுள் எல்லாம். அது தடைப்பட்டுவிட்டால் நந்தவனமே கருகி இரு[illegible]டமில்லாமல் அ[illegible]ஸ்த்தைப்பட்டு [illegible] போய்விடு ம[illegible]லவா? இங்கு[illegible]யிர்நானாவின் உறுதுணை ஊ[illegible]ாடிக்கொண்டிருக்கிறது.

•••

தலையிலடித்து... தலையைச் சுவரில் மோதி மோதி கண்ணீர்விட்டு அழுது கொண்டிருந்தார் தயிர்நானா.... "கதீஜா... என்ரை கதீஜா...உம்மா..... நீயில்லாமல் என்னாலை எப்படியம்மா இத்தினை பாரத்தையும் சுமக்கேலும். நான் எப்பிடிம்மா என்ரை குழந்தைகளை வாழவைப்பேன். நான் எப்பிடிம்மா... வாழுவேன்." ஆஸ்பத்திரியே தயிர் நானாவிற்காக இரங்கியது. வானம் தூறலாய் மழையைப் பொழிந்தது. மாலை நேரமாகிவிட்டது. தயிர் நானாவிற்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. தயிர்நானா நாளை மையத்தைப் பாரமெடுப்பது என்று ஆஸ்பத்திரியில் கூறிவிட்டு நடைப்பிணமாய் வீட்டை நோக்கி நடையாய் நடந்தார்.

கடல் மூசி...மூசி கரையில் அடித்துக் கொண்டிருந்தது. காற்றின் வேகத்தால் சில இடங்களில் மழையும் பெய்து வீட்டுக் கூரைகளும் பிடுங்கப்பட்ட நிலையில் 'லவ்லேன்' பரிதாபமாகக் காட்சியளித்தது. இந்த நிலையில் கதீஜாவின் மையத்தை எப்படிக் கொண்டுவருவது. எப்படி அடக்குவது? கையிலை மடியிலை இருந்தது எல்லாம் இந்த மூன்று மாத ஆஸ்பத்திரிச் செலவோடு முடிந்து போய்விட்டதே.

தயிர் நானாவிற்கு ஒரே ஒரு யோசனைதான் பட்டது. மனைவியின் மையத்தைக் கொண்டு வருவதற்கும் அடக்குவதற்கும் பள்ளிவாசல் நிர்வாகம் பொறுப்பேற்றது. ஆனால் மையத்திற்கான கபன் (பிரேதத்திற்கு உடுப்பாட்டும் துணி) துணியை தான் வாங்கி வருவது என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்தார்.

இவ்வளவு காலமும் வாழ்வோடு வாழ்வாக இணைந்து சுக துக்கங்களில் எல்லாம் ஒன்றாய் இணைந்து குடும்பத்தின் குவலயத்தை கொண்டிழுத்த தன் அருமை மனைவிக்கு, துன்பத்தின் போது தாயாகவும், நோய் நொடியின் போது ஒரு தாதியாகவும், பசிக்கும் போது ஒரு பணிவிடையாளியாகவும் இருந்த தன் அன்பு மனைவி கதீஜாவிற்கு ஒரு துண்டு கபன் துணிகூட தன் கையினால் போட முடியாத பாவியாக நின்று கொண்டிருந்தார் தயிர்நானா.

•••

"றிஸ்வி மகன் சத்தியமாய் உங்களைத்தான் நம்பி வந்தன். அந்த அல்லாஹ்வுக்காக இந்த உதவியைச் செய்யுங்க மகன். எண்டை கதீஜா இப்ப ஆஸ்பத்திரியிலை மையமாய் படுத்திருக்கிறாள் தொர, எனக்கு ஒரு உதவி செய்யுங்க தொர, எண்ட பெண்டாட்டி அவள். ஏன் கையாலை தொட்டுத் தாலி கட்டியவள் அவள். அவளிண்டை மையத்தை மூடுறதுக்கு ஒரு கபன் புடவை வாங்குறதுக்கு ஏதாச்சும் உதவி செய்யுங்க மகன்." அவர் வந்து நின்ற தோரணையும் அழுத கண்ணீரும் றிஸ்வியை மனமுருகச் செய்தது தான். ஆனால் அவர் கேட்கும் உதவியைச் செய்ய முடியாத பரிதாப நிலையில் அந்தச் சில்லறைக் கடைக்கார றிஸ்வி நின்றுகொண்டிருந்தான். இப்படியே ஒரு ஏழெட்டுப்படி ஏறி இறங்கி இருப்பார் தயிர் நானா. இன்னும் கபன் துணி வாங்கிக்கொடுக்க யாருமில்லாத நிலையில் அழுது கொண்டிருந்தவருக்கு பக்கத்து கடைக்கார பாரூக் ஒரு ஆலோசனை சொன்னார். அது சரியென அந்நேரம் அவருக்குப் பட்டது.

**இழப்புகள் பலவிதம்; அதனை ஒவ்வொரு மனமும் ஒவ்வொரு விதமாய் எதிர்நோக்குகின்றன. பிச்சைகள், மடிப்பிச்சை, இராப்பிச்சை, யாசகம் என்பன தான் எமக்குப் பழக்கப்பட்டவை. ஆனால் இங்கே காணப் போவது ஒரு வித்தியாசமான யாசகரை. தயிர்நானா கேட்கும் யாசகம் என்ன?**



•••

ஒரு வெள்ளைத் துண்டை விரித்து வைத்து போவோர் வருவோரிடம் தயிர்நானா கேட்கிறார். "உம்மா.. வாப்பாதாயே இந்த ஏழைக்குப் பிச்சை போடுங்கம்மா.. கபன் பிச்சை போடுங்க தாயே..இந்த ஏழை மீது இரக்கப்படுங்கோ தாயே!" நேரம் செல்லச் செல்ல கண்ணீரால் கேட்ட பிச்சை கபன் புடவைக்காய் சேருகிறது. அதனைச் சுருட்டி எடுத்துக்கொண்டு துணிக் கடைக்கு வெள்ளைப் புடவை எடுப்பதற்காக தயிர் நானா ஓடுகிறார்.

அவர் மனது நிறைந்திருக்கிறது. தன் அன்புத் துணைவியின் இறுதி யாத்திரைக்காய் தன் கையால் பிச்சை எடுத்தாயினும் கபன் புடவை போட்டு விடுவோமே எனும் ஆதங்கம் உந்தித் தள்ள...தயிர் நானா போகிறார்....

•••

"அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ்...." கலிமா ஓதியபடி மையவாடி நோக்கி ஒரு சந்தூக்கை ஊர் மக்கள் தூக்கி வருவது தெரிந்தது. சந்தூக்கின் (பாடை) முன்னால் பள்ளித் தலைவர் போய்க் கொண்டிருக்கிறார். கபன் வாங்கப் போன தயிர் நானா வரச் சுணங்கியதால் ஊர் மக்களே மையத்தை குளிப்பாட்டி, கபனிட்டு, தொழுவித்து தூக்கி வருகிறார்கள் அடக்கம் செய்வதற்காக...

அதனைக் கண்டு விவரம் சொன்னவுடன் தயிர் நானா இன்னும் கேவிக் கேவி அழுகிறார்.

மையவாடியில் மையம் (பிரேதம்) வைக்கப்படுகிறது. கபுறினில் (புதைகுழி) மையத்தை இறக்கிவிட்டு மேலே வந்து கதறி அழுத கண்களுடன் தன் துணைவியின் கபுறின் மீது மூன்று பிடி மண்ணை அள்ளித் தூவுகிறார் தயிர்நானா.

அதில் ஆயிரம் அர்த்தங்கள்....

- தன் துணைவியின் அன்பின் நினைவலைகள்....
- தன் துணைவியின் பிரிவின் துயரம்.....
- தன் துணைவிக்கு தன் கையால் பிச்சை எடுத்தாயினும் கபன் அணிவிக்க முடியா விரக்தி.....
- எதிர்கால தனிமைக் கொடுமை இன்னும்-இன்னும்....

---

தேர்தல் காலச் சிறுகதை

# "வந்தான் வரத்தான்"

ஆக்கம் சூர்யா

"வணக்கம். எப்படி. சுகமாய் இருக்கிறீர்களா? வீட்டில் எல்லோரும் நலம்தானா? எப்படி நலமாக இருக்க முடியும்? அரசு ஒரு பக்கம், இயக்கங்கள் மறுபக்கம் செந்தமிழர்கள் சிதறிப்போகிறார்களே ஐயா! வேண்டாம் தேநீர்.எதுவும் சொல்ல வேண்டாம். எற்கனவே தமிழர்கள் யாம் நிறைய இழந்துபோனோம். உங்களை இழக்க வைக்கவோ நான் தேர்தலில் நிற்கிறேன்? இல்லை ஐயா இல்லை. பெற்றுத்தரக் கூடியவற்றை எல்லாம் பெற்றுத்தரவே உயிரை எருவாக, சருகாக, இன்ன பிற பலவாக நினைத்து தேர்தலில் நிற்கிறேன்."

சாம்பசிவமூர்த்தி ஏகாம்பரத்தை ஒருவார்த்தைகூட குறுக்கே பேசவிடாமல் - மிக நீளமாக -முடிந்தவரை தூய தமிழில் பேசி முடித்தார்.

எட்டி உதைத்து 'போடா வெளியே' என்று சொல்லலாம் போல் இருந்தது. வீடு தேடி வந்தவரை விரட்டுவது நாகரிகம் இல்லை. வேண்டாம் பொறு மனமே.

"என்ன ஐயா ஏகாம்பரம் அவர்களே! எதுவும் பேசாமல் இருக்கிறீர்கள்? யாதொரு பிரச்சனை என்றாலும் சொல்லுங்கள். முடியுமானால் செருப்பாக தேய்ந்து உழைத்து தீர்த்துவைக்க முயலுவேன். சிலருக்கு அரசியல் ஒரு பொழுதுபோக்கு. சிலருக்கு அரசியல் ஒரு பகுதிநேரத் தொழில். எனக்கு அரசியலே நரம்பு மண்டலம். அரசியலே இரத்தம். அரசியலே மூச்சு. பேச்சு. சுவாசிக்கும் காற்று. மேலும் நான் இந்த மண்ணிலே பிறந்தவன்."

'அடப்பாவி! தாயின் மடியைக்கூட அரசியலில் குதித்தவுடன் மறந்துவிட்டாரே மனுசன். இவர் மக்களை மறக்க எத்தனை நாளாகும்' என்று நினைத்தார் ஏகாம்பரம்.

ஒரு பேச்சுக்காக, பேசாமல் இருப்பது நாகரிகம் இல்லை என்பதற்காக ஏகாம்பரம் சொன்னார்,

"நேற்றுத்தான் தவசிமுத்து வந்தவர்."

ஏகாம்பரத்தார் சொல்லி முடிக்கும் முன்னர் சாம்பசிவமூர்த்தியின் முகம் தெரு விளக்கு இல்லாத வீதிபோல் இருண்டுவிட்டது. தூய தமிழை தூக்கி தூர எறிந்துவிட்டு துள்ளிவந்த கோபத்தோடு பேசினார்.

"யார் அவன் தவசியோ? எளிய நாய். கெட்டசாதி. வந்தான் வரத்தானாய் வந்தவன் எங்கள் ஊருக்குள் வந்து வோட்டுக் கேட்கிறாங்கள்?"

நாற்காலியில்இருந்து எழுந்துபோய் முற்றத்தில் எட்டி துப்பிவிட்டு வந்து மீண்டும் அமர்ந்தார்.

ஏகாம்பரத்தாருக்குச் சிரிப்பாக இருந்தது. தவசிமுத்து வேறு ஊர்க்காரனாக இருக்கலாம். ஆனால் மனிதனாக இருப்பவர்.

எங்கோ கொழும்பில் இருக்கும் தலைவருக்கு கட்டுப்பட்டு, அவர் என்ன சொன்னாலும் இனிமை என்று தலையாட்டி, வளைந்து குழைந்து நெளிந்து ஒரு சீற் வாங்கி வந்துவிட்டு, வந்தான் வரத்தானுக்கு வாக்களிப்பதோ என்று கேட்கிறார் மனுசன். அப்படியானால் கொழும்பில் இருக்கும் இவரது கட்சித் தலைவர் சகல மண்ணிலும் ஒவ்வொரு தடவை பிறந்தவரோ? பல பிறவி எடுத்தவரோ? அவரது குலம் கோத்திரம் எல்லாம் பார்த்துத்தான் இவர் போய் கைகட்டி வாய்பொத்தி நின்று ஐயா, சொன்னா சரி தான் என்று சொல்லத் தொடக்கினவரோ? சாதியும் - மதமும், மண்ணும் சுயநலத்துக்கு தேவையான போது எத்தனை அக்கறையாய் உயர்த்திப்பிடிக்கிறார்கள்!



இந்த சாம்பசிவமூர்த்தி ஒரு வைத்தியர். இலவசமாக வைத்தியம் பார்ப்பதாக தனது கட்சித்தலைவருக்கு அடிக்கடி சொல்லி தன் பொதுநலத்துக்கு பொழிவு தேடிக்கொள்பவர்.

■

ஏகாம்பரத்தின் இளைய மகளுக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் உடம்பு நெருப்பாய் கொதிக்க, ஒரு வாரமாக தணியாத காய்ச்சல்.

கையிலே இருந்தது ஐம்பது ரூபா மட்டும். இளையமகளை அழைத்துக்கொண்டு சாம்பசிவமூர்த்தியின் வைத்தியசாலைக்கு போனார்.

நடக்கவே கஷ்டப்பட்டாள். கைத்தாங்கலாய் கொண்டுபோய் சேர்த்தார்.

ஏகாம்பரத்தாரை தெரிந்து கொண்டது போலவே வைத்தியர் சாம்பவமூர்த்தி காட்டிக்கொள்ளவில்லை.

"என்ன செய்யிது?"

முகத்தில் மாறாத இறுக்கத்தோடு கேட்டார்.

ஏகாம்பரத்தார் சொல்ல பரிசோதித்து பார்த்துவிட்டு, வைத்தியர் சாம்பவசிவமூர்த்தி, மேசையில் இருந்த தனது மருந்து சீட்டில், மருந்துக் கடைக்காரர் மட்டுமே புத்தி சாலித்தனமாக கண்டுபிடிக்கக்கூடிய ஆங்கில கிறுக்கல் எழுத்தில் ஏதோ எழுதிவிட்டு, ஏகாம்பரத்தாரை நிமிர்ந்து பார்த்தார்.

"இருவரும் வெளியே இருங்கள். ஒரு ஊசி போடவேணும். நர்ஸ் வந்து போடுவா."

போய் இருந்தார்கள். நர்ஸ் வந்து,

"ஊசி போடவேணும். அதற்கு மருந்து வாங்க நூற்றைம்பது ரூபா தேவைப்படும்."

தலைசுற்றியது. இருப்பது 50ரூபா. அவர் திணறுவது புரிந்து,

"ஏன் இல்லையோ ஐயா."

"இல்லைப் பிள்ளை."

நர்சுக்கு அவர் நிலை கவலை கொடுத்திருக்கவேண்டும்.

"எவளவு ஐயா இருக்கிறது."

தயங்கியபடி சொன்னார்.

"ஐ....ஐம்பது ரூபா."

"அது போதாதே ஐயா. சரி போட்டு பிறகு வந்து போடுங்கோ. அல்லது இவ இங்கை இருக்கட்டும் நீங்கள் வீட்டுக்கு போய் காசு எடுத்துக்கொண்டு வாங்கோ ஐயா."

வீட்டிலும் பணம் இல்லை. வைத்தியரிடம் சொல்லிப் பார்த்தால் என்ன?

"பிள்ளை நான் ஒருக்கா டொக்டரைப் பார்க்கலாமோ?"

நர்சுக்கு அவரை நினைக்க பரிதாபமாக இருந்தது. எனவே உண்மையைச் சொன்னாள். தாழ்ந்த குரலில்,

"காசு இல்லாட்டி ஊசி போடவேண்டாம் எண்டு என்னைக் கூப்பிட்டு சொன்னவர். நீங்கள் கதைச்சும் பிரயோசனம் இல்லை."

ஏகாம்பரத்தாருக்கு முகத்தில் யாரோ ஓங்கி அறைந்தது போல் இருந்தது. தன்மானம் உள்ளே எழுந்து சீறியது.

"சரி பிள்ளை நான் போய் காசு எடுத்துக் கொண்டு வாறன். இவள் இருக்கட்டும். சட்டையை மாற்றிப் போடேக்கை அந்தப் பொக்கற்றிலை கிடந்த காசை எடுக்க மறந்திட்டன்."

நேராக தவசிமுத்துவிடம் போனார். அப்போதுதான் வெளியே செல்ல புறப்பட்டுக் கொண்டிருந்த தவசி ஏகாம்பரத்தாரைக் கண்டதும் புன்னகைத்தார். ஏகாம்பரத்தாருக்கு அந்தப் புன்னகை ஆறுதலாக இருந்தது.

"வாருங்கோ."

அமர நாற்காலி காட்டி தவசி தானும் அவர் எதிரே அமர்ந்து கொண்டார்.

"என்ன விசயம் இவளவு தூரம்?"

ஏகாம்பரத்தார் தாடையைச் சொறிந்தபடி சங்கடமாய் நாற்காலியில் அசைய,

"என்னெண்டாலும் சொல்லுங்கோ. யோசிக்க வேண்டாம்."

என்றார் தவசி. கொஞ்சம் தைரியம் வர ஏகாம்பரத்தார் தன் தேவை சொன்னார். ஒரு வாரத்தில் திருப்பித்தந்துவிடுவதாக அழுத்திச் சொன்னார்.

"இதுக்காகத்தானோ இத்தனை யோசனை? சரி ஏன் ஒரு வாரமாய் வைத்தியம் செய்யாமல் இருந்தனீங்கள்? வியாதி கண்டா விட்டு வைக்கக்கூடாது."

பொக்கற்றுக்குள் கைவிட்டு பார்த்து பின்னர் எழுந்து உள்ளே போனார். திரும்பி வந்தபோது இரண்டு நூறுரூபாய் தாள்கள் கையில் இருந்தன. கொடுத்தார். ஏகாம்பரத்தார் நெகிழ்ந்துபோய்,

"மெத்தப் பெரிய உதவி."

தவசி ஒரு புன்னகையோடு சொன்னார்,

"இது என்ன பெரிய விசயம். மனுசனுக்கு மனுசன் உதவுறது சாதாரண விசயம். பணம் வரும் போகும். போய் உடன் ஆகவேண்டியதைப் பாருங்கோ."

இப்போதும் தவசியின் பண்பை நினைக்க ஏகாம்பரத்தாருக்கு நன்றி உணர்வில் நெஞ்சு கனத்தது.

■

சாம்பசிவமூர்த்தி செருமிக்கொண்டே எழுந்தார்.

"பலமான யோசனையில் இருக்கிற நேரத்திலை வந்திட்டம் போல. சரி இந்தாங்கோ எங்கள் பிரசுரங்கள். நல்லா வாசித்துப்பார்த்து வாக்குச் சீட்டில் வடிவாய் பார்த்து புள்ளடி போடுங்கோ."

ஏகாம்பரத்தார் பதில் எதுவும் சொல்லாமல் பிரசுரங்களை வாங்கிக் கொண்டார்.

மீண்டும் தூய தமிழுக்கு தாவினார் சாம்பசிவமூர்த்தி.

"நாங்கள் போய் வருகிறோம். வந்தான் வரத்தான்களுக்கு வரும் தேர்தலில் சாட்டையடி கொடுத்து, கஷ்டத்திலும், நஷ்டத்திலும் இந்த மண்ணில் வாழ்ந்த -வாழப் போகிற என்னை ஆதரிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு செல்கிறேன்."

அவர் போவதை இகழ்ச்சியான புன்னகையோடு, மனசு முழுக்க நிரம்பிய வெறுப்போடு பார்த்துக்கொண்டிருந்த ஏகாம்பரத்தார் எழுந்து சென்று முற்றத்தில் காறித்துப்பிவிட்டு வந்து, கதவை அறைந்து சாத்திக்கொண்டார். ■

# இலக்கிய நயம்

தருவது- ரசிகன்

## பெருகிய நேசம் பொய் சொல்லும்

"இப்போதுதான் புரிகிறது. எப்போதோ இது புரிந்திருந்தால்....."

என்று சொல்லி நிறுத்தினான் அறிவு நம்பி.

"ஏன் நிறுத்திவிட்டீர்கள்? புரிந்திருந்தால்...?"

என்று வில் புருவம் உயர்த்தி வினாக்குறியோடு கேட்டாள் அஞ்சனா.

கடற்கரை மணல்வெளியில் ஒடம் ஒன்று ஒதுங்கிக்கொள்ள இடம் கொடுத்திருந்தது. ஓடத்தின் மறைவினிலே தனித்திருந்த காதலர் இருவரும் பனிப்போர் நடத்திக் கொண்டிருந்தனர்.

அஞ்சனாவின் வினாவுக்கு நேரடியாய் விடை சொல்லாமல், வினா எழுப்பினான் நம்பி,

"உண்மையாகச் சொல். என் மனம் துன்பப்படுவதையிட்டு உனக்கு வேதனையில்லையல்லவா?"

"யார் வேண்டுமானாலும் துன்பப் படலாம். அது அவர்கள் இஷ்டம். அதற்காக நான் ஏன் வேதனைப்பட வேண்டும்?

"யார் வேண்டுமானாலும் என்று பொதுப்படையாகச் சொன்னால் எப்படி? நான் வேதனைப்படுவது உனக்கு விருப்பாக இருக்கிறதா என்பதே என் கேள்வி."

உள்ளே மனம் துடிக்க பட படப்பாய் கேட்டான்.

தன்னவளின் அன்பிலே நனைய வேண்டும். அவள் இதழ்களில் இருந்து நேசத்துக்குரிய வார்த்தைகள் செவி குளிரக் கேட்டு உள்ளம் ஆனந்தக் கூத்தாட வேண்டும் என்று மனது துடித்துக் கொண்டே இருக்கும்.

தன்மீது கொண்ட அளவற்ற நேசம் புரிந்தபோதும், அவள் தன் தேனிதழ்களால் அதனை அடிக்கடி சொல்லவேண்டும் என்று மனது கிடந்து தவிக்கும்.

அறிவு நம்பியின் மனதும் தவித்துக் கொண்டிருந்தது.

அது புரிந்து அஞ்சனா என்னும் கட்டழகுப் பெட்டகம், பேரழகுச் சித்திரம் தன் உள்ளத்திலே உள்ள தன்னவன் மீதான நிகரில்லா நேசம் மறைத்து, தன் பலாச்சுளை இதழ்கள் விரித்து பொய் பேசி நாடகமாடிக் கொண்டிருந்தது.

"ஏன் மௌனமாய் இருக்கிறாய்? என் வேதனை உனக்கு விருப்புக்குரிய விசயம். நான் துடித்துப் போவதும், என் மனம் துவண்டு போவதும் உனக்குச் சம்மதம்தான். அப்படித்தானே அஞ்சனா?"

மீண்டும் அதே கேள்வி. அஞ்சனா ஓரவிழியால் அவன் கோபம் இரசித்தாள். விரல்களால் மணலில் கோலம் போட்டபடி, மேலும் ஜாலம் காட்டினாள்.

"நான் உங்களை துன்பப்படச் சொல்லவில்லை. நீங்கள் துன்பப்பட்டால் அதற்கு நான் என்ன செய்வதாம்? நன்றாகப் பட்டுக் கொள்ளுங்கள்."

"அதனால் உனக்கொரு கவலையும் இல்லை?"

"இல்லை."

அறிவு நம்பிக்கு வானம் இடிந்துவந்து தலையில் வீழ்ந்தது போல் இருந்தது.

என்ன நடந்தது இவளுக்கு? என் மீது ஏன் வெறுப்பு இவளுக்கு? மனதுக்கு மனுப்போட்டு விசாரித்தான். தூங்கிக் கொண்டிருக்கும் அரச நிறுவனங்கள் சில போல அவள் போட்ட மனுவை தூக்கி ஓரத்தில் வைத்துவிட்டு மௌனமாக இருந்தது மனது. விடை கிடைக்காமல் அறிவு நம்பி தவித்தான்.



இனியும் அவனை தவிக்கவிட்டால் சோக வெள்ளத்தில் மூழ்கிப்போவான் என்று புரிந்து அஞ்சனா வாய்விட்டு நகைத்தாள்.

அவன் சோகம் ஆற்றும் மருந்தாக, துடித்துப் போன மனதுக்கு இனிய விருந்தாக அவன் கன்னத்தில் தன் இதழ்கள் பொருந்தினாள்.

அறிவு நம்பிக்குள் சோகம் சுத்தமாய் அழிந்து போனது. சுற்றமும் மறந்து போனது. தேன் சுவை இதழ்கள் தந்த முத்தம் தேகமெங்கும் சிலிர்ப்பை விதைத்தது. இன்னும் வேண்டும். இதழ்கள் தருகின்ற இன்பம் வேண்டும் என்று ஆசை வதைத்தது. காமன் கணைகள் சித்தம் முழுவதையும் சுற்றிவளைத்து மீள முடியாமல் நடத்திய தாக்குதலில் அறிவு நம்பி தோற்றுப் போனான்.

அஞ்சனா கொஞ்சிய இதழ்களை விலக்கிக்கொண்டு நகைத்தாள்.

"இன்னும் கோபமா?"

என்று உள்ளக் கோட்டையை உடனே கைப்பற்றிவிடுகின்ற வலிமையுள்ள இனிய புன்னகை மாறாமல் கேட்டாள்.

"கோபம் இல்லை. ஆனால்."

"என்ன ஆனால்?"

"தாபம் தாகம். சித்தம் முழுக்க ஒரு வேகம்."

என்றான் பேரழகுச் சிலைமீது விழிகள் பாயவிட்டபடி,

"இதற்காகத்தான் நான் அப்படிச் செய்தேன்."

"எப்படிச் செய்தாய்?"

"உங்களுக்கு சந்தோசம் வந்துவிட்டால் எனக்குத்தான் தொல்லை. அதனால் நான் போகும்வரை நீங்கள் கோபத்தில் இருப்பதுதான் நல்லது."

"தவறாகச் சொல்கிறாய் அஞ்சனா. என் உயிர்மீது எனக்கு எப்படி கோபம் வரும்."

"வேறு என்ன வருமாம்?"

இப்போது அறிவு நம்பியின் உதடுகள் மூலம் தன்மீதுள்ள நேசம் வெளிப்பட வேண்டும் என்று அஞ்சனா தவித்தாள். காதலின் தவிப்புக்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுதானே.. அதனால் தான் அப்படி ஒரு வினா தொடுத்தாள்.

அவள் வினாவுக்கு உடன் பதில் சொல்லாமல், மணலில் அசைந்து நெருக்கமாய் அமர்ந்து, அஞ்சனாவின் கழுத்தில் முகம் புதைத்து உதடுகளை மேலும் கீழும் அசைத்தபடி பதில் சொன்னான்.

"உயிர் என்னை வெறுக்கிறதே என்று மனம் தீயில் கருகும் பஞ்சாகிவிடும். உன் இனிய நேசம் என்னும் மலரணையில் கிடந்து, உன் நினைவுகளை சுவாசித்தபடி, சுவையாக இரசித்தபடி இருக்கும் மனதை பஞ்சாக மாற்றி பாழும் தீயில் வீசலாமோ அஞ்சனா?"

அவன் உதடுகள் படுத்தும் பாட்டால் உடல் எங்கும் சிலிர்த்து, உள்ளே உயிர்த்த இனிய உணர்வுகளோடு, அஞ்சனாவின் இதழ்களில் பதில் வந்தது.

"உங்கள்மேல் அன்பில்லை என்று நான் சொன்னால் நம்பிவிடுவீர்களாக்கும்."

"நம்பமாட்டேன்."

"அப்படியானால் வேதனை எப்படி வரும்?"

"அன்பில்லை என்று பொய்யாகக்கூட உன் இதழ்கள் உச்சரிக்கக்கூடாது. சுவை தரும் இந்த இதழ்கள் எப்போதும் சொல்லக்கூடாத வார்த்தை அது."

சொல்லியபடியே அவள் இதழ்கள் மீது சுட்டுவிரல் நீட்டி மெல்ல வருட, அஞ்சனா இதழ்விரித்து அவன் விரலை பற்களால் கடித்தாள். வலிப்பது போல் பொய்யாக நடித்து விரல் விடுவித்து,

"அன்பு மறைத்து நேசம் ஒளித்து பொய் சொன்ன காரணம் என்ன?"

என்று கேட்டான்.

"காதலிக்கத் தெரிகிறது. காதலின் விதிகள், அவற்றின் பொருள்கள் மட்டும் தெரியவில்லையாக்கும்."

என்றாள்.

"தெரியவில்லை. நீதான் சொல்லேன்."

என்றான். அவள் இடயைக் கரத்தால் வளைத்தபடி,

"அதிக அன்பு உள்ளவர்கள்தான் வெளியே அன்பில்லாதது போலக் காட்டிக் கொள்வார்களாம்."

"அய்யய்யோ....யார் தாயே இதை சொன்னது?"

"விபரமான ஆள்தான்."

"யார்?"

"திருவள்ளுவர்"

"ஓ.கோ...என்ன சொல்லியிருக்கிறார்?"

"செறாஅச் சிறுசொல்லும் செற்றார்
-போல்நோக்கும்
உறா அர் போன்று உற்றார் குறிப்பு."

குறள்- 1097, அதிகாரம்- 110



# சிந்தியா பதில்கள்

தற்போதைய அரசியல் நீரோட்டத்தில் தமிழ் தலைவர்களின் நிலை என்ன?

பி. சுபத்ரா-கந்தப்பளை.

எதிர்நீச்சல் போடவேண்டிய வேளைகளிலும் போடாமல் இருந்து விடுகிறார்கள்.

□

டியர் சிந்தியா! மனித வாழ்வில் மோசமான செயல் எது?

டி.எஸ். பிறேமேந்திரன்
அப்புகாமம் எஸ்டேட்.

நம்பிக்கைத் துரோகம்.

□

வன்முறையால் எதையும் சாதிக்க முடியுமா?

எம். மகேந்திரன்
இந்தகல எஸ்டேட் மேற்பிரிவு.

முடியுமே. அழிவுகளை!

□

டியர் சிந்தியா! வறுமையின் நிறம் என்ன?

ஆர். சசிகலா-திருகோணமலை.

சிவப்பு என்கிறார்கள். ஆபிரிக்க நாடுகளின் பாரதூரமான பஞ்ச நிலையைப் பார்க்கும்போது கறுப்பு என்று சொன்னால் என்னவென்று யோசிக்கவேண்டியிருக்கிறது.

□

வடக்கிலும், கிழக்கிலும் புலிகளின் நிலை எப்படி உள்ளது?

றஹீஸா எஸ். ஹமீட்
குருநாகல்.

பலவீனம் என்று சொல்லமுடியாது.

□

முயற்சி, அதிஷ்டம், ஆர்வம். இவற்றிலே முன்னேறத் தேவையானது எது?

எம்.ஏ. ரிஸானா-கந்தளாய்-01.

அதிஷ்டத்தை நம்புவதைவிட முயற்சி,யும். முயற்சியில் ஆர்வமும் வெற்றிப்படிகளில் உயரவைக்கும்.

□

வாழ்க்கையே சோகமாக இருந்தால் அது என்ன வாழ்க்கை?

எம்.டபிள்யூ.எம். மன்சூர்
மாத்தளை.

நரக வாழ்க்கை. அதை மாற்றுவதும் நம்கையில்.

□

மலைக்கள்ளன், தெற்கத்திக் கள்ளன், கழுகுமலைக் கள்ளன். இதில் உங்களுக்குப் பிடித்த கள்ளன் யார்?

டி. என்டன்-பாக் எஸ்டேட்.

எனக்கு மட்டுமல்ல. பலருக்கும் பிடித்தவன் மலைக்கள்ளன். பல கோடி மக்களின் மனம் கவர்ந்த கள்வனல்லவா அவன்?

□

அரசியலில் குதிந்திட உத்தேசம் உண்டா?

எம். நிஸா முஸம்மில்-தியத்தலாவை.

சிறந்த கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல் போகுமானால் குதித்துவிட வேண்டியது தான். நியாயமான கேள்விகளைக் காதில் வாங்காமல் தாம் சொல்வதை மட்டுமே மக்கள் கேட்க வேண்டும் என்பதுதானே தற்கால அரசியல்.

□

நிற்கட்டுமா? போகட்டுமா நீலக் கருங்குயிலே என்று பாடினால் என்ன பதில் சொல்வது?

பா. ஜெயசுதா-தெபுவனை.

வாங்கும் வசதியிருந்தால், நிற்கலாம் என்று கூறுங்களேன்.

□

நவநாகரிகம் என்று செந்தமிழோடு ஆங்கிலத்தை கலப்படம் செய்வோர் பற்றி?

தி. லிங்கேஸ்வரன்-வாகரை.

டமிலர்கள்.

□

காதல் விவகாரங்களில் திடீரென்று உணர்ச்சி வசப்படுவர்கள் ஆண்களா? பெண்களா?

எம்.எச். ஹாறூன்
தி/ தோப்பூர்.

அதெல்லாம் சூழலைப் பொறுத்து அமைவது. அதிலே ஆண் என்ன? பெண் என்ன?

□

டியர் சிந்தி! நேர்மையை இப்போது எங்கே காணலாம்?

சீ. ரவீந்திரன்-குறுமண்வெளி-11.

இப்படியான கேள்விகள் நிறைய வருவதே தற்போது சுலபமாக கண்டு பிடிக்கக்கூடிய நிலையில் இல்லை என்பதைத் தானே உணர்த்துகின்றன.

□

சமாதானப் புறா சிறகடித்துப் பறக்குமா?

எம்.எச்.எம். நிஸ்வான்
திருகோணமலை.

சிறகு முளைக்க விட்டால்தானே.

□

## பாம்பைச் சூடிய பாவை!



படைகண்டால் நடுங்கும் பாம்பை பயமேதும் இன்றி தலையில் சூடிக்கொண்டாள் இந்தப் பாவை. படமெடுத்தாடும் பாம்பு சிரசில் இருக்கும் போதும் பயமின்றிச் சிரிக்கிறாள் பாருங்கள். யப்பா! பாம்பின் நீளம் 11 அடி. 6அங்குலம். பாம்பின் பெயர்-லூசி. பாவையின் பெயர்-ஸ்கோயென் றொக்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-38

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | 3 |
| | 4 | | | | ■ | |
| | ■ | 5 | 6 | | ■ | |
| ■ | 7 | | | | ■ | |
| 8 | | | | | | ■ |
| | ■ | | | ■ | 9 | |
| 10 | | | ■ | 11 | | ■ |

**இடமிருந்து வலம்**

1. ஒரு மணிக்குள் உள்ளடக்கம்.
2. நெருப்பில்லாமல் வராது என்பார்கள்.
4. நம்நாட்டில் மன்னாரில் இது அதிகம் உண்டு.
5. சமீபத்தில் சாதனை படைத்தவர்.
7. கோவலனின் மனைவி.
8. கறிக்கு உதவும்.
9. அதிகமாகி விட்டால் சறுக்கி விடும்.
10. இது மனதில் பட்டுவிட்டால் வேதனைதான்.
11. துப்பாக்கியின் தொழில்.

**மேலிருந்து கீழ்**

1. வெய்யில் காலத்தில் மிகவும் அவசியம்.
3. காந்தியும் வைத்திருந்தார்.
5. பேரறிஞர் அண்ணா சொன்ன மூன்றில் இதுவும் ஒன்று.
6. இது வழக்கிலும் முடிவதுண்டு.
8. காதலர்கள் இங்கும் கூடுவார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 26.02.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-38
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-36க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நி | ல | க் | க | ரி | ■ | 2 க |
| தி | 3 வி | ■ | 4 மு | க | 5 மூ | டி |
| யு | வா | ■ | 6 சி | ■ | ங் | வா |
| 7 த | க | 8 வ | ல் | ■ | கி | ள |
| வி | ர | ம் | லு | ■ | ல் | ம் |
| ■ | த் | பு | ■ | 9 ந | ■ | ■ |
| 10 தூ | து | ■ | 11 வா | ரி | யா | ர் |

குறுக்கெழுத்துப் போட்டி இல.36இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. செல்வி. ஆர். தயானி
ஹட்டன்.
2. எஸ். ராகவன்
கொழும்பு-7.
3. ஆர். நித்தியா
நுவரெலியா.
4. கே. இந்திரன்
குருநாகல்.
5. எல். அமீர் ஹுஸைன்
கல்முனை-3.
6. எம். யாகூப்
அநுராதபுரம்.
7. எம். ரவிக்குமார்
வவுனியா.
8. எம். நாஸர்
மாத்தளை.
9. வி. தியாகராஜன்
மட்டக்களப்பு.
10. திருமதி. ஏ. ஜெயலட்சுமி
கண்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**இவ்வாரம் (20.02.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 17

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்



காலத்தின் குரல்: யமுனா நதியாகி-கோகுலம், ஆயர்பாடி, பிருந்தாவனம், நந்தகோன் கிராமம் ஆகிய சுற்றுச்சூழலாகவும் மாறினேன். தெய்வீக நிலையினையும் எட்டி விட்டேன். அந்த வெண்ணைத் திருடன் வெண்ணையினை உண்டபோது அந்த வெண்ணையாகவும் மாறினேன். பந்தாக மாறி காளிங்கன் உறைந்திருந்த நதியிலும்குதித்தேன். யசோதாவிடம் அவள் மகன் செய்யும் குறும்புகளையிட்டும் கோள் முட்டினேன். கோவர்த்தன கிரியாகவும் மாறி அந்தக் கிருஷ்ணபரமாத்மாவால் தூக்கப்பட்டேன். இன்று அந்த வாசுதேவகுமாரன் கிருஷ்ணனுடன் மதுராபுரி நோக்கி நானும் புறப்பட ஆயத்தமாகிவிட்டேன். இங்குதான் அந்தக் கிருஷ்ணனின் இளமைக்கால விளையாட்டுகள் பூரணத்துவமடைகின்றன.

-காட்சி துவக்கம்-

-பின்நோக்கு-

- யசோதா கிருஷ்ணனின் நெற்றியில் முத்தமிடுகிறாள். நெற்றியில் திலகமிடுகிறாள்.
- கிருஷ்ணன் பசுக்களுக்குத் திலமிடுகிறான்.
- யசோதாவும் நந்தகோபனும் உணவூட்டுகின்றனர்.
- ரோகினி மாலை அணிவிக்கிறாள்.
- யசோதா சோகமே உருவாக நிற்கிறாள்.
- நந்தகோன் கிராமவாசிகளிடம் கிருஷ்ணன் விடைபெறுகிறான்.

-பின்நோக்கு முடிவு-

-காட்சி மாற்றம்-

<u>பின்னணிப் பாடல்</u>

கிருஷ்ணன் இரதத்தில் ஏறுகிறான். அக்குதர் தேரில் பயணத்துக்குத் தயாராகி இருக்கிறார். கிருஷ்ணனும் பலராமனும் இரதத்தில் ஏறியதும் இரதம் புறப்படுகிறது. கிராமத்தவர்கள் தேரின் பின் சிறிது தூரம் நடந்து வருகின்றனர்.

அக்கு: நந்தகோன் கிராமத்தை விட்டுச் செல்வது உனக்கு வருத்தமாகத் தெரியவில்லையா கிருஷ்ணா?

கிருஷ்: ஏனில்லாமல்...? அன்பானவர்களை விட்டுப் பிரிவது துன்பமாகத்தானிருக்கிறது.

அக்கு: ஏன் மதுராவிலும் உனக்கு மிக நெருக்கமானவர்கள் இருக்கிறார்களே!

கிருஷ்: இருக்கலாம்! ஆனால் நந்தகோன் கிராமத்து மரங்கள் கூட என் அன்புக்குப் பாத்திரமானவையே. மக்கள் எனக்கு சொந்தக் காரர்கள். வெண்ணை முழுவதும் எனதுடமை. மதுராவில் என்னை யார் கவனிப்பார்கள்...?

அக்கு: ஏன் மகாராஜா உன் மாமனாரல்லவா?

கிருஷ்: உண்மையாகவா..? அப்போ அவர் யசோதா அம்மாவின் சகோதரரா?

அக்கு: இல்லை! உன் அன்னை தேவகியின் அண்ணன்!

கிருஷ்: எனது பெற்றார் எவராக இருப்பினும் நான் யசோதையின் மைந்தனாகவே இருப்பேன். அதுசரி, எனது பெற்றோர் எங்கேயுள்ளனர்? என்னை நந்த அப்பாவிடமும் யசோதா அம்மாவிடமும் ஏன் அனுப்பினார்கள்?

அக்கு: இக்கேள்விகளுக்கு விடைதர என்னால் முடியாது கிருஷ்ணா... மகாராஜாவே இதற்கெல்லாம் விடை அளிப்பார்.

கிருஷ்: சரி அவரிடமே விடைகளை அறிந்துகொள்ளுகிறேன்.

*(ராதை வருகிறாள்)*

அக்கு: யார் இவள் மகனே!

கிருஷ்: ராதா...!

அக்கு: ராதாவா..? யார் இந்த ராதா?

கிருஷ்: எல்லோரும் என்னை நாடுகின்றனர். ஆனால் நான் ராதாவால் ஈர்க்கப்படுகிறேன்.

இரதத்திலிருந்து இறங்கிய கிருஷ்ணன் ராதையிடம் செல்கிறான்.

கிருஷ்: ராதா..! என்னுடன் பேசமாட்டாயா?

ராதை கிருஷ்ணனுக்கு திலகமிட்டு தலையை மட்டும் ஆட்டுகிறாள்.

கிருஷ்: ஏன்.....?

ராதா: புரியாததொன்றைப் புரியாதவனுக்கு புரியவைக்கலாம். உனக்குப் புரியும்... எனக்கும் தெரியும். அதனால் நான் எதைச் சொல்லுவேன்.. நீ எதைச் சொல்லப்போகிறாய்?

கிருஷ்: இதோ இந்த புல்லாங்குழலை வைத்துக்கொள்.

ராதா: இல்லை. அது என் நினைவாக உன்னிடமே இருக்கட்டும். எனக்காக அது உன்னிடம் பேசிக் கொண்டிருக்கட்டும்.

கிருஷ்: ஆமாம். அது உனக்காக பேசுவதை நான் மட்டுமே உணர்வேன். இந்த உலகைப் பொறுத்தவரை அது இனி என்றுமே அமைதியாக இருக்கும்.

ராதா: நீ புறப்படவேண்டாமா..?

கிருஷ்: எங்கே....? நீ எங்கிருக்கிறாயோ... நானும் அங்கே இருப்பேன். உன்னுடன் நான் என்றும் இருப்பேன்.

ராதா: உலகின் நலன்காக்க..மனிதத்தின் பெருமையைக் காக்க நீ போய்த் தானாக வேண்டும். எமது பிரிவு ஒரு புதிப் பரிமாணத்தை உருவாக்கட்டும்.

கண்ணன் மீண்டும் இரதத்தில் ஏறுகிறான்.

அக்கு: இரதம் புறப்படட்டும்!

ராதா இரதம் வெகுதூரம் செல்வதைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். யசோதா ராதாவை அணைக்கிறாள். இருவருடைய கண்களும் குளமாகின்றன.

-காட்சி மாற்றம்-

மதுராபுரி- அக்குதரின் இல்லம்.

கிரு,பலரா: வணக்கம் மாமா!

அக்கு: கடவுள் காப்பாற்றுவாராக.

கிருஷ்: எங்காவது போகின்றீர்களா மாமா?

அக்கு: ஆமாம்! மகாராஜாவிடம் போகிறேன். நீங்கள் வந்துவிட்டதை அவரிடம் கூறவேண்டுமல்லவா?

கிருஷ்: கட்டாயம் சொல்லுங்கள். அதே நேரத்தில் அண்ணாவுடன் மதுரா நகரைச் சுற்றிப்பார்த்துவர அனுமதி தருவீர்களா மாமா?

அக்கு: அதற்கென்ன...! சென்று வாருங்கள். ஆனால் இது நந்தகோன் கிராமமல்ல என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் விளையாட்டுகளை இங்குள்ளவர்கள் ஏற்க மாட்டார்கள். அண்ணன் பலராமனின் கையைப் பற்றிக்கொண்டே எங்கும் போக வேண்டும்.

கிருஷ்: அண்ணனை விட்டு நான் வேறெங்கும் அசைவதில்லையே!

-காட்சி மாற்றம்-

மதுரா நகரின் வீதிகள். கிருஷ்ணனும் பலராமனும் நகரைச் சுற்றிப் பார்த்து வருகின்றனர். இவர்களைப் பார்க்க மக்கள் கூட்டம் முட்டி மோதுகிறது. கிருஷ்ணனின் நண்பர்களும் அவர்களைப் பின் தொடர்கின்றனர்.

சிறிதாமன்: ஷியாம் சகா! கிருஷ்ணனை ஒரு தடவையாவது காண மதுராபுரி மக்கள் தவிப்பதைப் பார்த்தாயா? இந்தப் பூக்கள் எத்தனை அழகாக உள்ளன...?

ஒருவர்: அடடே..கொஞ்சம் விலகப்பா..! அந்தக் கிருஷ்ணனை ஒரு முறை பார்த்து விடுகிறேன்.

அடுத்தவர்: அண்ணே கூட்டம் அதிகமாக இருக்கிறது அண்ணே!

ஒருவர்: இவர்கள் இருவரும் இராமர் இலட்சுமணரைப் போல் இருக்கின்றனர் என்று என் மனைவி சொன்னாள்.

பெண்: இவர்களைக் காணும் கண்கள் பேசும் வன்மை அற்றவை. நாக்குகளுக்கோ பார்க்கும் சக்தி இல்லையே!

•••

பலரா: கண்ணா! என் கையை விட்டுவிடு.

கிருஷ்: முடியாது. அதோ அங்கே பார்த்தாயா? கூனிக் குறுகி அந்தப் பெண் சந்தனக் குழம்புடன் வருகிறாள்! அழகிய பெண்ணே! இந்தச் சந்தனத்தில் எங்களுக்கும் கொஞ்சம் தருவாயா?

கூனிப்பெண்: இதனை மகாராஜாவுக்கே எடுத்துச் செல்கிறேன். உங்களுக்கும் நிச்சயம் தருகிறேன். அப்படியே நில்லுங்கள்... நெற்றியில் தடவி விடுகிறேன்.

கிருஷ்: நன்றி... ஆமாம்... நீ ஏன் கூனிக்கொண்டு நடக்க வேண்டும்? எங்கே நிமிர்ந்து நில் பார்க்கலாம். நாங்கள் உதவுகிறோம். எங்கே நிமிர்ந்து நட...!

கூனல் நீங்கிய அப்பெண் ஆனந்தக் கூத்தாடுகிறாள். இதனைக் கண்ட மக்கள் இருவரையும் பாராட்டு கின்றனர்.

மக்கள்: வாழ்க கிருஷ்ணன்- வாழ்க...வாழ்க!

கூனி.பெண்: ஷியாமள வண்ணா.... நீ எங்கே போய்விட்டாய்...?

-காட்சி மாற்றம்-

ஆற்றங்கரை-சலவைத் தொழிலாளிகள் துணிகளைத் துவைக்கின்றனர்.

கிருஷ்: ஐயா! ஏன் அவ்வாறு பார்க்கிறீர்கள்,

சல.தொழி: இங்கிருந்து ஓடி மறையுங்கள். இல்லையேல் உங்களையும் வெளுத்து விடுவேன்.

கிருஷ்: இதற்காகத்தான் உங்களைவிட்டுப் பிரியலாகாதென அக்குதர் மாமா சொன்னார். மதிப்புக்குரிய ஐயா! இந்த அழகிய துணிகள் யாருடையவை?

சல.தொழி: எல்லாம் அரசர் மாளிகையைச் சேர்ந்தவை.

கிருஷ்: எங்கள் இருவருக்கும் இந்த உடைகளில் இரண்டைத் தருவீர்களா?

சல.தொழி: அரசருடைய ஆடைகளை உடுக்க ஆசை வைக்கும் நீங்கள் யாரென நினைத்துக்கொண்டீர்கள்?

மற்றவர்: அரசருடைய ஆடைகள் மீது ஆசைவைத்த உங்களுக்கு ஏற்ற பாடம் கற்றுத் தருகிறேன். இங்கே வாருங்கள் பார்க்கலாம்.

கிருஷ்: சரி வருகிறோம்.

சல.தொழி: இவை உங்களுக்கு வேண்டுமா?

பலரா: கண்ணா துணிகளை எடு....!

சல.தொழி: இதோ எடுத்துக் கொள்ளுங்கள்...!

சல.தொழிலாளி கிருஷ்ணனைத் தாக்க முற்படுகிறார். ஆனால் முடியவில்லை. கிருஷ்ணன் அவரை கீழே தள்ளி விடுகிறான். அவர் விழுந்த இடத்திலிருந்து நீர் சுரந்து பாய்கிறது. மக்கள் இதனைக் கண்டு கிருஷ்ணனுக்கு மரியாதை செலுத்துகின்றனர்.

-காட்சி மாற்றம்-

கிருஷ்ணனும் பலராமனும் ஒரு ஆலயத்தை அடைகின்றனர். அங்கே நாணறுந்த வில் ஒன்று காணப்படுகிறது.

கிருஷ்: அண்ணா! இந்த வில்லுக்கு நாணினை ஏற்றட்டுமா?

காவலன்: அடடே...கேட்டாயா? இந்தப் பொடிப்பயல் இந்த வில்லுக்கு நாணேற்றப் போகிறானாம்!

காவல-2: சும்மா கிட! சும்மா வில்லைத் தூக்கவே முடியாதிருக்கும்போது இதைத் தூக்குவதாவது நாணேற்றுவதாவது..!

கிருஷ்ணன் வில்லினை கரங்களில் ஏந்தி நாணேற்ற முயலும்போது வில் இரண்டாக உடைந்து விழுகிறது. இதனைப் பார்த்தவர்கள் பாராட்டுகின்றனர். வில் ஒடிந்தபோது எழுந்த பேரோசை பெரு முழக்கமாகப் பரவுகிறது.

-காட்சி மாற்றம்-

கம்சனின் அரண்மனை- வில்லினை உடைத்த போது எழுந்த பேரோசையினை கம்சனும் கேட்கிறான். ஆகாயமெங்கும் அந்த ஒலி எதிரொலிக்கிறது. கம்சனுக்கு முதன் முறையாகப் பயம் ஏற்படுகிறது.

கம்ச: அதென்ன பேரிரைச்சல் அக்குதரே?

அக்கு: என்னவென்று தெரியவில்லை மகாராஜா?

கம்ச: எனது வாழ்க்கையில் முதன் முதலில் திகிலை ஏற்படுத்தும் அந்தச் சப்தம்..!

அக்கு: திகிலா...? தங்களுக்காக மகாராஜா..?

கம்ச: இந்த அதிர்வு எதனால் ஏற்படுகிறது? அதிர்ச்சி தரும் இந்த எதிரொலியின் மர்மம் என்னவாக இருக்கும்....?

காவலர்கள்: வாழ்க மகாராஜா!

கம்ச: என்ன அது..!

காவல: ஒரு சிறுவன், யாகத்துக்கென வைத்திருந்த வில்லினை உடைத்து விட்டான் மகாராஜா!

கம்ச: என்ன ஒரு சிறுவனா?..என்னால் கூட நாணேற்ற முடியாத அந்த தனுசை ஒரு சிறுவன் உடைத்து விட்டானா? என்ன கதை அளக் கிறீர்கள்? யார் அந்தச் சிறுவன்..?

காவல: யானறியேன் மகாராஜா! மதுராபுரிக்கு அவன் ஓர் அந்நியன் போலத் தெரிகிறது.

கம்சன் அக்குதரை சந்தேகக் கண் கொண்டு பார்க்க, அவர் தலைகவிழ்கிறார்.

கம்ச: என்னைக் கொஞ்சம் தனியாக இருக்க விடுங்கள்..!

அக்கு: தங்கள் விருப்பப்படியே மகாராஜா!

-காட்சி மாற்றம்-

மதுராநகர்-விளையாட்டரங்கம் மக்கள் கூடியிருக்கின்றனர். வீரன் ஒருவன் பெரிய சேகண்டியில் ஒலி எழுப்புகிறான்.

வீரன்: மாண்புடைய மாமன்னர்! மதுராபுரியின் மகாராஜா! வீராதிவீரர் யாதவகுல தீரர் யாதவேந்திர பூபதி! கம்ச மகாராஜா பராக்!

ஏனையவீரர்கள்: பராக்! பராக்!!பராக்!!

முரசுகள் முழங்க கம்ச மன்னர் இரதத்தில் வந்து இறங்குகிறான்.

மக்கள்: வாழ்க மாமன்னர்! கம்ச மகாராஜா வாழ்க...! வாழ்க...!

- கம்சன் இரதத்திலிருந்து இறங்கி உரிய இருக்கையில் அமர்கிறான்.
- மக்கள் மன்னரை வாழ்த்தும் வாழ்த்தொலி தொடர்கிறது.
- முரசு முழங்க மல்யுத்த வீரர்கள் களத்துக்கு வருகின்றனர்.
- கம்சன் முன்வந்து வணக்கம் செலுத்துகின்றனர்.

மல்.வீரர்கள்: வணக்கம் மகாராஜா!

கம்ச: இந்த வருடப் போட்டியில் யார் மாவீரனாகப் போகிறவன்?

மல்.வீர: யார் வீரனாக வரவேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவனே வீரனாவான். தங்கள் கீழ்படிவுள்ள ஊழியர்களுக்கு தங்களின் ஆசி உண்டு என்பது எங்களுக்குத் தெரிந்ததே!

கம்ச: நன்றாக யோசித்து பதில் சொல்ல வேண்டும். இன்றையப் போட்டிகள் கடினமானவையாக இருக்கும்.

மா.மந்திரி: எல்லாம் ஆயத்தம் மகாராஜா!

கம்ச: யானைப் பாகனை எச்சரித்து விட்டீரா? அவன் தவறினால்..என்ன நடக்கும் என்பது தெரியுமா.....?

மா.மந்: ஆமாம் மகாராஜா! அந்த யானை மகாபயங்கரமானது. யமன் கூட அதனருகே வந்தாலும் அவனை நசித்துக் கொன்றுவிடும். கிருஷ்ணனோ சிறு பையன்தானே! அந்த மதம் கொண்ட யானைக்கு அந்தப் பொடிப் பையன் எம்மாத்திரம்?

கம்சன் நகைக்கிறான்.

-காட்சி மாற்றம்-

கம்ச: கிருஷ்ணன் ஏன் இன்னும் இங்கு வரவில்லை..?

சிறிதா: அவன் இதுவரை இங்கு வந்திருக்க வேண்டுமே...! இங்கு வராமல் புறக்கணித்துவிட்டான் என்று நான் கருதவில்லை..!

கம்ச: தேவகியின் மைந்தனுக்கு முதலில் முடிவு கட்டுகிறேன். பின்னர் நந்தகோபனைக் கவனிக்கிறேன். அவர்கள் இருவருடன் அக்குதர் இதுவரை இங்கு வந்திருக்க வேண்டுமே...!

- கிருஷ்ணனும் பலராமனும் அக்குதருடன் இரதத்தில் வந்திறங்குகின்றனர்.
- முரட்டு-மதம்பிடித்த யானை கிருஷ்ணனைக் கண்டதும் துதிக்கையினை உயர்த்தி மரியாதை செய்கிறது.
- கிருஷ்ணன் யானையின் அருகில் சென்று அதனை ஆசிர்வதிக்கிறான்.
- யானை முன்கால்களை கீழே தாழ்த்தி மரியாதை செய்கிறது.

•••

கம்ச: என்ன சொல்கிறீர் மாமந்திரி? அந்த மதம்பிடித்த யானை அவனை வணங்கி மரியாதை செய்ததா? நம்பமுடியாது..! நடக்கவே நடக்காது..!

-காட்சி மாற்றம்-

விளையாட்டரங்கம்-முரசறை முழங்குகிறது. கிருஷ்ணன், பலராமர் சகிதம் அக்குதர் அரங்கினுள் வருகின்றார்.

மா.மந்: சகோதரர்கள் இருவரும் அரங்கில் வந்துவிட்டார்கள் மகாராஜா! அடுத்து என்ன செய்யவேண்டும் பிரபு!

கம்ச: மல்யுத்தம் நடக்கட்டும்.

மாமந்: ஆகட்டும் மகாராஜா!

•••

மல்யுத்த வீரர்கள் கம்சனின் முன் வணங்கி நிற்க அக்குதருடன் கிருஷ்ணனும் பலராமனும் கம்சனை வணங்குகின்றனர்.

பலரா,அக்கு: வணக்கம் மகாராஜா!

கிருஷ்: வணக்கம் மாமா!

கம்ச: ஹி...ஹி...ஹி...வருக..வருக!

கிருஷ்: *(அக்குதரை நோக்கி)* நீங்கள் போங்கள் நான் அப்பாவுடன் இருக்கிறேன்.

அக்கு: சரி! அப்படியே ஆகட்டும்.

கிருஷ்: *(மல்யுத்த வீரனைப் பார்த்து)* பிரமாண்டமானவரே வாரும்!

மல்.வீர2: சனூர் என் பெயர்! பெரிய மலையினையே நசுக்கிப் பொடிப் பொடியாக்குவேன்.

மற்ற வீரன்: உன் விளையாட்டுகளை ஒரு புறம் வைத்து விட்டுவா..மரண நடனமாடலாம்!

பலரா: உன் ஆசை நிச்சயமாக நிறைவேற்றப் படும்! மரணம் தானே உன் விருப்பம்? கிருஷ்ணா அவர்களுடைய ஆசையை நிறைவேற்றி விடு...!

கிருஷ்ணனும் பலராமனும் பலமாக சிரிக்கின்றனர்.

•••

கிருஷ்: மல்யுத்தம் ஆரம்பமாகட்டும்!

- மல்யுத்தம் ஆரம்பிப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்படுகிறது.
- முரசறைவோன் ஒலி எழுப்புகிறான்.
- மல்யுத்தம் தொடங்க மக்கள் பதற்றமடைந்து பலவாறாகப் பேசிக் கொள்கிறார்கள்.

ஒருவர்: ஓ...அவன் சின்னஞ் சிறியவனாயிற்றே!

மற்றவர்: இது அநீதியானது.

- கிருஷ்ணன் ஒரு மல்யுத்த வீரனையும் பலராமன் மற்ற வீரனையும் அணுகுகின்றனர்.

நந்த: இது கொடுமை..! அநீதி...!

- அக்குதர் இக்காட்சியைக் கண்டு பதற்றமடைகிறார்.
- கம்சன் மகிழ்ச்சியடைகிறான்.
- கிருஷ்ணனும் பலராமனும் வீரர்களுடன் போரிடுகின்றனர்.

பார்வையாளர்: இது அநீதியான செயல்.

இரண்டாமவர்: இந்தச் சிறுவர்கள் இருவரும் பலே கெட்டிக்காரர்கள் தம்பி!

•••

- கம்சன் பெருமகிழ்ச்சியில் மாமந்திரியைப் பார்த்து சாடை செய்கிறான்.
- கிருஷ்ணன் அந்தப் பெரிய மல்யுத்த வீரனை அலாக்காகத் தூக்கி வீசுகிறான்.
- பலராமனும் தன்னுடன் போரிட்டவனை வீழ்த்துகிறான்.
- கிருஷ்ணனின் நண்பர்கள் மகிழ்ச்சிப் பெருக்கில் காணப்படுகின்றனர்.
- இருவரும் ஆறு மல்யுத்த வீரர்களைப் பந்தாடி வெல்கின்றனர்.
- கம்சனுக்கு இக்காட்சி கசப்பினையும் பயத்தையும் மாறி மாறித் தருகிறது.
- மக்கள் மகிழ்ச்சியில் ஆரவாரிக்கின்றனர்.
- "கிருஷ்ணன் வாழ்க!" "பலராமன் வாழ்க!" என்று ஆனந்தம் மேலிட மக்கள் ஆர்ப்பரிக்கின்றனர்.
- கம்சன் அமைதியற்று பதற்றமுடனும் திகைப்புடனும் காணப்படுகிறான்.
- கிருஷ்ணனும் பலராமனும் படியேறி கம்சனிடம் வருகின்றனர்.

கிருஷ்.பலரா: வணக்கம் மாமா!

கம்ச: வருக தேவகியின் மைந்தனே! உன்னைப் பார்க்க வேண்டும் என்று தான் துடியாய்த் துடிக்கிறேன். வா உன்னை நான் வாரி 'அணைக்க வேண்டும்.' அப்போதுதான் என் உள்ளம் உவகை கொள்ளும் வா...வா...!

கிருஷ்: மாமா உங்களை 'அணைக்க வேண்டும்' என்பதே எனது நெடுநாள் ஆசை மாமா?

- கம்சன் கிருஷ்ணனை நெருங்குகிறான். கிருஷ்ணனை அணைக்கமுயலும் போது அவன் மறைந்து விடுகிறான்.
- இவ்வாறு பல தடவைகள் நடை பெறுகின்றன.
- இதனால் வெகுண்ட கம்சன் தன் உடை வாளை உருவி கிருஷ்ணனைத் தாக்க முனையும் போது அவன் மாயமாக மறைந்துவிடுகிறான்.
- பல தடவைகள் முயன்றும் கிருஷ்ணனைத் தாக்க முடியவில்லை.
- வாள் கம்சனின் கையிலிருந்து மறைகிறது.
- கம்சன் ஓட முயற்சிக்கிறான். ஆனால் நின்ற இடத்திலேயே கால்கள் பதிகின்றன.
- கம்சன் அரியணை மீது தாவி ஏற முயலுகிறான்.
- கம்சன் திரும்பிய பக்கமெல்லாம் கிருஷ்ணனும் பலராமனும் தோன்றுகின்றனர்.
- கம்சன் தடுமாறித் தத்தளிப்பதைப் பார்த்த மக்கள் கம்சனைக் கேலி செய்கின்றனர்.
- ஒரு முழு முட்டாளைப் போல் கம்சன் தென்படுகிறான்.
- கிருஷ்ணன் கம்சனைத் தூக்கி நிலத்தில் வீசுகிறான். பயங்கர ஒலி எழுகிறது.
- கிருஷ்ணன் விஸ்வரூபமெடுத்து மகா விஷ்ணுவாகத் தோன்றி கம்சனை வதம் செய்கிறான்.

***இன்று இடம்பெற்ற முக்கிய காட்சிகளுடன் காட்சி முடிகிறது.***

-தொடர்ந்து வரும்-

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.



அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி: 436331


## இங்கேதான் மொனாலிசா

அழகான புன்னகை என்றவுடன் மொனாலிசாவின் புன்னகைதான் மனதில் எழும்.

அந்தப் புன்னகை சிந்தும் மொனாலிசா ஓவியம் அருகில் இருக்கிறது. சிறந்த சிற்பங்களும் படத்தில் இருக்கின்றன.

படத்தில் பார்க்கும்போதே வியக்க வைக்கும் இக் கலைப்பொருட்கள் பாரிஸ் மாநகரின் மத்தியில் அமைந்துள்ள மொசி டு லூவர் மாளிகையில் உள்ளன. அந்த மாளிகையும் அருகே படத்தில் உண்டு. இந்த நூதனசாலை அனைவரையும் கவர்ந்திழுக்கிறது.





வாரமலர் தினமுரசு

## ச ஞ் ச ல ம்

சமீபத்தில் பாரிஸ் மாநகரில் நடைபெற்ற மங்கோலிய நாட்டு கலைக்காட்சியில் வைக்கப்பட்டிருந்த கௌதம புத்தர் சிலையே படத்தில் இருக்கிறது.

இந்த சிற்பச் சிலை 17-18ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று சொல்கிறார்கள்.

சாந்தமே உருவான கௌதம புத்தரை இவ்வாறு சிற்பமாகச் சித்தரித்திருப்பது பலரை மன சஞ்சலத்திற்கு உள்ளாக்கியுள்ளது.


இதற்குக் காரணம் தெரிவிக்க எவரும் முன்வராதது ஏன் என்று தெரியவில்லை.



படங்களும் - தகவலும் பிரான்சில் இருந்து க.அன்பழகன்.

## அதிசயப் படம்

ரோம் நகரிலிருந்து பிழைப்பு வாசித்துக் கொண்டிருந்த [illegible] பற்றிக் கதைகள் அறிந்துள்ளோம். அருகே காட்டப்படும் [illegible]



[illegible]

## வாட்டசாட்டமான மகிழ்ச்சி!



## கள்ளங்கபடமற்ற வயது

'கள்ளங்கபடமற்ற வயது' என்றொரு திரைப்படம் அண்மையில் திரைகளுக்கு வந்திருக்கிறது. இதில் கதாநாயகியாகத் தோன்றுபவர் மிக்கேல் ஃபீஃபெர் என்ற நடிகை. இப்படத்தில் திறம்பட நடித்தமைக்காக இவருக்கு 'ஒஸ்கார்' விருது கிடைக்கவிருக்கிறது. பாரமான உடைகளை அணிந்து நடிக்க விருப்பம் கிடையாது என்கிறார் மிக்கேல்.

